BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

ORU PAPER

Paper - 04 Issue - 64 02 Friday February 2007

விற்பனைக்கல்ல

- நீங்கள் வீடு வாங்க, வியாபாரம் வாங்க கடன் தேவையா?
- வியாபார, ஆயுள்க் காப்புறுதிகள் செய்ய வேண்டுமா?
- உங்களுக்கு தேவையான **Tax Advice,** வியாபார ஆலோசனைகள் மற்றும் அனைத்துவகை **Accountancy Services**களுக்கும் நாட வேண்டிய இடம்...

**Forward Consultants**
1, Lancelot Road, Wembley HA0 2AJ Tel: 0208 900 9052



**ஒண்டா...**
**ரெண்டா...**
**ஆசைகள்?**

## OFF LICENCE &ON LICENCE

- New Personal Licence Holder (NC-PLH) & Premises Supervisor (DPS) course
- உங்களுக்குரிய Personal Licence எடுக்க வேண்டிய சகல உதவிகள்
- புதிதாக கடை எடுப்பவருக்கு வேண்டிய Licence, வேறும் வழி முறைகள். செய்து தரப்படும்
- Running & Established Shops for sale/to buy anywhere in the UK
- Food-Hygiene, Health & Security, Shop owns

www.ltta.co.uk

LTTA LTD

தொடர்புகளுக்கு: Mr.Ravi
Head office, System House, 19 Pershore Road south Birmingham B30 3EE
Tel: 07782 223 005

## RAJA& CO SOLICITORS

10 Upper Tooting Road, Tooting Bec
London SW17 7PG
Tel: 020 8772 4900 Fax: 020 8682 9425

**We provide following Legal Services:**

Conveyancing:-
Buying and Selling
Houses Flats & Business
Criminal Cases
Civil Litigation
Family
Immigration

**We hold Legal Aid Franchise in Immigration & Crime**

## ABBEY TRAINING. NET

- OFF Licence/ Restaurant Personal Licence
- NCPLH CERTIFICATE COURSE
- Supervisor Course For OFF Licence and Restaurants (DPS)
- off licence / restaurant premises licence
- LIFE IN THE UK
- Course

**38 London Road, Tooting SW17 9HP**
தொடர்புகொள்ள: Thavanessan
020 8640 9900 / 07956 913 164 / 07960 665 575

## SIVA BUSINESS TRAINING

எங்களிடம் வாருங்கள்
வென்று தருகின்றோம்

Citizenship Course (Life in UK)

**Personal Licence**
**(For OFF Licence and On Licence)**
**National Certificate for Personal Licence Holders (NCPLH)**
**New Supervisor Course (NDDPS)**

- New Premises Licence
- Transfer of Licence
- Change of DPS
- Night Cafe Licence
- Award in under age sales prevention

**Siva 020 8683 6544, 079 0480 6371**

## E J Transport Ltd

With / Without Driver

Wales, Lourdes Church Trip
Europe & Euro Disney Trip
Airport Transport
For all other requirements

Contacts
020 8470 8588
07980 602 548
07817 195 237

## To Let

## Prime Location

Like Solicitors, Accountants, Insurance+ Mortgage brokers, Claim companies+ IT collegeetc

Contact: 07979 977 008

## LONDON ACCIDENT CLAIMS LIMITED

70 Windmill Road, Croydon, CR0 2XP

**Had an accident - Not your fault**

Driver / Passenger - within last 3 years

3 வருட காலத்துக்குள் சந்தித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட...

NO WIN - NO FEE

Tel:020 8665 7667 Fax:020 8684 7177
Mob: 07950 953 514 Call Free: 0800 032 6798

## Landlords Insurance

COVERSURE

**Property Insurance Specialist for**

- Let to Council/Housing Asso.
- HMO Properties
- Let to Asylum Seekers
- Vacant Properties

Exclusive 15% discount for "Accredited" Landlord

0870 4585 680
Contact Rajan G Amin or Mika Navarantnarajah

# ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

# ANGELS

+ Mortgages + Loans
+ Letting Management
+ Insurance + Building Insurance

## Properties and Financial Services Ltd.

- வியாபார வங்கிக்கடன்
- விற்பனைக்கு 0.5% மட்டுமே அறவிடப்படும்
- வாடகை வீடுகள்
- காப்புறுதி
- மோட்கேஜ் (Mortgages)

**100% Mortgage Specialist**

- 100% வீட்டு வங்கிக்கடன்கள் 5 நிமிடத்தில் ஏற்பாடு செய்யமுடியும்
- வருமான அத்தாட்சி அவசியமில்லை
- முற்பணம் (Deposit) அவசியமில்லை
- ஏற்கனவே உள்ள கடனுக்கு வட்டியை குறைக்க குறைந்த வட்டிக்கு கடனை மாற்றமுடியும்
- முத்திரை தீர்வு அவசியமில்லை
- உங்களின் நிதி சம்பந்தமான அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தகுந்த தீர்வு தரப்படும்



74 Lee High Road
Lewisham SE13 5PT
Tel: 020 8852 1683
Fax: 020 8852 1621
email: info@angelsproperties.co.uk
web: www.angelsproperties.co.uk

# POS TECH

POS TECH LTD
EPOS SOLUTION

Limited Offers
Touch Screen Till
**£1600**
IBM PC Base Till
**£900**

NISA OCS LINK / C CARD LINK
PAY POINT / PAYZONE LINKS



- Touch Screen
- Stock Control
- Promotions & Offers
- Shelf Labels
- Special 'Z' Report
- Account Customers
- Access from Home
- Free 50,000 Item List
- Staff Security
- Link with SAGE Line 50

Staff wanted - Ladies with Computer Knowledge

**020 8873 1710**

Retails Tills
Restaurant Kit News Round

Free Support | Free Barcode Printer | Interest Free Payments Options | Free Laser Printer

# அழகும் ஆரோக்கியமும்

**இலவச ஆலோசனை:**

- ▲ **உடல் நோய் சம்பந்தமான பிரச்சினைகள்**
  (மூட்டுவலி, வீக்கம், சலரோகம், கொலஸ்ரோல், அல்சைமர் நோய், கண் பிரச்சினைகள், ஆஸ்மா, அலர்ஜி மற்றும் ...இதர)
- ▲ **தோல், முகம் சம்பந்தமான பிரச்சினைகள்**
  (முகப்பருக்கள், கரும்புள்ளிகள், வரண்ட தோல், Sunburn ...இதர)
- ▲ **தலைமுடி சம்புந்தமான பிரச்சினைகள்**
  (வரண்ட முடி, வெடிப்பு, முடி உதிர்தல் ...இதர)

**Personal Consulting available. In Home Service available**

Contact: *Kala & Siva* 07852 212 462 / 07809 571 643
*Jayanthi* 07868 755 616

# CCR INSURANCE BROKERS LTD

The UK'S Premier Sri Lankan Insurance Broker

## Household *Insurance*

Own a Property that's rented to others

Whether it's rented by Professionals, Student or DHSS

Owner - Occupied Building & Contents

## Motor *Insurance*

Car, Van & Minibus
Free Quote
Immediate Cover
Provisional & International Licence Holders
Lady Driver Discount
2nd Car Special Discount

**NOW WE DO SELL RELIABLE USED CARS FOR VERY REASONABLE PRICE**



## Commerical *Insurance*

Shops / Offices
Restaurants / Cafes
Clubs / Liability
Buildings
Motor Trade
Commercial Vehicle
Manufacturing
Distributors
Motor Fleet & More

## Motor Insurance

All countries
No Claim Bonus Accepted

*Superb Cover at lower cost*

**C.C Raveendran**
020 8904 9686
0795 634 5004
96 Sudbury Avenue, Wembley, Middx HA0 3BG

# பூமழை

## ஒரு பேப்பர் பணி நீடூழி வாழ்க

இலவசப் பேப்பர்கள் இங்கு அதிகம் வருகின்றன. அவற்றில் ஓசிப் பேப்பரான ஒரு பேப்பர் தான் ஆகத் தரம் வாய்ந்த தென்று நான் சொல் வேன். மீனைப் பொரித்து விட்டு மற்றைய பேப்பரில் வைத்துப் பாருங்கள். எண்ணெயை உறிஞ்சுவ தில்லை. ஒரு பேப்பர் ஒரு துளி எண்ணெயை உறிஞ்சி எடுத்துவிடும். மற்றது கனக்க ஒற்றைகள் இருப்பதால் 2கிழமைக்கும் போதுமாக இருக்கிறது. உண்மையில் ஒரு பேப்பர் ன் பணி மெச்சத் தக்கது. இன்னு மொன்று. போன சனிக்கிழமை ஐயராக இருக்கிற எனது நண்பர் சொன்னார் 'இதிலை தானே மாவரிக்கிறனாங்கள்' இண்டைக்கு வீட்டுக்கு பெயின்ற் அடிக்கப்போறன் நிலத்திலை விரிப்பதற்காககொஞ்சம் கூடக்கொண்டுபோறன் எண்டார். அப்ப தான் ஒரு பேப்பர் எவ்வளவு விதமாக உதவுது எண்டு வியந்து போனன். உண்மையில் ஒரு பேப்பர் ன் பணியை நாங்கள் போற்ற வேணும்.

— பொ. கமலநாதன்

## பாராட்டுக்கள்

மறைந்த எழுத்தாளர் வரதரை நினைவிலிருத்தி அவர் எழுதிய 'கற்பு' என்ற சிறுகதையைப் பிரசுரித் தமைக்கு நன்றி.

— சங்கீதா

## வாசகர் கடிதங்கள்

மாற்றுக் கருத்துகளுக்கு இடம் கொடுக்கின்ற உங்கள் எண்ணம் வர வேற்கத்தக்கதே. ஆனால் சில வாசகர்கள் தங்கள் தனிப்பட்ட குரோ தங்களைத் தீர்த்துக் கொள்வ தற்காகவும், தங்கள் கருத்துக்கள் பத்திரிகையில் இடம்பெற வெண்டும் என்பதற்காகவும் சில கருத்துக்களை எழுதுவது போலப் படுகிறது. எனவே வாசகர் கடிதம் பகுதியில் தெரிவு செய்து தகுதியான கருத்துக்களை மட்டும் பிரசுரிக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

— சிவராம்

## றேடியோ!

உங்கடை றேடியோ பற்றின விளம் பரங்களே ஒரு ரைப்பா இருக்குது. வந்து என்ன பாடு படுத்தப் போறி யளோ தெரியாது. சரி வருவியள் தானே. பாத்தாப் போச்சுது

—நகுலன்

## பெயர் மாற்றம்

என்ன பேப்பரின் பேரையே மாற்றி விட்டீர்களா? சென்ற இதழில் ஒரு ரேடியோ என போடப்பட்டிருந் தது.

—அமரன்

## மாட்டுவண்டில்

கடந்த இதழில் மாட்டுவண்டிச் சவாரியும் அதில் தமிழ்மக்களின் பாரம்பரியமும் கட்டுரை மிகவும் சிறப்பாக இருந்தது. எமது தாயகத்தை நினைவூட்டிவரும் கட்டுரைகள் மிகவும் வரவேற்கத்தக்கது.

— சுதன்

## குரங்கு

நாயின் படத்தைப் போட்டுவிட்டு குரைக்க கனைக்க எண்டு எழுதி னீங்கள். சரி அப்ப குரங்கின்ற படத் தைப் போட்டதற்கு என்ன அர்த்தம். விளங்குது விளங்குது குரங்கு கையில் பூமாலை என்ற பழமொழி இப்பத்தான் நினைவுக்கு வருகின்றது.

— குகன்

## பெயர் மாற்றம்

என்ன பேப்பரின் பேரையே மாற்றி விட்டீர்களா? சென்ற இதழில் ஒரு ரேடியோ என போடப்பட்டி ருந்தது.

— அமரன்

## Peace Talk

*Dear Editor,*

Your editorial of Issue 62, of 5th of January, 2007, under the caption 'Genocide for Peace' is a brilliant piece of good journalism. It gives a true picture of what is happening in Sri Lanka. His definition of 'peace talk' is the gem and should be the highlighted note of every politician interested in Tamil's struggle and the Sri Lankan government's game, backed covertly by USA, EU, Japan, China and last not the least India.

Our younger generation, here must develop the habit of reading of 'Oru Paper' and also must develop the habit of showing these type of information to their British friends, class- mates and neighbours.

Cheers Oru Paper!

*- Mahadevan, New Malden.*

## புதிய எண்ணங்கள்

கவிதைப் பக்கத்தில் புதிதாக இடம்பிடித்திருக்கும் திரைக்கவி ஈழக்கவி என்பன நன்றாக உள்ளன. அத்துடன் பழைய பாடல்களில் நகைச் சுவையும் ரசிக்கக் கூடிய வகையில் உள்ளது. தொடரட்டும் உங்கள் புதிய புதிய எண்ணங்கள்.

— பிரியா

## மந்திரங்கள்

மந்திரங்களைப் பற்றி மிகவும் காட்டமாகவும் அதன் அர்த்தங்களை வேணுமென்றே திரிபுபடுத்தி எழுதி யது போல் தெரிகின்றது. மந்திரங்கள் தேவர்கள் மற்றும் தெய்வங்களையும் வழிபட்டு ஆசி பெறுவதற்காக உள்ளவை. அதைப் பற்றி நன்றாக ஆராய்ந்துவிட்டு எழுதினால் நன்றாக இருக்கும். மற்றவர்களின் மனம் பண்பட எழுதுவதைத் தயவு செய்து தவிர்க்கவும்.

— சர்மா

## திருமண மண்டபம் கட்டுங்கோ

நீங்கள் ஒரு ரேடியோவை உரு வாகிய கதையை பிரசுரித்திருந்தீர் கள். வானொலியைத் தொடங்குவது கஷ்டம் எண்டு தெரிந்த பிறகும் ஏன் அதைக் கட்டிப்பிடிச்சுக் கொண்டு அழுகிறீங்கள். பேசாமல் விட்டிட்டு நல்ல திருமண மண்டபம் ஒண்டு கட்டுங்கோ நிறைய காசுழைக்கலாம்.

— தர்மசிறி

## புடிச்சுருக்கு

உங்கள் பத்திரிகையில் வரும் அரசியல் கட்டுரைகள் யாவும் நன்றாக உள்ளது. எதிர்காலத் திட்டத்தை தெளிவுபடுத்துவதாகவும் உள்ளது. புலம் பெயர்ந்துவாழ்ந்து தாயக தேசத்தின் நினைப்பிலிருக்கும் என்னைப் போன்றோருக்கு ஒரு பேப்பர் நன்றாகப் பிடித்துள்ளது.

— பொன்னுத்துரை

## நீதி செத்துவிட்டதா?

பிள்ளையையும் கிள்ளித் தொட்டி லையும் ஆட்டும் வேலையையே சர்வ தேச சமூகம் செய்து கொண்டி ருக்கிறது என்பதற்கு காலியில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடு களின் மாநாடே சான்று. இலங்கை அரசைக் கண்டிப்பதைப் போலக் கண்டித்துவிட்டு மறுபக்கத்தால் யுத்தத்தைக்கொண்டுநடத்துவதற்குக் காசையும் அள்ளிக் கொடுத்திருக்கிற ார்கள்.

— சிந்துஜா

## அர்த்தம் நிறைந்த கட்டுரை

தென்னிலங்கைக் குண்டு வெடிப் புகளை மையப்படுத்தி சேயோன் அவர்கள் எழுதியிருந்த சற்று மாறுதலுக்காக பகுதி பல அர்த்த புஸ்டியான பல விடயங்களை உள்ளட க்கியிருந்தது. கட்டுரையாளருக்குப் பாராட்டுக்கள்.

— விவேகன்

சென்ற ஒரு பேப்பர் ரின் ஒரு பேட்டிப் பகுதியில் கலைஞரின் பெயர் சே.கதிர்ச்செல்வன் என்பதற்குப் பதிலாக கலைச்செல்வன் என்று இடம்பெற்றுவிட்டது.

— ஆ—ர்

# பழைய பாடல்களில் நையாண்டி

சோழநாட்டில் கி.பி 15ம் நூற்றாண்டில் இரட்டைப் புலவர்கள் என அழைக்கப்படும் இரு புலவர்கள் வாழ்ந்து வாழ்ந்தனர். ஒருவர் முடவர். மற்றையவர் குருடர். முடவரை குருடர் தன் முதுகிலே சுமந்து வர இருவரும் ஒன்றாகவே ஒவ்வொரு ஊராகச் சென்று பாடிப் பரிசில்கள் பெறுவது வழக்கம். ஒருமுறை இவர்களுக்கு பாண்டிய மன்னர் ஒருவர் பரிசில்கள் கொடுத்தபோது அதை அமைச்சர் தடுத்து நிறுத்தி விட்டார். அதனால் அந்த அமைச்சர் மீது கோபம் கொண்ட இரட்டையர் அந்த அமைச்சரை நையாண்டி செய்து பாடல் ஒன்றைப் பாடினர்.

'புராதனமான தமிழ்ப் புலவீர் இந்தப் புன்குரங்கு
மராமரம் விட்டிங்கு வந்ததென்னவோ வகை கேட்டிலையோ
ராதலம் வென்ற தமிழ் மாறனையும் தன் தம்பியையும்
இராகவன் என்றும் இலக்குவன் என்றும் இருந்ததுவே'

பழைமையான தமிழில் பாண்டித்தியம் பெற்ற புலவீர்களே! தானம் செய்வதைத் தடுக்கும் இந்தக் குரங்கு அடர்ந்த மரத்தை விட்டு இறங்கி வந்ததற்குக் காரணம் என்னவென்று கேட்டீர்களா? உலகம் முழுவதையும் வென்ற பாண்டியமன்னன் மாறனையும், அவனது தம்பியையும், இராகவன் என்றும் இலக்குவன் என்றும் நம்பி அவர்களுக்குப் பணிவிடை செய்வதற்காக வந்துள்ளது என அமைச்சரை அனுமானுக்கு ஒப்பிட்டுப் பாடுகிறார்கள். (இன்னும் வரும்)

- தீவான்

# குழப்பாதீர்கள்

சில சமயங்களில் மெச்சத்தக்கதாகவும் பல விடயங்களை அறிந்தவர் போலவும் எழுதும் சேயோன் ஆனால் சமயம் என்று வரும்போது அவ்வளவு அறிவு அல்லது தெளிவு அதில் அவருக்கு இருப்பதாகத் தெரியவில்லை. சரி சமய அறிவுதான் இல்லை யென்றாலும் கொஞ்சம் பொது அறிவாவது இருக்குமென்றால் அதுவும் இல்லைப் போல் தெரிகிறது.


கடந்த இதழில் சேயொன் எழுதிய அடியைப் போல... என்ற கட்டுரையில் ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தைக் காட்டு என்றதன் அர்த்தம் விளங்கவில்லை என்றும் மேலும் அடித்து அடித்து கைஓய்ந்து பின்னர் அடிக்காமல் விடட்டும் என்பதாகவும் அர்த்தம்பட எழுதியிருந்தார்.

எதையும் ஆழமாக ஆராய்ந்து கருத்து எழுதுவதே சிறப்பாகும். காலம் காலமாக இப்படியான பல வாசககங்கள் மனிதவாழ்க்கையை சிறப்பாக அமைப்பதற்காக கூறப்பட்டுவருகின்றது. அந்த வகையில் யேசு நாதரின் ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தைக்காட்டு வாக்கியமும் திருவள்ளுவரின் இன்னா செய்யாரை உறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல் எனும் குறளும் மக்களை நல்வழிப்படுத்துவதற்காகச் சொல்லப்பட்டவை. இவை புரியாமல் இருப்பதும் அல்லது புரியாததுபோல் விழிப்பதும் சேயோன் போன்ற பொறுப்புள்ளவர்களால் எப்படி முடிகின்றது.

இப்படிப்பட்டவர்கள் தாங்கள் தெளிவாக இருந்து கொண்டு மக்களைக் குழப்புகிறார்களா? இல்லை தாங்கள் தெளிவில்லாதவர்கள் என்பதை மக்களுக்குக் காட்டுகிறார்களா?

— மாயோன்

Strong. Safe. Reliable.
MCG
Open 7 Days
MONEY IN MINUTES TO SRI LANKA




இலங்கைக்கான பணமாற்றுச் சேவை
நம்பிக்கை நாணயமிக்க மிகத் துரிதமான சேவை
குறிப்பிட்ட அதே நாளில் பணத்தை அங்கு பெற்றுக்கொள்ளவோ அன்றி அங்குள்ள உங்களது எந்த வங்கிக் கணக்கிலும் வைப்பு செய்ய கூடியதான வசதிகள்.

HSBC · COMMERCIAL BANK · HNB · PEOPLE'S BANK · SEYLAN · SampathBank · BOC

Head Office : 125 - 127 Bramley Road, Oakwood, London N14 4UT
Transfer Hotline
020 8886 4488
www.cecfastcash.com

PAY AT
BARCLAYS
நீங்கள் எங்கிருந்தாலும் உங்கள் பணத்தை பாதுகாப்புடனும் விரைவுடனும் அனுப்ப அருகில் உள்ள BARCLAYS இல் பணத்தை வைப்புச் செய்த பின் எம்மை அழையுங்கள்

| | | |
|---|---|---|
| A/C NAME | : | C.E.C.LTD |
| A/C NO | : | 70713945 |
| SORT CODE | : | 20-36-47 |
| BRANCH | : | HANOVER SQ. |

ஒரு பேப்பர்
ORU PAPER

FRIDAY, FEBRUARY 02, 2007, ISSUE 64

## நம்பிக்கை இழந்து விட்டோம்!

சிறிலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அரச பயங்கரவாத நடவடிக்கைளை சர்வதேச சமூகம் தட்டிக் கேட்கும், அதன் மூலம் நீதியான தீர்வு ஒன்று சாத்தியமாகலாம் என்ற நம்பிக்கை ஈழத் தமிழர்களிடம் இருந்து வந்துள்ளது. ஆனால் காலியில் நடந்து முடிந்த இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டின் பெறுபேறுகள், அந்த நம்பிக்கையை பொய்யாக்கி விட்டது. இனவழிப்பு யுத்தம் ஒன்றை முன்னெடுத்து மனித அவலங்களையும், அப்பட்டமான மனிதவுரிமை மீறல்களையும் செய்து வரும் சிறிலங்கா அரசுக்கு இந்நாடுகளின் அரசாங்கங்கள் 4.5 பில்லியன் டொலர் உதவி வழங்குவதற்கு முன்வந்துள்ளன. சமாதான வழிமுறையை தொடரவேண்டும் என்ற நிபந்தனையுடன் இவ்வாக்குறுதி வழங்கப்பட்டிருந்தாலும், இது சிறிலங்கா அரசினை தட்டிக் கொடுக்கும் நடவடிக்கையாகவே கருதப்பட வேண்டும்.

சம்பந்தப்பட்ட நாடுகள் சிறிலங்கா அரசின் செயற்பாடுகளையிட்டு அலட்டிக் கொள்ளாமையும், இவ்விடயத்தில் மென்மையான போக்கினைக் காட்டுவதும், அவை மனிதவுரிமை விடயத்தில் எவ்வித அக்கறையும் கொண்டிருக்கவில்லை என்பதையே சுட்டிக் காட்டுகிறது. மனிதவுரிமை மீறல் விவகாரத்தை இம்மாநாட்டின் கவனத்துக்கு கொண்டுவர சர்வதேச மனிதவுரிமை அமைப்புக்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் பயனளிக்கவில்லை. இம்மாநாட்டில் உரையாற்றிய அமெரிக்க நாட்டு தூதுவர் ரொபர்ட ஓ பிளேக், தனது உரையில் விடுலைப் புலிகள் இயக்கத்தை கண்டித்தும், சிறிலங்கா அரசுக்கு தனது ஆதரவைத் தெரிவித்தும் கருத்து வழங்கினாரே தவிர, மனிதவுரிமை விடயத்தை கவனத்தில் கொள்ளவில்லை.

சர்வதேச சமூகத்தின் மீதான நம்பிக்கை, அதன் நீதியான அணுகுமுறை, பக்கச் சார்பின்மை என்ற தளத்திலேயே கட்டியெழுப்பப்படுகிறது. ஐந்து வருடங்களுக்கு முன்னர் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் கூட இந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே நீண்டகாலத்துக்கு முறிவடையாமல் இருந்து வந்தது. மீள இந்த நம்பிக்கை வளர்வதற்கு அவர்களது அணுகுமுறையில் மாற்றம் ஏற்பட வேண்டும். அதுவரை அவர்களது சமாதான உச்சாடனங்கள் எந்தப் பலனையும் தரப்போவதில்லை.

அந்த வகையில் நோர்வேயின் சமாதான முயற்சிகள், யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் செய்பாடுகள் அதன் அறிக்கைள் என்பன வெறுமனே ஊடகங்களுக் கான செய்திகளாகவே இருக்குமே தவிர உருப்படியாக எதனையும் சாதிக்கப் போவதில்லை. நாமும் தனித்து சர்வதேச சமூகத்தின் அனுதாபத்தை பெறுவதற்காக நடாத்தும் பரப்புரைகள், போராட்டங்கள் போன்றவற்றுக்கு அப்பால் சர்வதேச அரங்கில் தமிழர் பலத்தை அதிகரிக்கச் செய்யும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*கடந்த பேப்பரில் நாங்கள் குறிப்பிட்டிருந்த தொழில்நுட்பக் காரணங்களால் ஐரோப்பிய பதிப்பில் சில ஆக்கங்கள் பிரசுரிக்க முடியாமல் போய்விட்டது இந்த தவறுக்கு முதலிலை வருத் தத்தை தெரிவித்துக் கொண்டு தொடருகிறோம்?*

*ஐரோப்பாவில எழுத்துத்துறையில் ஆர்வமுள்ள வர்கள் பலர் இருந்தும் அவர்களது ஆக்கங்கள் வெளிவருவது குறைவாக உள்ளதாக குற்றச் சாட்டு உள்ளது. இதனை நிவர்த்தி செய்ய* **ஒரு பேப்பர்** *உங்களுக்கு களம் அமைத்து தருகிறது. ஆகவே தயக்கமின்றி உங்கள் ஆக்கங்களை எங்களுக்கு அனுப்பி வையுங்கள். தரமானவாயின் பிரசுரிப்போம். இதில் நாங்கள் பாகுபாடு பார்ப்பதுமில்லை.. நிட்சயமாக சிபாரிசுகளை ஏற்றுக் கொள்வதுமில்லை... அதுபோன்றே எமது கட்டுரையாளர்களினதும் பத்தி எழுத்தாளர்களினது கருத்துக்களுடன் உங்களால் உடன்பட முடியாது இருப்பின் அல்லது எதிர்க்கருத்துக்களை தெரிவிக்க விரும்பின் அவற்றையும் அனுப்பி வையுங்கள். நாங்கள் மாற்றுக்கருத்தாளர்களுக்கு கூடாரம் அமைத்து வைத்துள்ளோம் என்பதல்ல .. உங்கள் கருத்துக்களுக்கு உரிய மதிப்பளிப்போம் என்பதை உறுதிப்படுத்துகிறோம்.*

*முன்னர் ரீன்ஸ் பேப்பரில் பல முரண்பாடுகளை தோற்றுவித்த விசயங்களை எழுதின ரெபிக்கா மீளவும் எழுதவிருப்பதாக கூறியிருக்கிறா பார்ப்போம் .. உங்கட வீடுகளில் இருக்கிற ரீன்சுகளையும் எழுதச் சொல்லுங்கோ ..*

*கடந்த இதழின் இணையப் பதிப்பை பார்வையிட்டிருப்பீர்கள். அதனை பார்வையிட்டவர்களின் புள்ளி விபரத்தை பார்க்க மெய்சிலிர்க்கிறது. அனைத்துக் கண்டங்களிலு மிருந்தும் பார்வையிட வருகிறார்கள் என்பது மகிழ்ச்சியே. இத்தனை அழுத்தத்தையும் எமது தளம் தாங்குமோ தெரியவில்லை. வெறுமனே வாசிப்பதோடு நின்று விடாதீர்கள் உங்கள் கருத்துக்களையும் தெரியப்படுத்துங்கள்!*

*ஐரோப்பாவின் சில முக்கிய நகரங்களுக்கு* **ஒரு பேப்பர்** *ரை துரிதமாக அனுப்பி வைப்பதற் கான வழிவகை தெரியாமல் அல்லாடிக் கொண்டி ருக்கிறோம். யாராவது நல்ல ஐடியாக்கள் வைத்தி ருந்தால் எங்களுக்கும் சொல்லித் தாருங்கோ?*

*சிறுகதைகளை ஏன் நாங்கள் பிரசுரிக்கிறேல்லை எண்டு கேட்டு சிலர் தொடர்ந்து நச்சரிக்கிறார்கள். ஒரு பதில்தான் வைத்திருக்கிறோம்.. சிறுகதை நிச்சயமாக சிறுசாத்தான் இருக்கோணும்..* **ஒரு பேப்பர்** *ரின் ஒருபக்கத்துக்குள்ள அடங்கோணும்...அவ்வளவுதான்.*

*நாங்கள் அறுவைப் பக்கத்திலை நகைச்சுவைக் காக சில விசயங்களை எழுதினா நீங்கள் அதை சிரம் மேற்கொள்வதாக சிலபேர் குறைப்படு கினம்.. கள்ளக் கொப்பில படத்தை பாருங்கோ எண்டா நீங்களும் அப்பிடியே செய்யிறதா வீடியோக் கடைக்காரர் முறைக்கினம்.*

*சொல்ல மறந்திட்டம் கவனிச்சியளோ தெரியாது. கடந்த பேப்பரிலை பேரை மாறி ஒரு ரேடியோ எண்டு போட்டிட்டம். ரேடியோ விசயமா இரவு பகலாக உழைத்ததிலை பேரையும் பிழையாப் போட்டிட்டம்... மற்றப்படி மாறாட்டம் ஒண்டும் இல்லை..*

*காதலர் தினம் வருகுது நீங்கள் காதலியுங்கோ எண்டு எழுதேலாதுதானே.. இதுகளை நாங்கள் சொல்லித்தான் நீங்கள் செய்வியள் எண்டும் இல்லை .. பூக்கள், அல்லது சொக்கலேட் எங்களுக்கு அனுப்பிறது எண்டால் 6ம் பக்கத்தில் தான் முகவரி இருக்குது.*

*மீண்டும் சந்திப்போம்.*

**ஒரு பேப்பர்** *காரன்கள்+காரிகள்*

EDITORIAL

# More Money More War

In a recent meeting, a Tamil political scientist uttered a sentence that deserves attention: "every new Tamil generation hates the Sri Lankan state more than the previous one."

Of all that has been said about the fourth Eelam War, these are perhaps the most important words.

The main product of this war is hatred. The pictures of death and destruction in the Tamil Northeast enter every Tamil home from Madras to Montreal, from Colombo to London and Berlin. Not for an hour, not for a day, but for successive days since January 2006 - day after day, hour after hour. The mangled bodies of babies, skinny, emaciated looking women weeping over the ruins of their homes, President Rajapakse blabbering about war against terrorism while the screen shows a heap of bodies.

The South ignores these sights, indeed they were scarcely shown on their TV. Of course, they could see them on the internet, but the people of the South are much too busy with the rising cost of living and celebrating their military's victories in the Northeast. Feelings of empathy for non-Tamils have been blunted in the South a long time ago by reinvented historical enmities and newly found insecurities.

But it is a terrible mistake of the international community to ignore the results of this war. For the international community taking notice of this hatred is far more important than their priority of stationing of a few white aid workers in Northeast. The destructive results of this fourth Eelam war may still be bothering generations of Sinhalese and Tamils.

In order for the significance of the above said political scientist's words to become clear, they have to be viewed in a historical context.

The GOSL's Sinhalese-Buddhist Only movement has planted its idea of subjugating the Tamils in their own homeland long time ago. The Tamils have rejected and have been resisting this enterprise. Meanwhile, the Sinhalese military and illegal colonisation settlements have taken roots and have become a strong militia rooted in the Northeast. Thus the power of the Sinhalese-Buddhist Only movement against the rejection and resistance has grown. This struggle has been going on for 45 years, becoming more violent from generation to generation. The current fourth Eelam war is more violent than the previous ones.

On 29th of January 2007 GOSL's Investment Promotions Minister Sarath Amunugama said that international community has pledged 4.5 billion US Dollars during the final day of the two-day aid review meeting in the southern town of Galle.

"International donors expressed satisfaction at our economic track record and we have got commitments up to 4.5 billion dollars this year," he told reporters.

> This is the first time we are seeing the real hard nosed face of the international community and its hypocrisy.

This means the international community is absolutely behind the Sri Lankan Government's bloody enterprise in the Tamil Northeast. This is international community's way of saying: meet the Tamil resistance with more war.

The GOSL soon will add: There is no solution to the Tamils. This situation will last forever because Tamils are not democratic like us in the South. There is nothing to be done about it but to fight the war after war after war.

We, Tamils have seen many governments in Colombo and many Rajapakses and Fonsekas but this is the first time we are seeing the real hard nosed face of the international community and its hypocrisy.

U.S. Ambassador to Sri Lanka Robert Blake told in the same meeting of Sri Lanka's donor community that 'we are a strong supporter in assisting Sri Lanka combat terror by helping to stop the financing and flow of arms to the LTTE, by providing law enforcement assistance, and by providing training and equipment to help the Sri Lankan military to defend itself'.

After every single one of the war aims put forward by the GOSL had evaporated, one after the other, another reason was brought up: this time it is a part of the global war against terrorism, the clash of civilizations, the great campaign of the Western world and its lofty values against the barbarian darkness of the Islamic world.

What clash of ideas is there between Muslim Indonesia and Christian Chile? What eternal struggle between Poland and Morocco? What is it that unifies Malaysia and Kosovo, two Muslim nations? Or two Christian nations like Sweden and Ethiopia?

In what way are the ideas of the West more sublime than those of the East? The Jews that fled the flames of the auto-da-fe of the Christian Inquisition in Spain were received with open arms by the Muslim Ottoman Empire. The most cultured of European nations democratically elected Adolf Hitler as its leader and perpetrated the Holocaust, without the Pope raising his voice in protest.


In what way are the spiritual values of the United States, today's Empire of the West, superior to those of India and China, the rising stars of the East?

Huntington who coined 'clash of civilizations' himself was compelled to admit: "The West won the world not by the superiority of its ideas or values or religion, but rather by its superiority in applying organized violence. Westerners often forget this fact, non-Westerners never do."

THE TRUTH is, of course, that this entire GOSL story of the war against terrorism etc is nothing but a smoke screen for something that has no connection with ideas and values: the determination of the GOSL to break the Tamils' will to resist and to deny their self determination at gun point.

The above said Tamil political scientist may not be one of the world's great thinkers (we have stopped producing them long time ago). But his remark should give the South and the international community pause for thought.

# இணையப் போவது யார்?



இளந்திரையன்
(ஒரு பேப்பருக்காக)

சர்வதேச நியமங்களுக்குட்பட்டு இரண்டு வலிமையான சக்திகளுக்கிடையில் உருவாக்கப் பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட சமாதான ஒப்பந்தம் ஐந்து ஆண்டுகளைப் பூர்த்தி செய்யும் இறுதி நாட்களை எண்ணிக் கொண்டிருக்கின்றது.

சட்டரீதியாக சர்வதேச நீதிகளின் அடிப்படையில் ஒரு சுதந்திரம் வேண்டிப் போராடும் இனத்தை இறைமை கொண்ட தன்னாட்சி அதிகாரம் பெறத் தகுதியுடையவர்களாக அங்கீகரிக்கும் அதிகாரம் இந்த ஐந்து ஆண்டு கால சமாதான ஒப்பந்தத்தின் ஊடாக வாய்க்கப் பெறுகின்றது.

இற்றைவரை ஒரு குழுப்போராட்டமாக சிறு கலகமாக எமது விடுதலைப் போராட்டம் காண்பிக்கப் படுவதற்கு எடுக்கப்பட்ட அதிதீவிர முயற்சிகளின் விம்பம் உடைக்கப்பட்டு சுதந்திர இன விடுதலை போராட்டமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய நிர்ப்பந்தத்தை சர்வதேச சமூகமும் சிறிலங்காவின் சிங்களப்பேரினவாதிகளும் எதிர் கொள்கின்றனர்.

அதே போல சிறுபிள்ளைகளின் சச்சரவு என்றும் விரல் நுனியால் நசுக்கி விட முடியும் என்று இறுமாந்திருந்த இப்பிராந்திய ஆதிக்கத்தில் முட்டி மோதிக் கொண்டிருந்த சக்திகளின் மனக்கணிதமும் தகர்க்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தீவைச் சூழவுள்ள இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் வல்லாண்மையில் தமிழ் ஈழத்தின் பிரசன்னம் தவிர்க்க முடியாதபடிக்கு உருவாகியுள்ளது. தமிழ் ஈழம் இல்லாத அதிகார சமநிலை இனி சாத்தியமில்லை என்பதைச் சர்வதேச சமூகமும் உணர்ந்து கொண்டுள்ளது.

அரசியல் சட்ட நிபுணத்துவத்தின் கீழோ அதிகார இராணுவ வலுவின் மூலமோ தமிழீழத்தின் இறைமையை அங்கீகரிப்பதை விட வேறு வழி இனி சர்வதேச நாடுகளுக்கு இல்லை.

மனநோய் கொண்ட சிறு குழுக்களின் தாக்குதலாக சித்தரிக்க முற்பட்ட சிங்களப் பேரின வாதத்தின் பொய்யுரை தகர்க்கப்பட்டு உரிமைகள் மறுக்கப்பட்ட ஒரு தேசிய இனத்தின் சுதந்திரப் போராட்டம் என்பது இத்தனை காலமும் காட்டப்பட்ட பொறுமையிலும் இழக்கப்பட்ட அளப்பரிய உயிர்த்தியாகத்தின் மூலமும் சிந்தப்பட்ட குருதியினாலும் கண்ணீரினாலும் இன்று நிருபிக்கப் பட்டுள்ளது.

சர்வதேசத்தின் இக்கையறு நிலையை இன்று நன்கு புரிந்து கொண்டுள்ளதாலேயே சிங்களப் பௌத்தப் பேரின வாதிகள் இன்று பதட்டம் கொண்டு அலைகின்றனர். என்ன செய்வது என்று அறியாது வாய்க்கு வந்த வகையில் பிதற்றித் திரிகின்றனர். கண்மூடித்தனமான தாக்குதல்களை மேற்கொண்டு தமிழ்த் தேசிய இனத்திற்கு சின மூட்டப் பார்க்கின்றனர். சமாதான ஒப்பந்தத்தை அதன் நிறைவிற்கு முன்னால் கிழித்தெறிந்து போர் ஒன்றை வலிந்து ஆரம்பிக்க முனைகின்றனர்.

பதட்டத்தின் உச்சமாக தமது சக்திகளை ஒன்று திரட்ட முற்பட்டு பல அரசியல் நாடகங்களை மேடையேற்றி நிற்கின்றனர். சிறு சிறு தாக்குதல்களை முன்னெடுத்து பொய்யான பரப்புரைக்கூடாக ஒரு கற்பனையான போரியல்ப் பலத்தைக் காட்ட எத்தனித்து நிற்கின்றனர்.

தரையில் போடப்பட்ட மீனைப் போல் இறக்கும் முன் துள்ளிக்குதித்து தடுமாறுகின்றது சிங்களப் பேரினவாதம்.

ஐந்து வருட சமாதானக் காலத்தின் பூர்த்திக் காலமான பிப்ரவை 23 இன் பின் கூர்மையடையப் போகும் தமிழ்த் தேசிய இனத்தின் எழுச்சி இந்த உண்மையை வெளிக் காட்டப் போகின்றது.

சர்வதேசமே இதனை நன்கு உணர்ந்து கொண்டுள்ளது. நடக்கப் போவதை எதிர்பார்த்து ஆச்சரியத்துடன் காத்திருக்கின்றது. இதே வேளை வலிமையுடன் எழப்போகும் தமிழ் ஈழத்துடன் கை கோர்த்து இணையப் போவது யார் என்ற கேள்வியும் எழுகின்றது.

மத்திய கிழக்கின் இஸ்ரவேலைப் போல தவிர்க்க முடியாத பலம் வாய்ந்த சக்தியாக எழுந்து நிற்கப் போகும் தமிழ் ஈழத்துடன் இணைந்து கொள்ளப் போகும் சக்தியே இப்பிராந்தியத்தின் முதன்மைச் சக்தியாக இனி இருக்க முடியும்.

உலக, பிராந்திய வல்லரசுகளின் குறியாக இருந்து கொண்டிருக்கும் திருகோணமலை இயற்கைத் துறைமுகம் தமிழ் ஈழத்தின் இறைமையுள் இருக்கப் போவதும் இந்த உண்மைக்கு வலுச் சேர்க்கின்றது.

இந்தியாவைப் பொறுத்த அளவில் ஆரிய மேலாதிக்க கனவுகள் கொண்ட மன இறுக்கத்துள் தன்னைப் பூட்டிக் கொண்டிருப்பதுவும் காத்திரமான தலைமை இன்றித் தடுமாறுவதும் பெரிய பின்னடைவாகும்.

ஆனால் அமெரிக்காவிடமோ அவ்வகையான மனவிறுக்கமோ தடுமாற்றமோ எதுவும் கிடையாது. தன் நலனுக்காக எந்தப் பேயுடனும் கூட்டுச் சேரவும் அமெரிக்கா என்றும் பின்னின்றதில்லை.

இதில் தமிழ் ஈழத்தை அங்கீகரித்து யார் முதலில் கைகோர்த்துக் கொள்கின்றார்களோ அவர்களே இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் சக்கரவர்த்தி என்பதைக் காலம் விரைவில் காட்டப் போகின்றது.

# International Community's flawed approach assists Colombo - *Thamilchelvan*

Liberation Tigers Political Head S. P. Thamilchelvan, in an Interview to TamilNet Sunday, said the passive stance adopted by the International Community, which he characterized as "unconstructive engagement," is encouraging Colombo to pursue its power-centric politics and aggressive military agenda. The International Community, while making statements that a military solution is not possible, is either unable to, or unwilling to, exert its formidable muscle to force Colombo out of the current military path, despite the patience shown by the Tigers, he said.

## Cease Fire Agreement

**"We would never, under any circumstance, engage militarily and simultaneously enter talks,"** Mr. Thamilchelvan said. "The process towards a negotiated settlement can only take place in an environment conducive to talks. The LTTE has explicitly stated the conditions necessary to create such environment," Tiger political head said. The most basic of these conditions were agreed upon and laid down in the Cease Fire Agreement of February 2002.

Over the last few years the LTTE leadership has been patient and tolerant in sustaining possibilities for Colombo to commit to, and to implement the basic clauses of the CFA agreement.

"Our tolerance was aimed at providing space for Colombo to re-engage in the process in a meaningful way."We had repeatedly respected the call by the International Community to be flexible," Thamilchelvan said.

The LTTE Political Head referred to Geneva Talks I in February 2006 and Geneva Talks II in October 2006."Within the 8-months between the Geneva-I talks and Geneva-II, Colombo had transformed the proxy war into a full-scale war," Thamilchelvan said.

It is after the Geneva - I talks, when Colombo promised to the International Community to disarm the paramilitaries, as stipulated in the CFA clause 1.8, paramilitary opened the so-called "political offices," in Batticaloa, Colombo, Amparai and Trincomalee. This was clearly a counter-tactic to resist the mounting pressure from International community, which had confronted the Government with credible evidence of paramilitary collusion with the Sri Lankan military.

The paramilitaries even claimed responsibility for carrying out attacks on LTTE posts from their offices.

"Assassinations, killings of civilians and forced disappearances by the Sri Lankan military and paramilitary became widespread. Humanitarian agencies were systematically harassed, blocked and threatened with killings and intimidation. An economic blockade was clamped in the east, and the access routes were closed. Aerial bombardment and shelling targeted civilians, forcing displaced people on foot from place to place with the aim of evicting people from our administrative areas in the East.

**"Even the civilian and medical refuges were attacked, disregarding the International Law of Armed Conflict,"** Thamilchelvan said.

While the International Community urged the Sri Lankan political leaders to work towards a radical re-configuration of polity with "dramatic political changes," desist from reneging from the special arrangements supporting the merger of NorthEast, and that a military solution was not possible, Colombo was allowed to pursue exactly the opposite. Colombo continued to placate the International Community with the appointment of a new All Party Conference, and other committees for investigating killings, and embarked on measures to gain political advantage within the Southern polity by signing MoUs with other parties.

In the process, Colombo by clever use of its politicized judiciary, rejected the concept of Tamil homeland by nullifying the 18-year merger of Northern and Eastern Province, the "International treaty" architected by India.

In this backdrop, Tamil people find little comfort in the statements and expression of concerns released by the International Community, as Colombo continues its military agenda that has depopulated areas historically inhabited by Tamils, and has brought enormous suffering to the Tamils in the east.

Tamil people increasingly view with skepticism the approach by International Community towards the two protoganists in the Sri Lanka conflict. They see the approach as unfairly biased against the Liberation Tigers who the Tamils see as the only credible bulwark to safeguard the rights and dignity of Tamil people who have a long history of political struggle for self-determination.

*(Courtesy TamilNet, 28 January)*

காதல் . . .

காதல் . .

காதல் . . .

காதல் போயின்

சாதல்.

ஒரு பேப்பர்
ORU PAPER

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள்
யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:
லண்டன்
சேயோன் - சாரங்கி
மணி - சுஜீத்
கனடா
தயா - பொன்.விவேகானந்தன்
இளந்திரையன்
பாரிஸ்
சிறி - வண்ணை
ஜேர்மனி
சபேசன் - சுதந்திரா
சுவிஸ்
ரேமன் - சந்துரு
பொறுப்பாசிரியர்
- கோபி -
விளம்பரம்
கௌரி - பகீரதி - பிரபு
அச்சு
ஊர்மிளா
வடிவமைப்பு
jasmine studio
முகப்பு வடிவமைப்பு
seven zero graphics
விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - கிரி
இணையத்தள வடிவமைப்பு
ரஜீவன்
தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்
நிதி – நிர்வாகம்
ஊர்மிளா - முருகானந்தன்
வழங்கல்
உதயகுமார்-ராஜு-கரன்

உங்கள் தொடர்புகட்கு:
தொலைபேசி (Tel)
லண்டன் 020 8640 4604
020 8286 9327
பாரிஸ் 01 7289 8165
சுவிஸ் 043 500 0277
தொலைநகல் (Fax)
020 8640 6972
ஆக்கங்கள் மற்றும்
அஞ்சல்வழித்தொடர்புகட்கு:
பணிமனை முகவரி
Oru Paper
45'B' Crusoe Road
Mitcham CR4 3LJ
Surrey
மின்னஞ்சல்:
info@orupaper.com
இணையம்:
www.orupaper.com

'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month. The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.

# சற்று மாறுதலுக்காக. . .

## ஓய்ந்தேன் என மகிழாதே

**சேயோன்**
*(ஒரு பேப்பர்)*

சென்ற ஒரு பேப்பரில் தமிழர்களின் தாழ்வுச் சிக்கல்களைக் களைய வேண்டும். தமிழர்கள் நல்லவர்கள் என்றெல்லாம் இரவி அருணாசலம் எழுதியிருந்தார். அப்படி இருந்தால் நல்லது. ஆனால் உண்மை அதுவல்ல என்று தோன்றுகின்றது. சுமார் 60 பேர் வேலை செய்யிற நிறுவனத்தில் நான் வேலை செய்கிறேன். அங்கு பிரான்சைச் சேர்ந்தவர்களும், பிரித்தானியக் குடிமக்களும், தமிழரும் வேலை செய்கின்றனர். ஒவ்வொரு இனக்குழு மத்தியிலும் சுமார் 20 பேர். உண்மையைச் சொல்கிறேன். பிரித்தானியாவும், பிரான்சும் சுமுகமாக வேலை செய்ய தமிழர்களுக்குள் தான் அடி பிடியும் குத்து வெட்டும். என்ன காரணம்?

இந்த இடத்தில் தான் நான் இன்னொரு கதை சொல்ல வேண்டும். 1995 வாக்கில் நான் கொழும்பில் ஆசிரியப்பணி புரிகிறேன். அது தமிழ்ப் பாடசாலை, தமிழ் ஆசிரியர்கள். அந்தப் பாடசாலையின் அதிபர் சாடையான 'வழியல் பேர்வழி' என்றும் சொல்லலாம்.

என்னவென்றால், அங்கு மூன்று பெண் ஆசிரியைகள். ஒருவர் பிரிவுத் தலைவர் (Sectional Head) என்ற பதவியில் இருக்கிறார்.மற்றைய இரு ஆசிரியைகளுக்கும் பிரிவுத் தலைவர் ஆகிற ஆசை. பிறகென்ன? அவர்கள் 'எதுவும்' செய்யத் தயாராக இருந்தார்கள். 'எதுவும்' என்பதை இழிவான அர்த்தத்தில் நோக்காதீர்கள். அந்த இழிவான அர்த்தத்தில் போக தமிழ்ப் பண்பாடு அவர்களை விடாது.

நான் எதுவும் என்று சொன்னது தன் ஒரே ஒரு மகனை வைத்து தலையில் அடித்து பொய்ச் சத்தியம் செய்வார் ஒரு ஆசிரியை. மாய்மாலம் செய்து நீலிக்கண்ணீர் வடிப்பார் மற்றவர்.

என்னவென்றால் செயலில் களவு. சொல்லில் பொய். நெஞ்சில் நஞ்சு. தொழிலில் நடிப்பு. உண்மை. நேர்மை, நியாயம், நீதி என்ற சொற்கள் தமிழில் உண்டா என்று கேட்கிற வாழ்வு. இவற்றுக்கெல்லாம் துணை போகிற அதிபர்.

தங்கள் இலக்குகளை நோக்கி காய் நகர்த்துகிற இலாவகம். இவற்றையெல்லாம் இஞ்சிற்றும் நான் அறிந்தேனல்லன். ஆனால் இவர்கள் காய்கள் நகர்த்த நான் காயம் படத் தொடங்கினன். நான் மாத்திரமல்ல அங்கு ஊழியம் புரிந்த ஏனைய ஆசிரியர்களும் ஏதோ ஒரு விதத்தில் காயம் படத் தொடங்கினர். கண் முன்னே அநியாயம். கொடுமை.

சிறுமை கண்ட போது பொங்கியெழு. இந்த வாசகம் நான் ஏலவே அறிந்ததுதான். பாரதியாரும் ஒரு கவிதை சொன்னார்.

'பாதகம் செய்பவரைக் கண்டால்
பயங்கொள்ளலாகாது பாப்பா
மோதி மிதித்து விடு பாப்பா
அவர் முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா'

என் நினைவில் அக்கவிதை தான். ஆனால் நான் பொங்கி எழவுமில்லை. மோதி மிதிக்கவுமில்லை. முகத்தில் உமிழவுமில்லை.சிறு முணுமுணுப்பைச் செய்தேன். அநியாயத்துக்கு துணை போகாது ஏனையோரை அணி திரளச் சொன்னேன். அவ்வளவும் தான் செய்தேன்.

'ஏற்ற செயல் செய்தற்கு ஏன் அஞ்ச வேண்டும்?' என்றார் பாரதிதாசன். இது ஏற்ற செயல் தானே? ஆதலினால் அஞ்சாமல் செய்தேன்.

இந்தச் சனப் பெருங் கூட்டத்தில் நியாயத்திற்காக நிற்பவர்கள் ஒரு சிலர். அநியாயம் செய்பவர்களும் ஒரு சிலர். அநியாயத்திற்கு துணை போபவர்களும் வெகு சிலர். ஒன்றுமில்லை என்று சும்மா நடுநிலைமை என்று நிற்கிறார்களே அவர்கள் தான் அனேகம் பேர். அவர்களைப் பார்த்துத்தான் பாரதி பாடினார். 'ரௌத்திரம் பழகு' அதாவது கோபம் கொள்ளப் பழகு. ஓம் அது சரி தான் கோபம் கொள்ளப் பழக வேண்டும். இல்லையெனில் இது என்ன மானுட வாழ்வு?

கொடுமையைக் கண்டு கோபம் கொண்டால் தான் கலகம் செய்வோம். கலகம் செய்தால் தான் நியாயம் பிறக்கும்.சரி, இப்போது பிரச்சினை என் முகம் நோக்கித் திரும்பியது. என்னைக் குற்றவாளியாக்கி, கூண்டிலேற்றி கொலையாக்கத் துடித்தனர். எதையும் எதிர்கொள்ள நானும் சித்தமானேன்.

'எதையும் எதிர்கொள்
முகம் திருப்பாதே மனம் சலிக்காதே'

என்றார் எங்கள் கவிஞர் வில்வரத்தினம். இக்கவிதை வரியே என் நெஞ்சில் அப்போது கிடந்தது எப்போதும் கிடப்பது. நியாயம் வெல்லும். நீதி வெல்லும். நேர்மை வெல்லும். உண்மை வெல்லும் என்றோர் நம்பிக்கை அப்போது எனக்கு இருந்தது. இப்போது இல்லை. இவற்றை வெல்ல வைக்க நாம் போரிட வேண்டும். இப்போதைய நம்பிக்கை எனக்கு இதுதான்.

நியாயம் நீதி நேர்மை உண்மை இவை வெல்லும் என்னும் நம்பிக்கையின் அடிப்படையில் நானும் போரிடத் தொடங்கினேன். நல்ல தன்மை என்று ஏன் சொன்னேன் என்றால் நல்லோர் என்பது வேறு, நல்ல தன்மை உள்ளார் என்பது வேறு. நல்லவர் என்பது யாருக்கும் நல்லவராக இருப்பர். நல்ல தன்மை என்பது நல்ல விசயங்களுக்காக போராடுபவர். அப்படியானோர் என்னுடன் நின்றனர்.

முகம் கொடுத்தேன். போரிட்டேன். வெல்லும் தருணம் எனக்கு வாய்த்தது. ஆனால்

சொல்லத் துயர் தான் என்றாலும் சொல்கிறேன். அதிகாரம் என் மீது பாய்ந்தது. அதிபரின் கையில் அதிகாரம் இருந்தது. அவர் அதைக் கையில் எடுத்தார். தடி கொண்டு அடித்தார். அதிகாரத்தின் சின்னி விரல் நகம் கூட என்னிடம் இல்லை. நான் துரத்தப்பட்டேன். 'ஓடினேன் ஓடினேன் வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடினேன்' என்று கலைஞர் கருணாநிதி 'பராசக்தி' திரைப்படத்தில் ஒரு வசனம் எழுதினாரே. அப்படி ஆனேன் நான்.

'தென்றலைத் தீண்டியதில்லை தீயைத் தாண்டியிருக்கிறேன்' என்றும் கலைஞர் அதில் வசனம் எழுதியிருந்தார். அது எனக்கானது.

சுந்தரராமசாமி ஒரு கவிதை சொன்னார்.

'ஓய்ந்தேன் என மகிழாதே
உறக்கமல்ல தியானம்
பின்வாங்கல் அல்ல பதுங்கல்'

அதைக் கையில் எடுத்தேன். எங்களூர் மகாகவி இப்படிச் சொன்னார். 'பார் இந்த உலகம் பரந்து கிடக்கிறது' அதைக் கவனத்தில் கொண்டேன். அதனால் இப்போதும் நான் இருக்கிறேன். உங்களுடன் வார்த்தையாடுகிறேன். இல்லையா?

# வாழ்வில் வெற்றி பெற...

## உறவைப் பேணுதல்

**இராம K. நாதன்**
*(ஒரு பேப்பருக்காக)*

வாழ்க்கையின் முன்னேற்றம், வெற்றி முதலியன ஒருவர் பொருள் சேர்ப்பதில் மாத்திரம் தங்கியிருக்கவில்லை. அது வெற்றியின் ஓர் அங்கமாக இருந்தாலும் அதுவே தனியாக ஒருவரது வெற்றியை நிர்ணயிக்க முடியாது. காதலும் வாழ்க்கையில் ஒரு அங்கமே. அது கணவன் மனைவியிடையே இருந்தாலென்ன, தனிப்பட்ட ஆண் பெண் இடையே இருந்தாலென்ன, ஒருவருடைய வாழ்வின் வெற்றியில் காதல் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது.

ஆண்-பெண் உறவு என்பது எரிகின்ற நெருப்பைப் போன்றதொன்றாகும். முதலில் புதிதாக ஒருவரைச் சந்திக்கும் போது ஒரு 'பொறி' தோன்றுகிறதல்லவா? அந்தப் பொறியை எரிய வைப்பதற்கு என்னென்னவெல்லாமோ செய்கிறோம். மலர்க் கொத்து கொடுக்கிறோம், விருந்திற்கு அழைக்கிறோம், கடிதம் எழுதுகிறோம். கவிதை எழுதுகிறோம். இப்படிப் பாடுபட்டு வளர்த்த அந்த நெருப்பை அந்தக் காதலில் வெற்றி பெற்றதும் அணைய விட்டுவிடுகிறோம். அந்த நெருப்பிற்கு எரிபொருள் போட மறந்து விடுகிறோம். அதற்குப் பல காரணங்களைச் சாட்டாகக் காட்டுகிறோம். அந்த நெருப்பை வளர்ப்பதற்குத் தவற விட்டவர்களே பிறர் மீது தவற்றைப் போட்டு அந்த நெருப்பு அணைந்து விட்டது என்று கூறி வேறு விதங்களில் அந்த உறவைத் தேடிக் கொள்ள முயல்கிறார்கள். ரெலிவிஷன் பெட்டியுடன் உறவை வளர்த்துக் கொள்கிறோம். மின் வலயங்களில் வலம் வருகிறோம். வேலையில் மூழ்கி விடுகிறோம். சில சமயங்களில் நண்பர்களை நாடி ஓடுகிறோம். இப்படிக் காதலில், குடும்ப அன்பில் கிடைத்த சுகத்தை, மகிழ்வை வேறு விதங்களில் ஈடுசெய்ய முயல்கிறோம். எனவே இந்த நெருப்பு அணையாது பார்த்துக் கொள்வதற்கு செய்யவேண்டியது என்ன என்பதை அறிந்து வைத்துக் கொள்ளுங்கள்.

அளவிற்கு மிஞ்சிய வெப்பமும் வேண்டாம். அதிகமான குளிரும் வேண்டாம். இதமான சூடே சுகமானதாக இருக்கும். ஆதலால் ஒரு நாளைக்கு அதிகமான அன்பைக் காட்டி துள்ளிக் குதித்து விட்டு அடுத்து வரும் நாட்களில் ஏனோ தானோ என்று இருந்து விடாதீர்கள். உங்களது அன்பை ஒரே சீரான அளவில் காட்டுங்கள்.

நெருப்பைக் கவனியுங்கள். சிலசமயங்களில் வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் ஏற்படும் தனிப்பட்ட பாதிப்புக்களினால் ஒருவருடைய மனநிலை வேறுபடலாம். அப்போதெல்லாம் அந்தத் தீ அணையாதவாறு தீனி போடுங்கள். உங்களது முறை வரும் வரையும காத்திராதீர்கள்.

இந்தத் தீயை அணைக்கும் கைங்கரியத்தைச் செய்யாதீர்கள். உங்களுடைய கணவரின் அல்லது மனைவியின் உற்றார் உறவினரைப் பற்றி நித்தமும் குறைகூறாதீர்கள். அல்லது உங்களது அன்பானவரின் சிறு குறைகளைப் பெரிதுபடுத்தாதீர்கள் அல்லது அவர்களின் திறமையில் பொறாமை கொள்ளாதீர்கள். அது நிச்சயமாக இந்த நெருப்பினில் நீர் ஊற்றுவதற்கு ஒப்பானதாகும்.

நெருப்புக்கு தீனி போடுவதை பங்குபோட்டுக் கொள்ளுங்கள். எப்போதும் மற்றவரே அந்த நெருப்பை அணையவிடாது காக்க வேண்டும் என எதிர்பார்க்காதீர்கள். ஆண்-பெண் உறவில் உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பேச்சிற்கே இடமில்லை. இருவரையும் ஒரே தரத்தில் மதியுங்கள்.

எந்தச் செய்கையாக இருந்தாலும், அதற்கு இருவருமே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அது மனைவியின் கடமை அல்லது கணவனின் கடமை என்று அசட்டையாக இருந்து விடாதீர்கள். அது அவர்கள் கடமையாக இருந்தாலும் அந்தச் செய்கைகளுக்கு நன்றி தெரிவியுங்கள். உங்களது பாராட்டைத் தெரிவியுங்கள். உணவு சுவையாக இருப்பின் அதைச் சமைத்தவருக்கு உங்கள் பாராட்டைத் தெரிவியுங்கள். உங்கள் அன்பானவர் அழகாக உடை தரித்திருந்தால் உங்களது மகிழ்ச்சியைத் தெரிவியுங்கள். அதைப் பாராட்டப் பழகிக் கொள்ளுங்கள்.

நீங்கள் மாத்திரமே இந்த நெருப்பில் சூடு காயாதீர்கள். உங்கள் கணவனோ அன்றி மனைவியோ அந்தச் சுகத்தை அனுபவிக்கும் வகையில் விட்டுக் கொடுங்கள். எப்போதும் மற்றவர் தர நீங்கள் எடுப்பதில் மாத்திரம் கவன்மாக இருக்காதீர்கள். எவ்வளவு எடுக்கிறீர்களோ அவ்வளவு திருப்பிக் கொடுங்கள்.

உங்களது உறவை ஒவ்வொரு நாளும் புதுப்பித்துக் கொள்ளுங்கள். புதிதில் இருந்த ஆர்வம் நாட்கள் செல்லச் செல்ல குறையத் தொடங்கிவிடும். ஆரம்பத்தில் உங்கள் காதலியை/காதலனை அல்லது கணவனை/மனைவியை எப்படி நடத்தினீர்களோ அவ்வாறே இப்போதும் நடத்துங்கள். அவர்களின் முன் கவனமில்லாமல் 'ஏவறை' விட்டால் முன்பு மன்னிப்புக் கேட்டீர்களல்லவா? இப்போது எப்படி? முன்பு எடுத்ததற்கெல்லாம் 'தாங்ஸ்' சொன்னீர்களல்லவா? இப்போது எப்படி? ஒரு கூடாத வார்த்தை தன்னும் அவர்கள் முன் சொன்னீர்களா? இப்போது எப்படி?

உறவென்பது நித்தமும் கவனமெடுத்துப் பாதுகாக்க வேண்டியதொன்று. உங்களது தீச்சூழியிலிருக்கும் நெருப்பு அணையாது பாதுகாக்க வேண்டுமெனில் அதற்கு அடிக்கடி 'தீனி'-கரியோ, மரக்குத்திகளோ போடவேண்டியது அவசியம். கூடுதலாகப் போடப்படும் தேவையில்லை. குறைவான நெருப்பிலும் சுகம் இல்லை. தீ அணைந்து விட்டால் மீண்டும் தீ மூட்டுவது கடினம். எனவே உங்களது தீ அணையாது காக்க வரும் காதலர் தினமன்று ஒரு தீர்மானம் எடுத்துக் கொள்ளுங்கள்.

# கிழக்கில் சிறிலங்காப் படைகளின் பின்னடைவு

**வி. சபேசன்**
*(ஒரு பேப்பருக்காக)*

வாகரையை சிறிலங்காப் படைகள் கைப்பற்றி விட்டன. இது சிங்கள அரசினால் பெரு வெற்றியாகக் கொண்டாடப்படுகிறது. பல தமிழ் மக்கள் மத்தியிலும் வாகரையின் வீழ்ச்சி விடுதலைப்புலிகளுக்கு ஏற்பட்ட பின்னடைவாகப் பார்க்கப்படுகிறது.

சிறிலங்காவின் முப்படைகளும் இணைந்து வாகரையை கைப்பற்றும் முயற்சியை ஒக்டோபர் மாதமளவில் ஆரம்பித்தன. இந்த முயற்சியில் ஒட்டுக் குழுக்களும் ஈடுபடுத்தப்பட்டன. நான்கு மாதங்களாக பல முறை வாகரை நோக்கிய படை நகர்வு மேற்கொள்ளப்பட்டது. இதன் போது நூற்றுக் கணக்கான படையினர் கொல்லப்பட்டும் காயமடைந்தும் களமுனையை விட்டு அப்புறப்படுத்தப்பட்டனர்.

நவம்பர் மாத நடுப்பகுதியிலும், டிசம்பர் மாத ஆரம்பத்திலும் வாகரைப் பிரதேசத்தின் மேற்குப் புறமாக சில பகுதிகளை படையினர் கைப்பற்றிக் கொண்டனர். பின்பு 16.01.07 அன்று படையினர் வாகரையின் வடக்கில் இருந்த ஈச்சலம்பற்றையும் தெற்கில் இருந்த பனிச்சங்கேணியின் பெரும் பகுதியையும் கைப்பற்றிக் கொண்டனர். ஈச்சலம்பற்றும், பனிச்சங்கேணியின் பெரும் பகுதியும் படையினர் வசம் வீழ்ந்துவிட்டதால், வாகரையின் வீழ்ச்சி உறுதியானது.

மூன்று நாட்கள் கழித்து 19.01.07 படையினர் தமது நகர்வினை தொடர்ந்தனர். முதலில் பனிச்சங்கேணிப் பாலத்தை கைப்பற்றிய சிறிலங்காப் படைகள் வாகரைக்குள் நுழைந்தன. அடுத்த நாள் கதிரவெளியும் வெருகலும் வீழ்ந்தன.

நான்கு மாதங்களாக படையினர் மேற்கொண்ட முன்னகர்வு முயற்சிகளுக்கு கடும் எதிர்ப்பினைக் காட்டிய விடுதலைப்புலிகள் வாகரை கைப்பற்றப்பட்ட கடைசி இரண்டு நாளும் எவ்வித எதிர்ப்பையும் காட்டவில்லை. வாகரைக்குள் படையினர் நுளைவதற்கு முன்பே விடுதலைப்புலிகளின் படையணிகள் விலகிச் சென்றுவிட்டன.

## கருணா கிழக்கின் தளபதியாக இருந்த காலத்தை விட, இன்றைக்கு விடுதலைப்புலிகள் கிழக்கில் பெரும் பலத்துடன் இருக்கிறார்கள்.

இப்பொழுது வாகரை இழக்கப்பட்டது விடுதலைப்புலிகளுக்கு ஏற்பட்ட ஒரு பின்னடைவு என்ற கூக்குரல் பல இடங்களில் கேட்கிறது.

இராணுவரீதியாக பார்க்கின்ற பொழுது சம்பூரில் இருந்து வாகரை வரை சிறிலங்காப் படைகள் கைப்பற்றிவிட்டதால் கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் கடற்பகுதி எதுவும் இல்லாமல் போய்விட்டது. இதன் மூலம் வன்னியில் இருந்து கிழக்கிற்கு மேற்கொள்ளக்கூடிய கடல்வழி வினியோகம் தடைபட்டுப் போய்விட்டது.

அத்துடன் திருகோணமலை மாவட்டத்தை பொறுத்தவரை வாகரையை இழந்ததன் மூலம் திருகோணமலையில் இருந்து விடுதலைப்புலிகள் பல மைல் தூரம் பின்தள்ளப்பட்டு விட்டனர். தற்பொழுது திருகோணமலை மாவட்டத்தின் 80 வீதமான பகுதி சிங்களப் படைகளின் கட்டுப்பாட்டில் வந்துள்ளது. திருகோணமலையையும் மட்டக்களப்பையும் இணைக்கின்ற ஏ15 பாதை முற்று முழுதாக இன்று சிங்களப் படைகளின் கட்டுப்பாட்டிலேயே இருக்கிறது.

அரசியல்ரீதியாக பார்க்கின்ற பொழுது சம்பூரில் இருந்து வாகரை வரையான விடுதலைப்புலிகளின் நிர்வாகப்பகுதியில் வாழ்ந்த ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இன்று இராணுவ ஆக்கிரமிப்புக்குள் சிக்குப்பட்டுவிட்டனர். இது ஒரு கவலைக்குரிய விடயம் என்பதில் யாருக்கும் மாற்றுக்கருத்து இருக்கப்போவதில்லை.

ஆனால் இராணுவரீதியான பாதிப்புக்கள் என்று சொல்லப்படுபவைகளில் எவையும் விடுதலைப் புலிகளுக்கு பெரும் தாக்கங்களை ஏற்படுத்தப் போவதில்லை.

கிழக்குக்கான வினியோகத்தைப் தரைவழியூடாகவும் விடுதலைப்புலிகளினால் செய்ய முடியும். பூநகரித்தளம் மீதான தவளைப் பாய்ச்சல் நடவடிக்கையில் இருந்து ஜெயசிக்குறு வரை கிழக்கில் இருந்த பல விசேட படையணிகள் வடக்கிற்கு தரைவழியாக சென்று வந்திருக்கின்றன என்பது இந்த இடத்தில் நினைவு கொள்ளத்தக்கது.

அத்துடன் திருகோணமலை மீதான படை நகர்விற்கும் விடுதலைப்புலிகள் மாற்று வழிகளை வைத்திருக்கிறார்கள் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. விடுதலைப்புலிகளின் நீண்ட நாள் நோக்கங்களில் ஒன்றான மணலாறு விடுவிப்பு நிகழ்கின்ற பொழுது, திருகோணமலைக்கும் பாதை திறக்கும்.

## கனரக ஆயுதங்களுடன் விடுதலைப்புலிகளின் படையணிகள் மாயமாக மறைந்துவிட்டது சிறிலங்காப் படைகளுக்கு ஒரு மர்மமாகவே இருக்கிறது.

உண்மையில் கிழக்கில் சிறிலங்காப் படைகளே பின்னடைவு நிலையை அடைந்துள்ளன. இதைச் சொல்வதற்கு முக்கிய காரணங்கள் இருக்கின்றன. சம்பூராகட்டும், வாகரையாகட்டும், இவைகள் எவையுமே விடுதலைப்புலிகளால் சண்டையிட்டுக் கைப்பற்றப்பட்ட பகுதிகள் அல்ல. சிறிலங்காப் படைகள் முக்கியத்துவம் அற்றவை என்று தாமாகவே விலகிச் சென்ற பகுதிகள்தான் இவைகள்.

ஈழப் போர் 1இல் விடுதலைப்புலிகளின் அதிரடித் தாக்குதல்கள் மூலம் யாழ் குடாவின் பெரும் பகுதி மீட்கப்பட்டது. அதே நேரத்தில் கிழக்கிலும் சில இடங்களில் போராளிகள் அதிரடித் தாக்குதல்களை நடத்தினார்கள். இதையடுத்து இஸ்ரேலின் துணையோடு விசேட அதிரடிப் படை கிழக்கில் உருவாக்கப்பட்டது. சிறப்புப் பயிற்சி பெற்ற விசேட அதிரடிப் படையினர் போராளிகளின் அதிரடித் தாக்குதல்களை பெருமளவு கட்டுப்படுத்தினர்.

பிரேமதாசாவுடன் நடந்த பேச்சுவார்த்தையின் போதுதான் விடுதலைப்புலிகள் கிழக்கின் அனைத்துப் பகுதியிலும் ஆயுதங்களுடன் நடமாடினர். முகாம்களையும் அமைத்துக் கொண்டனர். ஆனால் ஈழப் போர் 2 ஆரம்பித்து ஒரு வாரத்திலேயே விடுதலைப்புலிகள் காடுகளுக்குள் பின்வாங்க நேரிட்டது.

பின்பு படையினரின் முகாம்கள் இல்லாதிருந்த வாகரை போன்ற பகுதிகளில் விடுதலைப்புலிகள் நிலைகொள்ளத் தொடங்கினர். ஆயினும் பல முறை படையினர் வாகரை மீது நடவடிக்கையை மேற்கொண்டு வாகரையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்திருக்கிறார்கள். இது போன்ற நேரங்களில் விடுதலைப்புலிகள் விலகிச் சென்றுவிடுவார்கள். அதிகபட்சமாக படையினரை நோக்கி ஒரு கைக்குண்டு வீசப்படும். அவ்வளவுதான். அத்துடன் இப் படை நடவடிக்கைகளுக்கு சில நூறு படையினரே போதுமானதாக இருந்தது.

சில நாட்கள் கழித்து படையினர் வாகரையை விட்டு தாமாகவே விலகிச் சென்றுவிடுவார்கள். விடுதலைப்புலிகளும் மீண்டும் வந்து நிலை கொள்வார்கள்.

'ஈழப்போர் 3'இல் யாழ் குடா மீதான நடவடிக்கைக்கும், ஜெயசிக்குறு நடவடிக்கைக்கும் கிழக்கின் பல பகுதிகளில் இருந்த படை முகாம்கள் மூடப்பட்டன. எந்த நேரத்திலும் இப் பகுதிகளை மீளக் கைப்பற்ற முடியும் என்று சிறிலங்கா படைகள் நம்பியதனாலேயே இதனைச் செய்தன. படையினர் விலகிச் சென்ற பகுதிகளில் விடுதலைப்புலிகள் வந்து நிலைகொண்டனர்.

இப்படித்தான் சம்பூர், மாவிலாறு என்று பல பகுதிகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் வந்தன.

ஆனால் சிறிலங்காப் படைகள் நினைத்த மாதிரி இன்றைக்கு கிழக்கில் விடுதலைப்புலிகள் இல்லை. கருணா கிழக்கின் தளபதியாக இருந்த காலத்தை விட, இன்றைக்கு விடுதலைப்புலிகள் கிழக்கில் பெரும் பலத்துடன் இருக்கிறார்கள்.

முன்பு எவ்வித இழப்புக்களும் இல்லாது ஒரு நாளில் கைப்பற்றிய பகுதிகளை இன்று மாதக் கணக்கில் சண்டையிட்டு கைப்பற்ற வேண்டிய பின்னடைவு நிலை சிறிலங்காப் படைகளுக்கு ஏற்பட்டுள்ளது. அத்துடன் வேறு பகுதிகளில் இருந்தும் பல படையினரை வரவழைத்து, ஆயிரக்கணக்கில் படையினரை ஈடுபடுத்த வேண்டியிருக்கிறது. முன்னைய படை நடவடிக்கைக்கு வெறும் காலாட் படையிரே போதுமானதாக இருந்தது. இன்றைக்கு முப்படைகளும் தேவைப்படுகிறது.

அத்துடன் சிறிலங்காப் படைகளுக்கு ஒரு விடயம் அச்சம் கலந்த ஆச்சரியத்தை கொடுப்பதாக இருக்கிறது.

சம்பூர் மற்றும் வாகரையில் இருந்தபடி விடுதலைப்புலிகள் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் உள்ள படை முகாம்களை நோக்கி அடிக்கடி எறிகணைத் தாக்குதல்களை நடத்தி வந்தனர். நீண்டதூர வீச்செல்லை கொண்ட ஆட்லறிகளையும் விடுதலைப்புலிகள் பயன்படுத்தி வந்தனர்.

சம்பூரைக் கைப்பற்றிய பொழுது சிறிலங்காப் படைகளால் இந்த ஆட்லறிகள் எதையும் கைப்பற்ற முடியவில்லை. விடுதலைப்புலிகள் தமது கனரக ஆயுதங்களையும், ஆட்லறிகளையும் ஈச்சலம்பற்று நோக்கி நகர்த்திவிட்டார்கள் என்று அப்பொழுது சொல்லப்பட்டது. அந்த நேரத்தில் வாகரைப் பிரதேசத்திலும் விடுதலைப்புலிகளின் ஆட்லறி நிலைகள் இருந்தன.

தற்பொழுது ஈச்சலம்பற்று, வெருகல், கதிரவெளி, வாகரை என்று அனைத்துப் பகுதியையும் படைகள் கைப்பற்றி விட்டன. ஆனால் இந்த ஆயுத தளபாடங்களில் எதையுமே சிறிலங்காப் படைகளால் காணமுடியவில்லை.

பல முனைகளில் முன்னேறி வாகரையை சுற்றிவளைத்து உள்நுழைந்த சிறிலங்காப் படைகளுக்கு இது பெரும் ஆச்சரியத்தை கொடுத்துள்ளது.

அனைத்து கனரக ஆயுதங்களுடனும் விடுதலைப்புலிகளின் படையணிகள் மாயமாக மறைந்துவிட்டது சிறிலங்காப் படைகளுக்கு ஒரு மர்மமாகவே இருக்கிறது. இரண்டு நாள் கழித்து மண்ணில் புதைத்து வைக்கப்பட்டிருந்ததாக சில ஆயுதங்களை சிறிலங்காப் படைகள் காண்பித்தன. ஆனால் அவைகள் சிறிலங்காப் படைகளால் நடத்தப்பட்ட ஒரு நாடகம் என்று நம்பப்படுகிறது.

விடுதலைப்புலிகள் தமது பலத்தை அப்படியே தக்கவைத்தபடி வாகரையில் இருந்து விலகி இருக்கிறார்கள் என்பதுதான் உண்மை.

வாகரையை விட்டு விடுதலைப்புலிகள் விலகக்கூடும் என்று நாம் முன்பே 'வாகரை - களநிலவரம்' என்ற கட்டுரையில் சுட்டிக்காட்டி இருந்தோம். கிழக்கில் தொடர்ந்தும் மேலும் சில பகுதிகளில் இருந்தும் விடுதலைப்புலிகள் விலக நேரிடலாம். கிழக்கினைப் பொறுத்தவரை திருகோணமலையிலும், அம்பாறையிலும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் பெரும்பாலானவையும், மட்டக்களப்பின் சில பகுதிகளும் சிறிலங்காப் படைகளால் கைப்பற்றக்கூடிய நிலையிலேயே இன்றைக்குஇருக்கின்றன.

இப் பகுதிகளையும் கைப்பற்றி சிறிலங்காப் படைகள் வெற்றி முரசு ஒலிக்கக்கூடும். ஆனால் உண்மை நிலை தலைகீழானது.

கடந்த ஐந்து மாதங்கள் கிழக்கில் நடந்த சண்டைகள் அந்த உண்மை நிலையை சொல்கின்றன. வெறும் கரந்தடி இயக்கமாக கிழக்கில் செயற்பட்ட விடுதலைப்புலிகள் இன்றைக்கு மறிப்புச் சமர் செய்கின்ற அளவிற்கு தமது பலத்தை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அத்துடன் வலிந்த அதிரடித் தாக்குதல்களை நிகழ்த்தக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். கிழக்கில் விடுதலைப் புலிகளின் வளர்ச்சியில் இது ஒரு பாய்ச்சல்.

வடக்கில் முதலில் கரந்தடி இயக்கமாக செயற்பட்ட விடுதலைப்புலிகள், பின்பு மறிப்புச் சமர் செய்கின்ற நிலைக்கு உயர்ந்து, இன்று பாரிய படை நடவடிக்கைகளை செய்கின்ற நிலைக்கு வந்திருக்கிறார்கள். அதே போன்று கிழக்கிலும் விடுதலைப்புலிகள் பாரிய படை நடவடிக்கைகளை செய்கின்ற நாள் விரைவில் வரும்.

ஒரு விதை
உயிர் கொள்ளும்
இருநெஞ்சில்
வேர்கொள்ளும் -
காதல்
ஒரு பேப்பர்
ORU PAPER

# கவிஞர் எருவில் மூர்த்தி

'கடந்த வார பத்திரிகையை எடுத்துப் புரட்டாமலே ஒரு வாரம் கழிந்து விட்டது என்ற நினைப்பில் நேற்று அந்தப் பத்திரிகையை மேய்ந்தேன். கண்ணிற் பட்டது கவிஞர் எருவில் மூர்த்தியின் மரணச் செய்தி. மட்டக்களப்பு வன்னியனார் தெருவைச் சேர்ந்த பிரபல கவிஞர் எருவில் மூர்த்தி ஜனவரி 11 ஆம் திகதி இறந்ததாகவும் அன்னாரின் இறுதிச் சடங்கு ஜனவரி 14 ஆம் திகதி மாலை நடைபெறும் என்றும் இருந்தது. நாகப்பன் ஏரம்ப மூர்த்தி என்ற எருவில் மூர்த்தி அவர்கள் அரச எழுது வினைஞராகக் கடமையாற்றியவர். இவருக்கு சிவயோகம் என்ற மனைவியும் கயல்விழி என்ற மகளும் (தற்போது மணமுடித்து கனடாவில்) உள்ளனர்.

இவர் இலங்கை வானொலி தேசிய சேவை, ரூபவாஹினி கூட்டுத்தாபன தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கும், பிரபல பாடகர்களான வனஜா சிறீனிவாசன், சத்தியமூர்த்தி, சுஜாத்தா அத்தநாயக்க, அமுதன் அண்ணாமலை, கணபதிப்பிள்ளை, எஸ். இராமச்சந்திரன், வீ முத்தழகு, ஜோசப் இராஜேந்திரன், மற்றும் பல பாடகர்களுக்கும் பாடல்கள் இயற்றியுள்ளார். மறைந்த எருவில் மூர்த்தியின் பாடல்களுக்கு திரைப்படப் புகழ் இசையமைப்பாளர்களான எம்.எஸ்.செல்வராஜா, ஆர்.முத்துசாமி, எம்.கே.ரொக்சாமி, யாழ்.கண்ணன் - நேசன் போன்றோர் இசையமைத்துள்ளனர். ( தகவல் - வீரகேசரி ஜனவரி 14, 2007)

இந்தச் செய்தியைப் படித்ததும் என் நினைவுகள் இரண்டு ஆண்டுகளுக்கு முன் தாவியது. ஒரு வழக்கமான புதன்கிழமை மாலை ' முற்றத்து மல்லிகை' என்ற ஈழத்துக் கலைப்படைப்புக்களைத் தாங்கிய நிகழ்ச்சியைச் செய்கின்றேன். அடுத்து ஒரு பாடல் 'இயற்கை அன்னையின் கலைக்கூடம்' பாடலை இயற்றியவர் இணுவில் மூர்த்தி என்று என் ஊர் நினைப்பில் தவறுதலாகச் சொல்லிப் பாடலை ஒலிபரப்புகின்றேன். ஒரு நேயரின் தொலைபேசி அழைப்பு ' அவர் இணுவில் மூர்த்தி இல்லை, எருவில் மூர்த்தி' என்று திருத்திய அப்பெண் குரல் , நான் அதுவரை அறியாத ' அக்கவிஞரின் சிறப்பையும் சொல்லிச் சிலாகிக்கின்றார். தவற்றுக்கான மன்னிப்பைக் கேட்டுக் கொண்டே 'முடிந்தால் எருவில் மூர்த்தியின் தொலைபேசி எண்ணைத் தரமுடியுமா?' என்று நான் கேட்கவும் அந்த நேயர் தருகின்றார். நவம்பர் 17 ஆம் திகதி 2004 ஆம் ஆண்டு முற்றத்து மல்லிகை நிகழ்ச்சியில் எருவில் மூர்த்தியை வான் அலைகளில் சந்திக்கின்றேன் இப்படி.

வணக்கம் எருவில் மூர்த்தி அவர்களே!

*புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் என்றும் எம் ஈழத்து நினைவுகளோடு இருக்கும் எம் உறவுகளுக்கு உங்களின் இலக்கியப் பணியின் ஆரம்பம் குறித்துச் சொல்லுங்களேன்.*

நான் கிழக்கிலங்கையில் உள்ள மட்டக்களப்பில் எருவில் என்ற கிராமத்தில் பிறந்தவன். அந்தக் கிராமம் மட்டக்களப்பு நகரில் இருந்து தெற்கே 17 மைல்களுக்கு அப்பால் உள்ளது. 5 ஆம் வகுப்பு வரை அங்கே படித்தேன். பின்னர் திருகோணமலை இந்துக் கல்லூரியில் கல்வி கற்கச் சென்றேன். அங்கு படித்துக்கொண்டிருக்கும் போது நான் அநேகமாகப் பத்திரிகைகளில் வரும் கதை, கவிதைகளைப் படிப்பது வழக்கம். அப்போது எனக்கும் எழுதவேண்டும் என்ற ஆர்வம் தோன்றியது. சிறு சிறு பாடல்களையெல்லாம் எழுதினேன். ஆனால் அவையெல்லாம் சரியான பாடல்களா , இலக்கண முறைப்படி அமைந்தனவா என்பதில் எனக்குச் சந்தேகம் இருந்தது. ஆன படியால் அவைகளை நான் பிரசுரிக்க அனுப்பவில்லை. நான் 8 ஆம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கும் போது வீரகேசரியின் சிறுவர்களுக்கான பகுதியில் பூஞ்சோலை என்ற கட்டுரையை எழுதி அனுப்பினேன். அது உடனே பிரசுரிக்கப்பட்டது. அதன் பின்னர் நான் 16 , 17 வயதிலே கவிதைகளை எழுதத் தொடங்கிவிட்டேன். நான் ஆங்கில மீடியத்தில் படித்திருந்தாலும் தமிழ் மீது நிறைய ஆர்வம் இருந்தது.

**துப்பாக்கிச் சன்னம் வலது கண்ணை முழுதாகச் சிதைத்துவிட்டது. இடது கண்ணையும் மூளையையும் தொடர்பு படுத்தும் பகுதி சிதைந்து எனக்கும் பார்வை போய் வேலையும் போய்விட்டது.**

இலங்கை, இந்தியப் பத்திரிகைகள், சஞ்சிகைகளைப் படிப்பதில் ஆர்வம் உடையவனாக இருந்தேன். எனது 18 ஆவது வயதில் எழுதுவினைஞராக உத்தியோகம் கிடைத்தது. கொழும்பில் வேலை செய்து கொண்டிருந்தேன். பின் 19 ஆவது வயதில் மட்டக்களப்பிற்கு மாற்றலானேன். என் 20 வயதில் பயிற்சிக்காகக் கொழும்பு சென்றிருந்த போது கவிஞர் மஹாகவி அவர்களைச் சந்திக்கும் பெரும்பேறு கிடைத்தது. அவர் அப்போது 'தேன்மொழி' என்ற பெயரில் கவிதை நூலொன்றை வெளியிட்டுக் கொண்டிருந்தார். அந்தக் கவிதை நூலில் நானும் ஒரு சந்தாதாரராகித் தொடர்ந்து படித்துக் கொண்டிருந்தேன். தேன்மொழியில் அழகான சிறப்பான கவிதைகள் வெளிவந்து கொண்டிருந்தன. வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத அளவிற்குச் சுவை கொண்ட கவித்துவம் நிறந்த கவிதைகள் அவை. முக்கியமாக நாவற்குழியூர் நடராசன், கவிஞர் மஹாகவி, சில்லையூர் செல்வராசன், மட்டக்களப்புப் பகுதியைச் சேர்ந்த திமிலைத் துமிலன், நீலாவணன் என்று எல்லோரும் எழுதினார்கள். இவர்களுடைய கவிதைகளைப் படிக்கும்போது நானும் எழுதுவேன். பின்னர் கிழித்தெறிந்துவிடுவேன்.

அதன் பிறகு என் 21 ஆவது வயதிலே மட்டக்களப்பில் நடந்த இனக்கலவரத்தில் என் இரண்டு கண்களும் பறிபோயின. அதாவது 1956ஆம் ஆண்டு யூன் 5 ஆம் திகதி சிங்களம் மட்டும் என்ற சட்டம் இலங்கைப் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. அதனை எதிர்த்து கொழும்பு காலிமுகத் திடலில் தமிழரசுக்கட்சி தந்தை செல்வா தலைமையிலே ஒரு சத்தியாக்கிரகப் போராட்டம் நடைபெற்றது. அதிலே பல அரசியல்வாதிகள் குறிப்பாக, வன்னியசிங்கம், அமிர்தலிங்கம், ஜீ.ஜீ.பொன்னம்பலம், சி.சுந்தரலிங்கம், போன்றோர் கலந்து கொண்டார்கள். அவர்களையெல்லாம் காடையர்கள் தடிகளால் அடித்தும் கற்களால் எறிந்தும் பல அட்டகாசங்களைச் செய்தார்கள். கொழும்பில் தமிழர்களுக்கு எதிரான அனர்த்தங்களும்ஏற்பட்டன.

இதன் காரணமாக இங்கே மட்டக்களப்பிற் கூட சத்தியாக்கிரகம் ஒன்று நடைபெற்றது. அப்பொழுது எம்.பி ஆக இருந்த திரு ராசதுரை தலைமையில் இது நடைபெற்றது. மட்டக்களப்பில் கடையடைப்புக்கள் போன்றனவும் நிகழ்ந்தன. அதனால் இங்கு ஒரு சதித் திட்டம் உருவாகியது அதாவது தமிழர்களை எப்படியாவது பயமுறுத்தவேண்டும் என்று பொலிஸ் அதிகாரிகள், மற்றும் இங்கிருந்த சிங்கள முதலாளிகள் சேர்ந்து ஒரு அனர்த்தத்தை 1956 யூன் 8 ஆம் திகதி ஏற்படுத்தினார்கள். இரவு 10.30 மணியிருக்கும் கராஜ் ஒன்றிற்கு நெருப்பைக் கொழுத்திருப்பதைக் கண்டு இளைஞர்கள் நாங்கள் சேர்ந்து அந்த நெருப்பை அணைத்துக் கொண்டிருந்த போது சிங்களவர் ஒருவர் துப்பாக்கியால் சுட்டார். கராஜிற்கு எதிர்க்கடையில் வேலை பார்த்த தங்கராஜா, மற்றும் ராஜேந்திரன் (வயது 15) ஆகியோர் அங்கே கொல்லப்பட்டார்கள். 8 பேர் காயமடைந்தார்கள். 3 வயது பிள்ளை ஒன்றுக்கு சன்னம் பட்டு நல்லவேளையாகத் தப்பியது.

மற்றது நான், என் வலது கண்ணில் பாய்ந்த துப்பாக்கிச் சன்னம் இடது பக்கப் பின்புறமாகச் சென்று வலது கண்ணை முழுதாகச் சிதைத்துவிட்டது. இடது கண்ணையும் மூளையையும் தொடர்பு படுத்தும் பகுதி (Optic nerve) சிதைந்து விட்டது. எனக்கும் பார்வை போய் வேலையும் போய்விட்டது.

கொழும்புக்கு வைத்தியத்துக்காகக் கொண்டுசெல்லப்பட்டேன். அப்போதைய தொழிற்சங்கத்தலைவர் கே.சி.நித்தியானந்தம் அவர்கள் உதவி செய்தார். பின் கொழும்பிலிருந்து இந்தியா எக்மோர் hospitalஇலும் வைத்தியம் பார்க்கப்பட்டது. பின்னர் இங்கிலாந்திலிருந்து திருகோணமலை வந்த கப்டன் Patric என்ற வைத்தியரையும் சந்தித்தேன். எதுவுமே செய்யமுடியவில்லை. எனது பார்வை நரம்புகள் செயலிழந்து பார்வை மீண்டும் கிடைக்காமல் போனது. ஆகவே நான் எனது குக்கிராமத்திலேயே தங்கியிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அப்படியிருக்கும் போது பத்திரிகைகள், சஞ்சிகைகளை எனது சகோதரர்களும் நண்பர்களுமாக வாசித்துக் காட்டுவார்கள். அதன் மூலமாக எனக்கு இலக்கிய ஆர்வம் நிறையவே வளர்ந்து கொண்டு வந்தது. அப்பொழுது நான் பாடல்களைப் புனையத் தொடங்கினேன். முதற்பாடல் 1958 ஆம் ஆண்டிலே நா.ஏரம்ப மூர்த்தி என்ற பெயரிலேயே சுதந்திரன் பத்திரிகையில் வெளிவந்தது. காதலிக்கு ஒரு வண்டைத் தூது விடுகிறேன் இப்படி:

போதவிழ்ந்த புது மலர்கள் தேடி நித்தம்
பித்தனைப் போல சுற்றுகின்றாய் பேதை வண்டே
போடுகின்றேன கேளுனக்கு நானோர் வார்த்தை
உத்தமியாள் என் சுசியைச் சென்று நீ பார்.
கோதையவள் கன்னமதில் ரோஜா காண்பாய்
குறு நகை செய் இதழ்களிலே முல்லை
காண்பாய்
போதை பெறத் தேனெதற்கு போய்ப் பார்
எந்தன் பொற்கொடியாள் புன்னகையே
போதுமென்பாய்.

சுதந்திரன் அப்பொழுது தமிழர்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்த பத்திரிகையாக வெளிவந்து கொண்டிருந்தது. தமிழர் உரிமைகளுக்காகப் போராடிய தமிழரசுக் கட்சியில் கொள்கைகளையும் பாடல்களையும் அப்பத்திரிகை வெளியிட்டு வந்தது. அந்தப் பத்திரிகையில் நிறையப் பாடல்களை எழுதினேன். அனேகமாக அவை உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் பாடல்களாக அமைந்திருந்தன.

*மெல்லிசைப்பாடல்களில் உங்கள் பங்களிப்புக் குறித்து?*

72 ஆம் ஆண்டிலே மெல்லிசைப் பாடல்கள் இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்டு வந்தன. நாவற்குழியூர் நடராசன் அவர்கள் இலங்கை வானொலியின் பணிப்பாளராக இருந்தபோது தான் மெல்லிசைப் பாடல்கள் ஆரம்பிக்கப்பட்டன. அவற்றைக் கேட்டு நானும் எழுதவேண்டும் என்ற ஆசை எனக்கும் ஏற்பட்டது. நான் எழுதி அனுப்பிய இரண்டு பாடல்களுமே ஒலிபரப்பப்பட்டன. அப்பொழுது வானொலி நிகழ்ச்சி அமைப்பளராக இருந்த இரா.பதமநாதன் (பின்னாள் தினக்குரல் ஆசிரியர்) 'மூர்த்தி நீர் எழுதிய பாடல்கள் அருமையாக இருக்கின்றன ' என்று அந்தப் பாடல்கள் ஒலிபரப்ப முன்னரேயே கடிதம் எழுதினார். வி.முத்தழகு பாடிய பாடல்கள் அவை.

தித்திக்கும் செந்தமிழில் சித்தம் கசிந்துருகி
நித்தமும் உனைப் பாடுவேன் – முருகா
இருளின் மத்தியில் உனைத்தேடினேன்.

என்று தொடங்கும் ஒரு பாடல்.

இந்தப் பாடல் ஒலிபரப்பாகி அடுத்த மாதத்தில் புலவர்மணி பெரியதம்பி அவர்கள் பஸ் நிலையத்தில் கண்டபோது சொன்னார். 'தம்பி! உமது பாடல்கள் நன்றாக இருக்கின்றன. இன்னும் எழுதுங்கள் ' என்று. அதன் பிறகு நிறைய மெல்லிசைப் பாடல்களை எழுதினேன்.

*உங்களது இலக்கியப் படைப்புகள் எதாகினும் நூல் வடிவில் வந்திருக்கின்றனவா?*

இல்லை, வரவில்லை.

*உங்களது இலக்கிய ஆசானாக வரித்துக்கொண்டவர்?*

அப்படி ஒருவரும் இருக்கவில்லை, ஆனால் மஹாகவி அவர்கள் மட்டக்களப்பில் O.A ஆக இருந்த போது அடிக்கடி சந்திப்பார். அவரை நான் முன்னோடியாக ஏற்றுக்கொண்டவன். அதாவது துரோணர் ஏகலைவன் போல.

எருவில் மூர்த்தியின் இரண்டு மெல்லிசைப் பாடல்களைத் தருகின்றேன். இதோ கேட்டு ரசியுங்கள். இயற்கையின் சிறப்பைக் கவிஞர் தன் கவி வரிகளில் இப்படித் தருகின்றார்.

இயற்கை இறைவனின் கலைக்கூடம்
அதில் எத்தனை எத்தனை சுகம் பாரும்
மடீகும் மதுரசம் அதிலூறும்
அதை வாங்கிடும் மனம் தினம் கவி கூறும்

மழலையைக் கண்ட கவிஞர் மனம் இப்படிப் பாடுகின்றது;

வட்டக்கருவிழி வண்டுகளோ
உந்தன் வண்ண உடல்
மலர் செண்டுகளோ
பட்டு இதழ்களில் கட்டவிழ் புன்னகை
மொட்டவிழ் முல்லையோ— புத்தொழியோ
கொஞ்சும் மழலைகள் அஞ்சுகமோ

கவிஞர் எருவில் மூர்த்திக்கு என் ஆழ்ந்த அஞ்சலிகள். இப்பதிவு அவருக்குச் சமர்ப்பணமாகவும் அமைகின்றது.

*-கானா பிரபா*

ஸ்ரீமதி · யோகா தில்லைநாதன் 15வது ஆண்டாக நடாத்தும்

"கானக்குயில் 2007"

June 30 சனி மாலை 6 மணிக்கு

Logan Hall, Bedford way, Russell Square, London WC1 இல் நடைபெறுகின்றது.

இந்நிகழ்ச்சியில் போட்டியாளராக பாட விரும்பும் 16வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் பாடகர்கள் ஒரு Audio Cassette இல் ஒரு சினிமாப்பாடலை இசையின்றி பாடி, உங்கள் வீட்டு விலாசம், தொலைபேசி எண், பிறந்த திகதி, நீங்கள் தெரிவுசெய்யப்பட்டால் மேடையில் பாட விரும்பும் பாடல் (3 பாடல்கள்) போன்ற விபரங்களுடன் March 3ம் திகதிக்கு முன்

**Kaanakkuyil,** P. O Box 318, New Malden KT3 3WT என்ற விலாசத்திற்கு அனுப்பி வையுங்கள்.

தொடர்புக்கு
**0208 390 5823**

லண்டனில் நிரந்தரமாக வசிப்பவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.

சினிமாவில் தனித்து ஆண் பாடிய பாடல்களை ஆண்களும், பெண் பாடிய பாடல்களை பெண்களும் தெரிவு செய்ய வேண்டும்.

# நடந்த நிகழ்வுகள்

## சங்கமம் 2007

லண்டன் Sky Rose விளையாட்டு கழகத்தின் அறக்கட்டளையான Sky Rose நலன்புரி நிதியத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்ட 'சங்கமம் 2007' கலைநிகழ்ச்சி மாறுபட்ட கலைகளின் சங்கமமாக நடைபெற்றது. Hayes Beck அரங்கத்தில் கடந்த சனியன்று மாலையில் நடைபெற்ற இவ்விழாவினை திரு. சீதாராமன் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.



முதலில் சித்திராலாயா இசைக்குழுவினர் வழங்கிய திரையிசைப்பாடல் நிகழ்சியான இன்னிசை வார்ப்புகள் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து அவைக்காற்று கலைக்கழகத்தினரின் 'காத்திருப்பு' நாடகம் நடைபெற்றது. இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் உள்ள தாயகப் பகுதிகளில் ஆட்கள் காணமல் போவதனை கருப்பொருளாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்நாடகத்தில் ஆனந்தராணி பாலேந்திரா, மனோகரன் மனுவல்பிள்ளை, ச.வாசுதேவன், ரமேஸ், கணேசலிங்கம், சந்தோஸ் ஆனந்தன். ஆகியோர் சிறப்பாக நடித்திருந்தனர்.




அடுத்து சுபத்திரா சிவதாசனின் மாணவிகளின் பரதநாட்டிய நிகழ்ச்சியும் ஜனார்த்தனின் Saxophone வாத்திய இசைநிகழ்ச்சியும் நடைபெற்றது. அவைக்காற்று கலைக்கழகத்தினரின் குறு நாடகமான 'சர்ச்சை' நாடகம் பார்வையாளரின் உற்சாகமான வரவேற்புடன் மேடையேறியது. இந்நாடகத்தினை நெறியாள்கை செய்த க.பாலேந்திராவுடன், ச.வாசுதேவன், கணேசலிங்கம் சந்தோஸ் ஆனந்தன், ரமேஸ் ஆகியோரும் பங்கேற்றுக் கொண்டனர். விழாவில் தர்சினி சிவசுதன் தொகுத்து வழங்கிய "காற்றினிலே வரும் கீதம்" போட்டிநிகழ்ச்சியாக இடம் பெற்றது. போட்டிக்கு ஐ.பி.சி வானொலியின் எஸ்.கே.ராஜன் நடுவராகக் கலந்து கொண்டார்.

இறுதியாக சித்திராலாயாவின் இசைநிகழ்சியுடன் விழா நிறைவுக்கு வந்தது. பாடல்களை தர்சினி சிவசுதன், ஜக்சன் பொஸ்கோ, உதயா, ரவிசங்கர், அபிரா, ரமணன், கங்கா ஆகியோர் பாடினர். இறுதிப்பாடலை ஜக்சனும் அபிராவும் பாடி முடிக்கும்வரை பெரும்பாலானோர் ஆசனங்களில் அமர்ந்திருந்தமை, நிகழ்வு எவ்விதம் அவர்களை கவரந்திருந்தது என்பதனை வெளிப்படுத்தியது. ஆரம்பம் முதலே விறுவிறுப்பாக நடைபெற்ற மேடை நிகழ்வுகளை சரவணபவன், ஐ.பி.சி வானொலியின் என்.ரி. ஜெகன் ஆகியோர் தொகுத்து வழங்கினர்.



தென் தமிழீழத்தில் வசதிகுறைந்த தமிழ் மாணவர்களின் உயர்கல்விக்கு நிதியுதவி வழங்கி பெரும்பணியாற்றிவரும் Sky Rose, முற்றிலும் புலம்பெயர் கலைஞர்களைக் கொண்டு அற்புதமான கலைநிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தமையை பாராட்டாமல் இருக்கமுடியாது.

## நாட்டுபற்றாளர்கள் நினைவு!

அண்மையில் காலமான நாட்டுப்பற்றாளர்கள் திரு. வ.நவரத்தினம், கவிஞர் திரு சு.வில்வரத்தினம் ஆகியோருக்கு வணக்கம் செலுத்தும் வகையில் புங்குடுதீவு நலன்புரிச்சங்கத்தினர் நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர். கடந்த 6ம் திகதி சனிக்கிழமை மாலை ஈலிங் அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு சட்டத்தரணி மு.நேமிநாதன் தலைமை வகித்தார். நிகழ்வில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. ந. சிறிகாந்தா, திரு. சிவாஜிலிங்கம் உட்பட பலரும் உரையாற்றியதுடன் இவ்விரு நாட்டுப்பற்றாளர்கள் செய்த சேவைகளை பற்றியும் விபரித்தனர்.

## வருகை தந்தார்

கடந்த நவம்பர்மாத நடுப்பகுதியில் லண்டனுக்கு வருகை தந்திருந்த இந்திய சுற்றுலாத்துறை அமைச்சர் திருமதி.அம்பிகா சோனி அவர்களுக்கும் மேற்கு லண்டன் பகுதியில் வசிக்கும் ஈழத்தமிழ் மக்களுக்கு இடையில் நல்லெண்ண சந்திப்பு ஒன்று நடைபெற்றது. முன்னாள் இளைஞர் காங்கிரசின் தலைவியாக இருந்த அம்பிகா சோனி காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்திக்கு மிக நெருக்கமானவர்.

இச்சந்திப்பில் அம்பிகா சோனியுடன், இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. பார்மிட் கோட் அவர்களும் ஈலிங் உள்ளுராட்சி சபையின் முன்னாள் முதல்வர் திரு. வீரேந்திர சர்மா அவர்களும் கலந்து கொண்டனர். ஈழத்தமிழ் மக்களின் பிரதிநிதிகளுடன் அப்போது பிரித்தானியாவில் தங்கியிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு ஈழவேந்தன் அவர்களும் இணைந்து பரஸ்பரம் தமது நல்லுறவை பகிர்ந்து கொண்டார்.

## குறைடன் தமிழ் நல்வாழ்வுச்சங்கம்!

13..01.07 அன்று ஒன்பதாவது தமிழர் திருநாளான பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. இவ்விழா குறைடன் தமிழ் நல்வாழ்வுச் சங்கத்தால் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது சிறப்பு விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர்களும் மாநகரசபை உறுப்பினர்களும் கடந்து கொண்டனர். மற்றும் தென்னிந்திய திரைப்பட நடிகர் ஆகாஷ் கலந்து சிறப்பித்தார். துசிதனு பாடகர்கள் குழுவினர் பாடல்களை பாடிச் சிறப்பித்தனர். மற்றும் சிறார்கள் ஆடியும் பாடியும் மகிழும்படியாக நிகழ்ச்சிகள் அமைக்கப்பட்டிருந்தன. போட்டிகளும் பரிசில்களும் என விழா களைகட்டி இருந்தது. கலந்து கொண்ட அனைவருக்கும் இராப்போசனமும் வழங்கப்பட்டிருந்தது.







தங்கள் நிகழ்வுகளையும் பிரசுரிக்க
ஒரு பேப்பர் ரை நாடுங்கள்.

Specialist in all kinds of Astrology & Palmistry

You will know about your past, present and future by Hand Prediction, Horoscope, Face Reading, interesting persons may contact about your Job, Family Matters, Education, Business, Marriage, Sickness, Family Problems, Children Problems, Immigrations, Visas, Abroad, Money, Love, Husband & Wife Relationship Etc. We will solve your problems in 11 days by worshipping Gods Prayers, Poojas, Devi Upasanas, Lakshmi Pooja, Homas, Prayers and Protection from enemies.



Sri Guru Bramma Astrological Centre

ஸ்ரீகுருப்பிரம்மா ஜோதிட நிலையம்



இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட நட்சத்திரம் (Bramhacharya)

ஜெயராம் மகாயோகி சாஸ்திரி

பேசப்படும் மொழிகள் தமிழ், இந்தி, ஆங்கிலம், சமஸ்கிருதம்.
11 நாட்களுக்குள் உங்கள் பிரச்சினைகளுக்கு ஏற்ப பூசைகள் செய்து தீர்த்து வைக்கப்படும்.

Call: **07908 328 788**

**17A, LEE HIGH ROAD, LEWISHAM, LONDON, SE13 5LD**

Near to **ARRU SUVAI** Sri Lankan & South Indian Restaurant (Opposite Sivan Temple)

***Opening Hours:*** **8.00 a.m – 9.00 p.m** Seven days a week

# A circus has come to town

By: Dr. Paikiasothy Saravanamuttu

With the LTTE cleared from Sampur and Vaharai, the UNP depleted and the JVP marginalised, the cabinet swelled to record proportions, the Donor Forum concluded and the Presidential Commission and international experts to meet soon to deal with the matter of human rights abuses and a pan-Sinhala Ministry of Nation Building with five ministers no less, the Rajapakse presidency seems to be riding the crest of a wave. To where and with what purpose, is the question.

The President's concerns regarding regime consolidation and security in terms of a legislative majority have been taken care of with the substantial UNP cross-over and record-breaking cabinet. We are told that this obviates the need for a general election.

However, the temptation to go for one may well be irresistible once the east is 'cleared' beyond doubt and before things turn sour there and elsewhere, as they could, if the LTTE successfully returns to guerilla warfare and launches a terror campaign of assassinations, claymore mines and bus bombs impacting adversely on the economy as well.

## Real issue

The real issue, post cross-overs and the mega cabinet, remains the real issue that existed before it. What impact will this unprecedented display of 'happy families' amongst political actors that tantamount to a circus act, have on a resolution of the conflict?

Popular support there is, and no doubt will continue, for the President as long as the armed forces succeed in weakening the LTTE. Yet popular support as the recent Social Indicator poll reveals also recognises the importance of a political settlement.

The clearest policy pronouncements from the government with regard to conflict resolution continue to emanate from the defence establishment and these are silent on the role and importance of a political settlement.

## Policy

Is it the case that the Rajapakse regime's strategy for conflict resolution is primarily military in instrumentalities and in terms of substantive content, a substantial preservation of the existing constitutional status quo? This is a government that has not indicated its own thoughts with regard to a political settlement – all we have to go by are the platitudes of the initial Chinthana document and the planks upon which the electoral alliances with the JVP and JHU were built.

The President has distanced himself from the Majority Report of the Expert Committee and the valiant attempt by Prof. Vitharana to reconcile it with its minority counterpart. When will the country know what the substantive policy of this President and his government is with regard to a political settlement of the ethnic conflict?

The concern is that the lack of urgency and prioritisation of this issue that marked the pre-cross-over period will now be institutionalised. The creation of separate and distinct political and administrative institutional arrangements for the east will probably be given priority over the preparation and presentation of government proposals for a political settlement.

## Objective

The strategic objective in the military campaign has been to puncture the LTTE pretension of sole representation of the Tamil people of the north and east and to debunk the homeland / areas of historic habitation concept once and for all time. This constitutes an additional departure from the Kumaratunga and Wickremesinghe dispensations, which thought in terms of merger first, followed by a referendum on its permanence. The Rajapakse presidency seems set on reversing this – de-merger before a referendum.

## Political Settlement

The additional concern is that the fact of cross-overs may reinforce the lack of urgency and prioritisation of a political settlement. Arguably, since the expectation of the country at large of the SLFP-UNP MoU was a consensus on a political settlement of the conflict, the possibility of arriving at such a consensus held as long as the MoU held. Now that it has been torn up by the UNP and undermined by the SLFP, this possibility no longer exists.

Moreover, it is unlikely that the crossers-over can exert any influence in this direction if such was their intention – having crossed over, they will be beholden to their new master.

In any event, before they did, there was very little evidence of their sense of urgency or priority on this score. A political settlement aside, there has been and continues to be a human rights and humanitarian crisis. These gentlemen have not had much to say on either.

## Position

It is indeed an irony that the only party with a clear position with regard to a political settlement is the depleted UNP with its continued fidelity to the Oslo Communiqué. The JVP and JHU arguably do have a position, but this hardly amounts to a position on a political settlement. One hopes that Messrs Jayasuriya, Peiris, Moragoda and Senaratne and Hakeem too, will see it fit and proper to come out with their respective positions on the importance of a political settlement and on its desired contents, at least for the record.

Perhaps the earlier point about their loss of leverage may characterise their membership of this government. None of them have responsibility for conflict transformation and none would be members of the National Security Council. The portfolios they have been given and have accepted, suggest that they are quite content to be removed from policy making with regard to conflict transformation. This though will probably not apply to public defence and advocacy of that policy, whatever it may be.

## Circus

President Rajapakse has scored in terms of his objective. However this is so, if a cricketing analogy is permitted, within the context of a limited over match. Peace and governance, on the other hand, are the stuff of test cricket. The circus has come to town with trapeze artistes, sad and happy clowns, those that talk in many tongues, jugglers, you name it. When do they begin to perform, for what, how long and how well?

*(Courtesy: The Morning Leader - Jan 31, 2007)*

# Incredible India.... Not always...

By: Chithirakuptan
For Orupaper

The United States in particular and the West always advise the 'minorities' not to resist but to 'dialogue' (meaning Peace Talk), to work towards an accommodation with the more powerful majority on terms effectively lay down by the majority. They know that each new state is the vehicle through which one more nation acquires a place in the world stage. They have the constant fear that each such nation could then make demands for a more equitable distribution of resources and wealth in the international arena and effectively use the United Nations to back them. Purely on this self-interest only the wealthier nations, prevent stateless nations from establishing their own states. In brief they want the minorities, at the most to be satisfied with, intermediate categories, short of statehood, that can address minority group's interests and aspirations and to accept their subordinate place. This is exactly what is happening in Sri Lanka.

To break this unfair stalemate, the minority, the Eelam Tamils need a powerful third party that could intervene to ensure that a just settlement is reached and to see it is implemented by the Sinhala state. The LTTE see India as the only guarantor of an eventual settlement, and has been calling for greater involvement. But this is what India did in 1987, in a clumsy way that ended more as a comedy of errors.

"We are an important regional power and have abdicated our responsibilities in Sri Lanka", says Major General Ashok K. Mehta, a commander on strategic affairs who served as a divisional commander in the IPKF in 1988- 1990, (www.ft.com). Some say that India is still scarred by the bitter experience and suffers from a complex that had left it opposed to direct intervention in the affairs of one of its closest neighbours and insecure about its ability to influence events in its own back yard. There is a 'sound' that forever haunts the whole Indian diplomatic establishment; the mournful notes played by the Sri Lankan military band, of course, mockingly as the humiliated Indian Peace Keeping Force (IPKF), leaving at the request of the then government of Sri Lanka set sail from Trincomalee in March 1990.

The talks between the LTTE and the Premadasa government evoked on both sides of the Palk Strait carefully guarded responses and showed that the significance of the development was not lost on anybody. For the benefit of the younger generations, a review is helpful to understand the stance taken by India on the crucial 'The Premeds – LTTE Dialogue'. UNI reporting from Colombo said the sudden willingness of the LTTE to talk with the Sri Lankan government was a ploy to get the Indian forces out of the Island. The EPRLF, that had a life interest in the continued presence in the IPKF in the northeast, held out that the LTTE had agreed to the talks, "Because it was week". The ENDLF (In Madras) an offshoot of the EPRLF questioned the motives of Mr. Premadasa and the wisdom of the LTTE. The TELO faction in India questioned the exclusive right of the LTTE and the Sri Lanka government to determine the fate of the Tamils of Eelam. All negative reactions were out of the need to preserve the vested interest of the opinion-givers. None of them shared the agony of the Tamils. The events and happenings were as bad as what is happening today in Eelam. There were Indiscriminate killing of men, women and children, rapes, arbitrary arrests, unlawful detention, and the total deprivation of all freedoms.

The Indian media carried on a propaganda blitz against the LTTE, under cover of which the Indian listeners and viewers were denied all information about the Human Rights violations and atrocities by the IPKF in Eelam, where they were referred acrimoniously as 'Innocent People Killing Force'.

It was to the credit of the political maturity of the LTTE that, irrespective of whether it hoped to gain anything out of those talks or not, that it was able to recognize that qualitative difference; and to know with whom it was 'doing business' and at what point of time. Mr. Premadas thought the alien presence was a slur on the sovereignty of the country of which he was the head. The grievance of the Tamils against the IPKF was different. What they first imagined as a friendly presence turned out to be an oppressive one. The blame rested squarely on Indian government's clumsy policy making and the gross insensitivity it displayed towards the only friendly people it had in the entire SAARC region!

*(To be continued)*

INSIGHT SYSTEMS

பிரஜாவுரிமை பெறுவதற்குரிய **LIFE IN THE UK** பாட வகுப்புக்கள் மிகக் குறைந்த கட்டணத்தில் நடத்தப்படுகின்றன. கிழக்கு லண்டன் பகுதியில் இதுவரை கற்பித்த மாணவர்களில் 93%ற்கு மேலானவர்களை தேர்ச்சியடைய வைத்துள்ள பெருமைக்குரிய அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் இலகு முறையில் கற்கை நெறி, குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை, தமிழில் உதவிக் குறிப்புக்கள், ஒவ்வொரு வகுப்பு முடிவினிலும், அத்தியாய முடிவினிலும், பயிற்சிப்பரீட்சைகள். வெகு விரைவில் கம்பியூட்டர் வகுப்புக்களும், ஆங்கில வகுப்புக்களும் ஆரம்பமாகவுள்ளன.

தொடர்புகளுக்கு: **07940 406 007**

Editorial Eelam Nation

# Sri Lanka a veritable jungle

It has been reported that food that is imported into Sri Lanka for the people is fit only as fodder for the animals. This is not the only reason why we are saying that Sri Lanka is a veritable jungle. Not only have the Sri Lankan people to eat animal fodder they have also to endure the law of the jungle. When we speak here of the Sri Lankan people we are not talking of the privileged and the new rich. We are talking about the common person. The quality of the food imported reflects the stunning disrespect for the Sri Lankan people the most important ingredient in the Sri Lankan democracy. They are said to make and unmake governments. Yet they do not have a say in the quality of the basic food that they have to eat to keep their bodies and souls together. With a quarter of the government's income to be expended in the defence sector in 2007, the average Sri Lankan person has to be satisfied with animal fodder for a long time to come. For the starving people in the Jaffna peninsula and for those in the east hungry and sick fleeing for their lives, even the animal fodder would be a delicacy.

Corrupted by absolute power afforded to the President by the Constitution, the affairs of the country are now determined by President Rajapakse, the nearest of his kin, the higher echelons of the military and the Buddhist clergy. Important cabinet ministers are sidelined even when it comes to taking key decisions within their own portfolios. If the Socialist Democratic Republican constitution of Mrs Bandaranaike killed democracy in 1972, the Democratic Socialist Republican constitution of JR Jayawardene buried it in 1978. Whichever way one looks, they have neither been democratic nor socialist. The 1978 constitution, a hotch potch of the Gaullist, US and Westminster systems was tailor made to suit Jayawardene's whims and megalomaniacal fantasies to keep himself firmly entrenched as an autocrat. Sri Lanka is also a theocratic state. Any semblance of democracy is negated by the emergency laws. This constitution could be a lethal weapon in the hands of an irresponsible leader.

Around eighteen members of the opposition (UNP) are expected to cross over to the government (SLFP) in support of the president presumably aimed at cutting the wind off the sails of the JVP which now provides numerical support to the government. All the persons crossing over will be given ministerial positions which will entail eighteen ministers within the government reluctantly relinquishing their positions. Nothing in the Constitution has been able to prevent the exodus of opposition members to the government. But just imagine the stampede for ministerial positions rendering the proportional representation system ridiculous.

> They are manipulated to believe that there is an enemy to be destroyed and therefore this is not the time to question

With all democratic freedoms curtailed, people who wrote or spoke against the government killed, independent journalists fleeing from persecution or death, meetings demanding peace and better living conditions disturbed and disbanded by government ministers and devoid of civil liberties and basic human rights the Sri Lankan society has no claim to democracy.

Every day that a person survives is a bonus to them. Killings (some even within the high security zones), disappearances, abductions, torture, bombings of civilian targets are the order of the day. The scourge of the Colombo underworld being a repository for stolen weapons, deserters and mercenary criminals is a pain on the side. Defence of sovereignty is the term for attacks on civilian people. There was even the bizarre spectacle of a member of an extreme nationalist parliamentary group addressing a formal gathering of army officers as to how to "fight" the Tamils.

The justice system has ceased to function. It is "dog eat dog". The investigations into the killings of the journalists, the former foreign minister, Tamil parliamentarians and others remain unanswered either due to incompetence or the right suspects not being pursued, with the LTTE as a convenient scapegoat. What chance does a common person have for justice? Laws and rules can be stretched, bent, circumvented or even broken with impunity. It is the prerogative for those in power. Grotesque as it may sound innocent Sinhala people are sacrificed to make a point. It is all part of subversive politics. Ronald Reagan did it in Libya on 14 April 1986 killing many innocent Libyans with absolutely no provocation.


The threshold for corruption in all sectors and services is without bounds. Even commercial banks have recorded losses both due to gross inefficiency and corrupt practices eroding customer confidence. Nepotism is rampant in the highest strata of society. Arms deals continue to be the most lucrative trade with illegal commissions deposited in off shore banks.

The Sinhala masses are kept distracted from the real issues of their basic life and the economic depression, brainwashed and made to live in a fantasy world believing that President Rajapakse is doing exactly what the ancient king Dutu Gemunu, of the second century BC did to keep the Tamils in their place. Progressively depoliticised in their thinking they are given no space for political decisions of their own. They are manipulated to believe that there is an enemy to be destroyed and therefore this is not the time to question. The obedient media and the government propaganda machinery portray Rajapakse as Dutugemunu re-born, as the saviour of the Sinhala people and the defender of the Buddhist faith.

It is said in the Mahavamsa (6th century AD), that the Arahats (saints), consoled king Dutu Gemunu (2nd Century BC) repentant over the lives lost in the war against a Tamil king Elara thus: "….. Unbelievers and men of evil life were they not more to be esteemed than beasts. But as for thee, thou wilt bring glory to the doctrine of the Buddha in manifold ways; therefore cast away care from thy heart, O ruler of men".

A person has to be totally insane to say that Sri Lanka is not a veritable jungle.

# Canadian Memorial Stamp issued for late Navaratnam



A set of Canadian Memorial Stamps and First Day Cover were issued at a memorial function in Toronto Saturday, honouring the contribution by late V. Navaratnam, a doyen of Ilankai Thamil Arasu Kadchi, the Federal Party, and who called upon the Tamil youth to fight for the establishment of a separate self-governing Tamils State in 1969. Mr Navaratnam urged the youth to fight, when he left the Federal Party and founded Thamil Suyadchi Kalaham, the Organisation for Tamil Self-Governance, after witnessing failed negotiations for power-sharing with Sri Lankan leaders for almost three decades.

> Urged the youth to fight, when he left the Federal Party and founded Thamil Suyadchi Kalaham

Mr. Navaratnam's son, Jegan Mohan, recalling past conversations with his father, told the audiance a conversation, which took place between Felix R. Dias Bandaranaike and Navaratnam, 39 years ago in the Ceylon Parliament Cafeteria, after his father called for a Separate State for the Tamils.

Felix R. Dias Bandaranayake had approached Mr. Navaratnam and commented that the Tamils were always demanding for something, which they cannot obtain, and cited G. G. Ponnambalam's cry for fifty-fifty and Chelvanayakam's demand for Federal State. All of them were rejected by the Sinhalese.

"Now Navam, you are asking for a separate state. Do you really believe that you can attain it?," asked Mr. Bandaranaike. Navaratnam had responded: "Felix, I don't know whether you and I may be alive, but a day will come, when Sinhalese would come forward to offer the Tamils a Federal State, and the Tamil leadership will consider the offer too little too late."

Navaratnam had issued the first postage "Thamil arasu" (Tamil State) in 1961 as part of the disobedience campaign, with an aim to challenge the state of the Government of Ceylon, contravening a Post Office Ordinance and its monopoly to raise tax, similar to Gandhi's Salt March Campaign.

> The gross human rights violations of the Sri Lankan government, be documented and exposed.


Navaratnam was quoted as having had the idea of breaking the Post Office Law and running a parallel postal service as a part of a mass civil disobedience campaign, following the Trincomalee Resolution in 1956, long before the Satyagraha in 1961, and had drawn the sketch of the stamp, reflecting the concept of a Tamil State. He designed it to incorporate the symbolic features of the Tamil State's economy, agriculture, industry, shipping and trawling.

It was finally released in 1961 after the B. C. Pact was nullified by the Sinhala leaders.

The image of the Thamil Arasu stamp is also printed on the First Day Cover. Mr Navaratnam's last advice to the Tamil diaspora, was to mobilize with a unified message to the International Community, and that the gross human rights violations of the Sri Lankan government, be documented and exposed. He also urged the Tamil Canadians to persuade the Canadian government to initiate a demand that Sri Lanka must be expelled from the Commonwealth of Nations for the human rights violations, an act Canada initiated in the Commonwealth against South Africa for its racist policies, Jegan Mohan said.

*(TamilNet, 30 January 2007)*


**Tamsons**
Accountancy & Tax Consultancy Ltd.



* Accountancy & Auditing
* Business Start up Advice
* Business Plans & Cash Flow Forecasts
* Personal tax Affairs & Self Assesment
* Company Tax Affairs & Company Tax Return (CT600)
* Preparing VAT, Payroll for the Sole Trader
* Partnership & Limited Companies

Company Formation *
Attending VAT & PAYE visits *
CIS Voucher & Construction *
Industry Services *
Tax Investigations *
Solicitors Accounts *
& Accounts Reports *

65, Southlands Road, Bromley, Kent BR2 9QR
Tel: 020 8313 0800

www.gfmdesign.com

design

## Providing In-House Design & Print for:

கல்லிலே கலை வண்ணம் படைப்போம்...

| | | |
|---|---|---|
| Letterheads | Business Cards | Compliment Slips |
| Brochures | Booklets | Envelopes |
| Flyers | Leaflets | Postcards |
| Wedding Cards | Invitations | Receipt Pads |
| Memorial Books | Labels and Stickers | Posters |
| Menus | Promotional Items | Vinyl Banners |

and much more..

## CALL US NOW FOR A FREE QUOTE ON:

ஒரு முறை பார்த்தாலே போதும்...

**TEL: 0208 408 1269**
**MOB:07834 393 396**

Email: sales@gfmdesign.com

Suite 3 | Unit 1 | HQ3 | 223 Hook Rise South | Surbiton
Surrey | KT6 7LD

இரவி அருணாசலம் **எழுதிக் கொள்வது...**

# வெயிலோடு விளையாடி



மிகச் சமீபத்தில் ஒரு தமிழ்த்திரைப்படம் பார்த்தேன். அத்திரைப்படம்: வெயில்

வெய்யிலோடு விளையாடி
வெய்யிலோடு உறவாடி
வெய்யிலோடு மல்லுக்கட்டி
ஆட்டம் போட்டோமே

வெய்யில் திரைப்படம் பற்றி இதில் என்ன சொல்ல வந்தேன் என்றால் இத்திரைப்படம் தமிழ் அடையாளத்தை முழுமையாக வெளிப்படுத்திய ஒரு திரைப்படம் என்பதால்தமிழ் அடையாளத்திற்கு மிகப் பொருத்தமான ஒரு தலைப்பு வெயில். அதனை அதாவது வெயிலை ரசிக்க ஒரு பாடல்:

'புழுதி தான் நம்ம சட்டை' என்று வேதனையில் அந்த வார்த்தை வரவில்லை. அது அப்படித்தான் என்ற உணர்வில் அந்த வரி வந்தது. அப்படித்தான் இன்னொரு வரி

'வெய்யிலைத் தவிர வாழ்க்கையிலை
வேறை என்ன அறிஞ்சோம்'

உண்மையில்லையா? தமிழ் மக்கள் நாம் வெயிலைத் தவிரவேறை எதை அறிந்திருக்கிறோம்.

தமிழ்மக்களின் முக்கிய அடையாளங்கள் இரண்டு. கறுப்புத்தோல். வெய்யில். இரண்டையும் தமிழர் நாம் மிக அதிகமாக வெறுக்கிறோம். நமது பண்பாட்டு எதிரிகள் நம்மை அடையாளப்படுத்துவதற்கு கறுப்புத்தோலை மிகப் பயங்கரமாகச் சித்தரிப்பார்கள். உதாரணம் வேண்டுமெனில் மணிரத்தினம் இயக்கிய 'கன்னத்தில் முத்தமிட்டால்' திரைப்படத்தைப் பார்க்கலாம். அங்கு போராளிகள் கறுப்புத்தோலுடன் உலாவுவார்கள். கே. பாலச்சந்தர் தனது 'புன்னகை மன்னன்' திரைப்படத்தில் ஈழத் தமிழ்ப் போராளிப் குழுத்தலைவனை கறுப்புத் தோலுடனும் பயங்கரக் கண்களுடனும் (சிலோன் விஜயேந்திரன்) சிந்தித்துப்பார். எங்களுக்கு கறுப்புத் தோல் தான். இதில் வெட்கப்பட என்ன உண்டு? வெயில் திரைப்படம் எனக்கு மிகப்பிடித்ததற்கு அது முக்கிய காரணம். கறுப்பிலான தமிழ் அடையாளம் கொண்ட பசுபதி நாயகனாக, வெயிலை இரசிப்பதாக வெயில் திரைப்படம் அமைந்து விடுகிறது.

ஒன்றைக் கவனியுங்கள். கறுப்புத்தோலைக் கொண்டோரை கதாநாயகனாக தமிழ்திரை எப்போதோ ஏற்றுக் கொண்டுவிட்டது. முன்னைய காலங்களில் நாயகனே நாயகி எனில் அழகு முக்கியம் என்பது போக வெள்ளைத்தோல் மிக மிக முக்கியம். எம் கே தியாகராஜ பாகவதரிலிருந்து எம்.ஜி.ஆர், சிவாஜி, கமல்காசன் என்றெல்லோரும் வெள்ளைத்தோல்கள். முதன் முதலாக கறுப்புத்தோலுடனும், திராவிட அடையாளத்துடன் வந்து குதித்துக் கலக்கியவர் ரஜினிகாந்த். இரசிகர்களால் அவர் ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கு கறுப்புத் தோல் காரணமல்ல. அவரது நடிப்புப் பாணிதான் (Acting Style) காரணம். என்றாலும் இது ஒரு மகிழ்ச்சி.

கறுப்புத்தோல் தொடர்வதுதான் நமது ஆறுதல். பாருங்கள் விஜய், தனுஷ், விஷால், ஜீவா என்று கறுப்புத் தோல்கள் கலக்குவது நமக்கு மகா ஆறுதல். ஏன் ஆறுதல் எனில் தமிழர் அடையாளம் தமிழர் மத்தியிலே வெறுத்தொதுக்கப்பட்ட சூழலில் இப்போது அது பற்றிய பிரக்ஞை வருகிறதா இல்லையா?

தமிழ் தேசியக் கவி என்று சொல்லத்தக்க பாவேந்தர் பாரதிதாசன் சொல்வார். 'என் தமிழர் படமெடுக்க ஆரம்பம் செய்தார்?.' என்று தொடங்கி

'ஒன்றேதும் தமிழர் நடை உடைபாவனைகள்

உள்ளதுவாய் அமைக்கவில்லை

ஒன்றேனும் தமிழருமை உணர்த்துவதாயில்லை..'

என்று தொடரும்.

ஓம் அது உண்மை தான். இதுவரை காலமும் எந்தத் திரைப்படமும் தமிழர் அடையாளத்தை வெளிப்படுத்திய தில்லை. இப்படி நான் சொல்கிற போது உங்களுக்கு அநேக கேள்விகள் எழலாம். 1930 இலிருந்து தமிழ்ப்படம் தானே தயாரிக்கிறார்கள் என்று

1950 களில் சத்யஜித்ரே 'பதேர் பாஞ்சாலி' என்றொரு திரைப்படம் இயக்கினார். அது கலைத்துவமான திரைப் படம் என்பது போக, அது வங்கத்தின் அடையாளத்தைக் காட்டிய மிக முக்கிய திரைப்படம்.

நான் அறிய பீம்சிங் அவர்களின் பாகப் பிரிவினை திரைப்படம் தமிழ் அடையாளத்துடன் வெளியான முதல் திரைப்படம் என்பேன். ஆனால் அதிலும் பிசிறல்கள் இல்லாமல் இல்லை. கலைஞரின் பராசக்தி தமிழ் அடையாளத்துடன் வந்த திரைப்படம் என்று யாரேனும் சொன்னால் நான் அதனை முற்றாக மறுப்பேன். அது கலைஞரின் பகுத்தறிவுப் பிரசாரத்திற்கான ஒரு திரைப் படம்.

பிராமணியமே தமிழ்த் திரைப்படங்களில் ஆதிக்கம் செலுத்திய காலங்களில் தமிழர் அடையாளம் என்று சொல்லத்தக்க தேவர் குல வாழ்வைச் சொன்ன பட்டிக்காடா பட்டணமா' திரைப்படம், தன்னிடப் பிற்போக்குத்தகமான கருத்துக்களையும் கொண்டிருந்ததில் மெச்ச முடியவில்லை.

பாதை தெரிகிறது பார், உன்னைப்போல் ஒருவன், தாகம், திக்கற்ற பார்வதி போன்ற கலைப்படைப்புக்களை அதன் தரம் கருதி தமிழர் அடையாளமாகக் கருதியிருந்தால், அதை ஏற்பதற்கில்லை. அத் திரைப்படங்களில் நிலம் தமிழர் நிலமாக இருக்கலாம். ஆனால் அதுவே தமிழர் அடையாளம் ஆகிவிடாது.

தமிழர் அடையாளத்தை வெளிப் படுத்தியதில் முன்னோடியும், முக்கியமும், முதலுமானவர் பாரதிராஜா என்பேன். அதற்காக அவருக்கு என் பணிவு உண்டு. ஆனால் அவரும் நாயன் நாயகியரை திராவிட அடையாளத்துடன் காட்டவில்லை.

அவ்வாறே கமல்காசனின் தேவர் மகன் முக்கியமாக விருமாண்டி ஆகியன தமிழர் அடையாளத்திற்கான முக்கியமான திரைப்படங்கள். ஆனால் என்னவோ ஒரு குறை உள்ளது. என்ன குறை? அக்குறை கமல்காசன் தானோ? அப்படிப் பார்க்கையில் தான் வெயிலை தமிழ் அடையாளத்துடன் வந்த முக்கிய திரைப்படம் என்றேன்.

# எச்சாதி சொல்வீரோ

பத்தே வயதான பாலகனாய் இருக்கையிலே
பதிலறியாக் கேள்வியொன்றைப் படித்தவரைக் கேட்டிருந்தேன்
என்வயதை ஒத்துநிற்கும் எதிர்வீட்டுப் பையனுடன்
ஏற்புடனே விளையாட எதற்காகத் தடுக்கின்றீர்

முத்தமிழில் புலமைபெற்ற முன்வீட்டுத் தாயிடத்தில்
தமிழ்ப்பாடம் படிப்பதற்குத் தடுப்பதுவும் எதற்காக?
இத்தனையும் ஏனென்று இதமாகக் கேட்டதற்கு
இழிசாதி அவரென்று இரகசியமாய்ச் சொல்லிவைத்தார்

சாதிகளில் பலசொன்னார் சமனுமில்லை எமக்குஎன்றார்
சகபாடி எனச்சொன்னால் சண்டைவரும் இங்குஎன்றார்
இச்சாதி கணிப்பதற்கு இருக்கிறதோ ஒருமார்க்கம்
இடக்காகக் கேட்டதற்கு இலேசாகப் பதில்சொன்னார்

பரம்பரையாய் வருகின்ற பழக்கமிது எனச்சொன்னார்
செய்தொழிலை வைத்துத்தான் செப்புகின்றோம் இதனையென்றார்
தலைமுடியை எடுக்கின்ற தமிழருக்கு ஒருபெயராம்
சலவைதனைச் செய்கின்ற சந்ததிக்கு ஒருபெயராம்

மரமேறித் தொழில்செய்யும் மக்களுக்கு ஒருபெயராம்
கூலித் தொழில்செய்யும் கூட்டத்திற் கொருபெயராம்
பல்லாண்டு சென்றபின்பு பணிக்குளிரில் யோசித்தேன்
பதிலறியாக் கேள்விமீள படுத்துதுபார் பெரும்பாடு

தமிழ்மண்ணை விட்டகன்று தனியாக இங்குவந்து
எதிர்கால வாழ்விற்காய் எதையெதையோ செய்கின்றேன்
அடுக்களையில் நின்றுதினம் அடுப்படனே கருகுகின்றேன்
சலவைத் தொழிலினையும் சலிக்காமல் செய்கின்றேன்

கள்வகையைப் பகிருகின்றேன் கழிவறையைக் கழுவுகிறேன்
மழிக்கின்ற வேலையையும் மறுக்காமல் செய்கின்றேன்
அத்தனை வேலையையும் அலுக்காமல் செய்கின்ற
அறபன்நான் எச்சாதி அறிஞர்நீர் சொல்வீரோ?

- சத்தியன்

## கொஞ்சமாச் சிரியுங்கோ!

வந்தவர் டொக்ரர் எனக்கு மற்றவர்கள் பேசுவது நன்றாக தெளிவாக கேட்கிறது ஆனால் பார்க்க முடியவில்லை

டாக்டர் ஓ அப்படியா எப்ப உங்களிற்கு இந்த பிரச்சனை இருக்கு

வந்தவர் போனிலை கதைக்கும் போது மட்டும் தான் டொக்ரர்.

டாக்டர் ???????

TRICO - The name you can trust
Door to Door Service
Western province by air & Sea
Call for details Regular Shipping service
At competitive Prices to:
Australia, Canada, Chennai, Bangalore, Cochin and Calcutta
Two more collection points:
Glasgow and South West London
Regular weekly savings means the fastest delivery to Sri Lanka.

உங்கள் வசதிக்காக Tooting இல்
Collecting point!
Contact Vimal
Tel: 020 8672 5551
Fax: 020 8889 5445
Email: tricoint@btclick.com
A - Lanka
171 Tooting High Street,
London SW17

HOT NEWS
Extra Receiving depot in South - London SW17
You can collect packing cases and deliver packed goods to SW17.
Save your money on transport

Trico International Shipping Ltd.
Unit 4,
Bittern Place,
Coburg Road,
Wood Green, London N22 6TP

# உன்னால் முடியும் தம்பி

**உமா மகாலிங்கம்**
*( ஒரு பேப்பருக்காக )*

மூன்று மாதங்களுக்கு மேலாக முடுக்கி விடப்பட்ட முப்படைகளின் மூர்க்கத்தனமான தாக்குதல்களின் பின், தென்தமிழ்ஈழ மக்களின் தாயகப் பிரதேசமான வாகரை ஆக்கிரமிக்கப்பட்ட செய்தி எதிர்பார்க்கப்பட்ட ஒரு நிகழ்வே.

தமிழ்ஈழ விடுதலைப் புலிகளை இப்பிரதேசத்திலிருந்து விரட்டி அடிப்போமென சூழுரைத்த லெப். கேணல் சரத் பென்சேகா, உண்மையில் விரட்டி அடித்தது 70,000க்கு மேற்பட்ட அப்பாவித் தமிழ்மக்களை என்பதை எவரும் மறுக்க முடியாது.

அரசியல் வஞ்சகத் திட்டங்களினால் தாயகப் பூமியைப் பறிகொடுத்த தமிழ் மக்கள் வரிசையில் வாகரைவாழ் மக்களும் இணைந்து கொண்டுள்ளனர். தாம் பிறந்த மண்ணிலேயே, அகதிகளாக, அநாதரவற்றவர்களாக, அரசு பயங்கரவாதத்தின் அத்துமீறல்களினால் அடிமைகள் போல் அங்கு சோதனையிடப்படும் காட்சிகள் வேதனையை வெகுவாக மீட்டியுள்ளது. இக்கொடுமையான அவலங்களை தமிழ்மக்கள் முகம் கொடுக்க துணைபோகும் தமிழ் விரோதக் குழுக்களுக்கு மானம், மரியாதை, கௌரவம், சூடு, சொரணை எதுவுமே இல்லாது போய்விட்டதா என்று எண்ணும்போது, தமிழ் இனத்தின் விடுதலை வேட்கை வீறு கொண்டு எழுச்சி பெறுவதை தடுக்கமுடியாது.

சிங்களக் குடியேற்றத்தினால் சிதறுண்டு கிடக்கும் தென் ஈழத்தமிழ்ப் பிரதேசம் முற்று முழுதான ஆக்கிரமிப்பினால் அபகரிக்கும் ஒரு நிலமை உருவாகுமானால் அதற்கான முழுப் பொறுப்பையும், பிரிவினைவாதம் கக்கும் தமிழ் விரோதக் குழுக்களையும், தமிழ்பேசும் முஸ்லிம் மக்களையுமே சாருமென்பதில் சந்தேகமில்லை. இனவேறுபாடின்றி,சமய வேறுபாடின்றி ஒற்றுமையுடன் வாழ்ந்த தென் ஈழத்தமிழ் மக்களிடையே வேற்றுமையும், பிரிவினையும் உண்டாக்கியவர்கள் யார் என்பதை அங்குவாழும் தமிழ் மக்கள் நன்கு அறிவர்.

இதன் காரணமாகவோ என்னவோ, அரசாங்கத்துடன் இணைய முன்வைத்த 9 நிபந்தனைகளில் ஒன்றாக, கருணா குழுவினர் கைவசம் வைத்திருக்கும் ஆயுதங்களைக் களைய வேண்டுமென அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளதை காணக் கூடியதாகவிருக்கிறது. எனினும், மகிந்தவின் தலைமைக்குட்பட்ட இலங்கை அரசாங்கம் இக் கோரிக்கையை நிராகரித்ததின் மூலம், அரசாங்கத்தினது அப்பட்டமான அரசியல் வேடம் தெளிவாகத் தெரிவதை அரசியல் நோக்கங்கள் அறியத் தவறவில்லை.

தமிழ் இனப்படுகொலை, பாரியத் தாக்குதல்களால் மட்டுமன்றி, இடப்பெயர்வுகள், உணவுத்தட்டுப்பாடு, சுகாதாரச் சீரழிவு, பாதிக்கப்பட்ட இலகுவாழ்க்கை போன்ற இதர சதித்திட்டங்கள் மூலமாகவும் அமுல் செய்யப்படுவதை அரசியல் அவதானிகள் அறிவார்கள். தென் தமிழ் ஈழம் இத்திட்டத்திற்கு இசைவாக இலக்காகியுள்ளதை சம்பூர், வாகரை ஆக்கிரமிப்புக்கள் அடையாளம் காட்டியுள்ளன.

தென்ஈழத் தமிழ் மக்கள் உட்பட இச்சதி வலைக்கு சிக்கிவிடாமல் தப்பித்துக் கொள்ளத் தவறும்பட்சத்தில், தென் கிழக்கு ஈழம் முற்று முழுவதுமாக சிங்கள ஆக்கிரமிப்புக்குள் அடங்கிப் போகும் அபாயம் வெகுதூரத்தில் இல்லை.

எத்தனையோ ஆண்டுகளுக்குமுன் தீர்க்க தரிசனத்துடன் சிந்தித்த தந்தை செல்வா அவர்கள், வடக்கு, கிழக்கு, தெற்கு என்று வாழ்ந்த தமிழ் பேசும் சகல இன மக்களையும் ஒரு குடையின் கீழ் ஒன்றிணைக்க தமிழரசுக் கட்சியை உருவாக்கினார். அவர் உண்டாக்கிய அந்த சுதந்திர தாகத்தை தமிழ் ஈழவிடுதலைப்புலிகள் தணியாது வளர்ப்பது, அவர்களின் போராளிகள் அர்ப்பணித்த உயிர்த்தியாகங்கள் சமர்ப்பணம். தென் தமிழ் ஈழத் தமிழ் பேசும் மக்கள், தங்களுடைய அவல வாழ்க்கைக்கு காரணமானவர்களை இனங்கண்டு விரட்டத் தவறினால், தம் மக்களின் அடையாளம் ஈழத் தமிழ் மண்ணிலிருந்து அழிந்து போவதைத் தடுக்க முடியாமல் போய்விடும்.

## தமிழ்மக்கள் எதிர்பார்த்த எந்தவொரு தீர்வும், சிங்கள அரசாங்கங்களால் அங்கீகரிக்கப்படப் போவதில்லை என்பதை கடந்த கால சம்பவங்கள் காட்டி நிற்கின்றன

குழப்பத்திற்கு மேல் குழப்பத்தை ஏற்படுத்திவிடும் மகிந்தவின் சிந்தனையால் சிங்கள அரசியல் கட்சிகள் கூறுபடும் அவலம் சிங்கள அரசியல் அரங்கில் உருவாகி வருவதை உன்னிப்பாகக் கவனிக்கலாம். இருபெரும் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளும், சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள்ளும் அதிருப்தியாளர்கள் பிரிந்து போகும் சதித்திட்டம், பதவி ஆசையை உலவவிட்ட மகிந்தவின் மந்திர ஆலோசனையென்றால் அது மிகையாகாது.

நாட்டிற்கு நல்லது செய்ய எண்ணி, இருகட்சிகளுக்கிடையே உருப்பெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தமும் உதறப்படும் நிலைமை வெகுதூரத்தில் இல்லை. உள்ளகப் பிரச்சினைகளைத் தீர்க்க வெளிநாடுகளுக்கு ஓடும் ஐ.தே.கட்சியினாலோ, சி.ல.சு. கட்சியினாலோ போரினால் சீரழிந்த இலங்கைத் தீவை மீளக்கட்டியெழுப்ப முடியுமா என்பது சந்தேகமே.

ஐக்கிய இலங்கைக்குள், தமிழ்மக்கள் எதிர்பார்த்த எந்தவொரு தீர்வும், சிங்கள அரசாங்கங்களால் அங்கீகரிக்கப் போவதில்லை என்பதை நடந்து முடிந்த பேச்சு வார்த்தைகள், தீர்மானங்கள், உடன்படிக்கைகள் எதுவுமே செயல்படுத்த முடியாமல் போனது கடந்தகால அனுபவங்களாகும்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சிகளில் முன்னின்று உழைத்த நோர்வே அரசும் கண்காணாமல் போய்விட்டது. இவர்களுடைய அனுசரணையின் பலனால் ஒப்பேறிய, புரிந்துணர்வு உடன்படிக்கையும் கைவிட்ட நிலையில், பாரியளவிலான யுத்த நடவடிக்கைகள் இன்னுமொரு போர் ஒன்றை இலங்கையில் காணக்கூடிய சூழ்நிலை உருவாகி விடுவதை ஊடகங்கள் சூசகமாகத் தெரிவிக்கின்றன.

நாளாந்தம் நடைபெறும் கொலைகள், ஆள்கடத்தல்கள் தமிழ்மக்களின் பாதுகாப்பை அன்னியப்படுத்திவிட்டன. இளைஞர்கள் தொட்டு முதியோர்கள் வரை உயிருக்கத் தாக்குப்பிடிக்கும் சூழலை, அரச படைகள் தமிழ் மக்கள் வதியும் பிரதேசங்களில் உருவாகியுள்ளதை அன்றாடச் சம்பவங்கள் கூறுகின்றன.

அரசப்படைகளின் கைகளில் அகப்பட்டு அகோரமான சித்திரவதைக்காளாகி உயிரை இழப்பதைவிட, தமிழ் மண்ணுக்கும், இனத்துக்கும், தனிமனித சுதந்திரத்திற்கும் தோள்கொடுத்துப் போராடி மடிவதைக் கௌரவமாக எண்ணி, தமிழ் ஈழவிடுதலைப் புலிகளின் அணியில், தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் இணைந்து கொள்ளும் காட்சிகள் இப்போது வரத்தொடங்கியுள்ளன.

இதன் பின்னனியை நோக்கினால், சிங்கள அரசின் படைகள் செய்யும் அட்டூழியங்களும், அதற்கு துணைபோகும் குழுவினர்கள் செய்யும் அடாவடித்தனங்களும் தான், தமிழ் ஈழவிடுதலைப் புலிகளை மேலும் பலம் பொருந்திய ஒரு படையணியை உருவாக்க உதவி செய்தவர்களாகக் கருதினால் அதில் தப்பேயில்லை.


# TAMIL REFUGEE ACTION GROUP

Vacancies exist for the following posts:

***HEALTH PROMOTION WORKER***
**– Full Time**
Applicants must have knowledge in Health Issues affecting Tamils in the UK
***Yearly Salary:* 19,600**

***WOMEN WELFARE WORKER***
**– Full Time**
Applicants must have knowledge in Social and other issues related to Tamil women.
***Yearly Salary:* 16,800**

***ELDER SUPPORT WORKER***
**– Part Time (18 hrs /Wk)**
Applicants must have proper understanding on Tamil Elder's social needs and related issues
***Yearly Salary:* 7,000**

All applicants should possess good knowledge in English and Tamil

For package of application please send a self addressed stamped (L) envelope (A4) to:

**TRAG**, Co-ordinator
221 Forest Road, Walthamstow E17 6HE
Telephone: 020 8527 4471 / Fax: 020 8503 2631

***Applications Closing date:* 17th February 2007**

# நெஞ்சு பொறுக்குதில்லையே...

எழுதுபவர் வித்தகன்

## வறட்டுக் கௌரவம்

பெப்பிரவரி மாதம் தொடங்க 'வலன்டைன்ஸ் டே' ஆர்ப் பாட்டங்களும் தொடங்கிடுகுது.. இந்த நேரமாப் பாத்து நான் உங்களுக்கு ஒரு கதை தான் சொல்லப்போறன். இதுகும் ஒரு காதல் கதை தான். ஆனால் அதிலையும் எங்கடை சமூகத்திலை இன்னும் இருக்கிற வறட்டு கௌரவத்தின்ரை பாதிப்புத் தான் தொக்கி நிக்குது.

சரி கதையைக் கேளுங்கோ!

எனக்குத் தெரிஞ்ச ஒரு பெடியன். ஒரு முப்பது வயசு இருக்கும். கஸ்டப்பட்ட குடும்பத்துப் பெடியன் தான் எண்டாலும் நல்ல கெட்டிக்காரன். பெத்தவையள் பெடியன்ரை கெட்டிக்காரத்தனத்தைப் பாத்து மகன் டொக்டரா வருவான், இஞ்சினியரா வருவான் எண்டு ஏராளமான எதிர் பார்ப்பை வைச்சிருந்திருக்கினம். பெடியனும் அதுக் கேற்ற மாதிரித் தான் படிச்சுக் கொண்டு வந்திருக்குது.

ஆனால் விதி விளையாடத் தொடங்கிட்டுது.கெட்டித் தனமா ஏலெவல் படிச்சுக் கொண்டிருந்த பெடியனை இந்தியன் ஆமி பிடிச்சுக் கொண்டு போய் அடியடியெண்டு அடிச்சு கனநாள் உள்ளுக்கு வைச்சிருந்திட்டு விட வீட்டுக் காரர் பயந்து போய் கடனைக் கிடனைப் பட்டு வெளி நாட்டுக்கு ஏத்தி விட்டிட்டுதுகள்.

பெடியனும் இங்கை வந்து படாதபாடு பட்டு தும்படிச்சு கடனைஎல்லாம் அடைச்சு தங்கச்சிமாரையும் கரை சேர்த்து விட்டிருக்குது. மாடு மாதிரி உழைச்சாலும் அதுகும் மனிசப் பிறப்புத் தானே. அதுக்கும் மனிச உணர்வுகள் எல்லாம் இருக்கும் தானே. தன்ரை கவலைகள், பிரச்சினைகள், ஏக்கங்கள் எண்டு எல்லாத்தையும் பகிர்ந்து கொள்ள முடியாமல் துடிச்சிருக்குது.

அப்பதான் தெரிஞ்ச ஒரு வயதான ஆள்

"தம்பி உங்கடை கவலைகளை, கஸ்டங்களை, ஏக்கங்களை எல்லாம் மனசுக்குள்ளை பூட்டி வைக்காமல் ஒரு பேப்பரிலை எழுதுங்கோ, பிறகு நாலைஞ்சு தரம் வாசியுங்கோ. அதை இன்னொரு ஆளோடை பகிர்ந்த மாதிரி இருக்கும். மனசுக்கும் கொஞ்சம் ஆறுதலா இருக்கும். பிறகு அந்தப் பேப்பரைக் கிழிச்சுப் போடுங்கோ" எண்டு புத்தி சொல்லியிருக்கிறார்.

பெடியனுக்கு இயல்பாகவே இலக்கியத்திலை நல்ல ஆர்வமும் எழுத்துவன்மையும் இருந்தது. அதாலை தன்ரை எண்ணங்களுக்கெல்லாம் கொஞ்சம் கற்பனை கலந்து கதையா, கவிதையா எழுதத் தொடங்கியிருக்குது. தன்ரை படைப்புகளை மற்ற ஆக்களோடை பகிர்ந்து கொள்ளுறதுக்காக அதையெல்லாம் இணையத்திலை சேத்திருக்குது.

அந்தக் கதை கவிதைகளையெல்லாம் வாசிச்ச ஒரு பிள்ளைக்கு இந்தப் பெடியனிலை ஒரு ஈர்ப்பு வந்து தன்ரை காதலைச் சொல்லியிருக்குது. அந்தப் பிள்ளை ஒரு பணக்கார வீட்டுப் பிள்ளை யெண்டதையும் ஒரு டாக்குத்தரா வேலை செய்யுது எண்டதையும் தெரிஞ்சு கொண்டு அந்தப் பெடியன் முதலிலை சம்மதிக்க இல்லை.

ஆனால் அந்தப் பிள்ளை விடாப்பிடியா நிண்டிருக்குது. அதுமட்டுமில்லாமல் அந்தப் பிள்ளையின்ரை காதலிலை உண்மை இருந்திருக்குது.

தனக்கு வரப்போற புருசனிட்டை தான் அந்தஸ்தையோ பகட்டையோ பதவியையோ எதிர்பார்க்க இல்லையெண்டும் தன்னை முழுசாப் புரிஞ்சு கொண்டு தன்னோடை ஒரு நல்ல நண்பனாப் பழக்க கூடிய துணைதான் தேவையெண்டும் சொல்லியிருக்கு.

'மண்பார்த்து முளைப்பதில்லை
மரம்பார்த்துப் படர்வதில்லை
மங்கையரின் மனக்காதல்'

எண்டு சொல்லுற மாதிரி பிள்ளையின்ரை உண்மையான அன்பு ரெண்டு பேரையும் காதல் கொள்ள வைச்சிருக்குது.

விசயம் பெட்டையின்ரை வீட்டிலை தெரிஞ்சதும் பிரளயம் கிளம்பியிருக்குது. எங்கடை குடும்ப கௌரவம் என்ன? அந்தஸ்தென்ன? உன்ரை படிப்பென்ன தொழிலென்ன? உனக்கும் அவனுக்கும் எப்பிடிப் பொருந்தும் எண்டு பெட்டையோடை சண்டை பிடிச்சுப் போட்டு அவசர அவசரமாத் தங்கடை அந்தஸ்திற்கேற்ற மாப்பிள்ளையைப் பாத்துக் கட்டி வைக்க வெளிக்கிட்டிருக்கினம்.

பொம்பிளைகள் மென்மையானவையள் தான். ஆனால் காதலெண்டு வரேக்குள்ளை (அது உண்மையான காதலெண்டால்) ஓர்மம் வீறுகொண்டு வாறது இயற்கைதானே. அந்தப் பிள்ளை கட்டினால் அவரைத் தான் கட்டுவன் எண்டு விடாப்பிடியா நிண்டிருக்குது.

சரி நாங்கள் சொல்லுற மாப்பிள்ளையைக் கட்டாட்டாலும் பறவாயில்லை. நீ அவனைக் கட்டக் கூடாது. அப்படி நீ அவனைக் கட்டினால் நாங்கள் ரெண்டு பெரும் தற்கொலை செய்வம் எண்டு சொல்லுற அளவுக்கு அவையளின்ரை வறட்டுக் கௌரவமும் ஈகோவும் இருந்திருக்கிது எண்டால் பாத்துக்கொள்ளுங்கோவன்.

என்னைப் பெத்தவையளைக் கொண்டு போட்டு எனக்கொரு வாழ்க்கை தேவையில்லை, அதே மாதிரி அவரைத் தவிர இன்னொரு ஆளுக்கு என்ரை மனசிலை இடமுமில்லை எண்டு பெட்டை சொல்லிப் போட்டுது.

பெடியன் பாவம். விரக்தியும் கவலையுமே வாழ்க்கையாகி நொந்துபோயிருந்த மனசுக்கு எங்கையோ இருந்து வந்து ஆறுதலா இருந்த அந்தப் பிள்ளையின்ரை பிரிவைத் தாங்கிக் கொள்ள முடியாமல் திடீரென எங்கையோ வெளிக்கிட்டுப் போயிட்டுது. ஆள் இருக்குதோ இல்லையோ எண்ட விபரமே ஒருவருக்கும் தெரியாது. பெடியன்ரை நிலமை இப்படியெண்டால் அந்தப் பிள்ளையின்ரை நிலமை அதைவிட மோசம்.

வைத்தியராக் கனபேரின்ரை வருத்தங்களைத் தீர்த்து வைக்க வேண்டிய பிள்ளையை இண்டைக்கு தொடர்ந்து ஒரு வைத்தியர் பராமரிக்க வேண்டிய மாதிரி Severe depression ஆலை பாதிக்கப்பட்டு வீட்டிலை இருக்குது.

இதைப் பாத்துப் பாத்து பெத்தவையள் இரத்தக் கண்ணீர் வடிக்கினம். எங்கடை பிள்ளையின்ரை வாழ்க்கையை நாங்களே கெடுத்துப் போட்டம் எண்டு புலம்பிக் கொண்டிருக்கினம். ம்ம்ம்.. காலங் கடந்த ஞானம்.

நாங்கள் பெரியவையள் பிள்ளைகள் நல்லா இருக்க வேணுமெண்டு தான் நினைக்கிறம். ஆனால் சில நேரங்களிலை அதுகளைப் புரிஞ்சு கொள்ளாமல் நாங்கள் எடுக்கிற சில முடிவுகளாலை அதுகளும் நாங்களும் காலங் காலமா அழவேண்டிய நிலமை வந்திடுகுது.

இது ஒரு சின்ன உதாரணந்தான். இதைப் போல ஏராளமான சம்பவங்கள் உங்கள் அயலிலையே நடந்திருக்கலாம். நடந்திருக்கும். ஏதோ யோசிச்சு நடப்பம்?.

## காதலின் பரிணாமம்

ஆணும் பெண்ணும் சமமா? இல்லை ஆண் உசத்தியா? பெண் உசத்தியா? இதுக்கு யார் பதில் சொல்வது? ஒரு ஆண் பெண்தான் உசத்தி என்று சொன்னாலும், ஒரு பெண் ஆண்தான் உசத்தி என்று சொன்னாலும் அதற்கு பரஸ்பர ஈர்ப்பு கூட காரணமாக இருக்கலாம். மற்றபடி அவரவர் இனத்தையே உசத்தி என்று தான் சொல்வார்கள்.

வடதுருவம் தென்துருவம் மாதிரி எதிர்எதிர் துருவமாகவும் இருக்கிறது. அதே சமயம் அப்படி இருப்பதாலேயே ஒன்றை ஒன்று ஈர்த்துக் கொள்கிறது. உடலாலும் மனதாலும் வேறுபாடுகள் நிறைய. ! ஆனாலும் அவர்கள் ஒன்றித்து வாழ்கிறார்கள். அதன் அடையாளமாக இன்னொரு வடதுருவத்தையோ தென் துருவத்தையோ உருவாக்கி அடுத்த சுற்றுக்கு தயார்ப் படுத்துகிறார்கள். உயிருள்ள எல்லாவற்றுக்கும் காமம் பொதுவானது. காமத்துக்கான அழைப்பு அல்லது இழைப்பு பிற உயிரினங்களிலிருந்து மனித உயிரிகளிடம் சற்றே மாறுபட்டதாக இருக்கிறது. விலங்குகளிடம் நேரங்காலம் இல்லை, ஒழுக்கமில்லை என்று நாம் பொதுவாகச் சொல்கிறோம். ஆனால் அவற்றுக்கும் அதனதன் தனித்தன்மையோடு கூடிய கட்டுப் பாடுகளும் ஒழுங்குகளும் நிச்சயமாக உண்டு.

காமமற்ற காதல் இருக்கிறதா என்ற விவாதமும் ரொம்ப நாளாக நடக்கிறது. ஆண் பெண் என்ற இன வேறுபாடற்ற உறவாக ஒரு காதல் இருக்க முடியுமானால் அந்தக் காதலுக்கு நட்பு என்று தான் பெயர்.

நட்பு காதலாக மாறலாம் காதல் நட்பாக மாற முடியுமா என்று தெரியவில்லை. ஏனென்றால் நட்பு காதலாக மாறும்போது நட்பின் தோல்வியாக கருதப் படுவதில்லை. ஆனால் காதல் தோல்விக்குப் பிறகு அவர்களின் நட்புறவு தொடர்வது இல்லை. காதல் தோல்விக்குப் பிறகு அவர்களிடையே சுமுகமான நட்பு இருக்க வாய்ப்புண்டா? (சில விதிவிலக்குகள் எல்லாவற்றுக்கும் உண்டு)

மனித சமூகத்தின் ஆரம்பக் காலங்களில் ஒருவனுக்கு ஒருத்தி என்பது இருந்திருக்க வாய்ப்பில்லை. தாகம் வந்தா தண்ணி குடிக்கிற மாதிரி கிடைக்கிற வாய்ப்பில் நடந்திருக்கக்கூடும். அடுத்து வலிமையுள்ளவன் தனக்கு விருப்பமான பெண்ணை தேர்ந்தெடுக்கவும் மிச்சம் மீதி மற்றவனுக்கு கிடைக்கவும் ஒரு காலம் இருந்திருக்கிறது.

அதற்கும் முன்னால் பெண்ணே சமூகத் தலைவியாக இருந்து, தனக்குத் தேவையானவனை தேவையான போது தேர்வு செய்யும் சுதந்திரம் கொண்டிருந்தாள் என்றும் ஒரு கருத்து இருக்கிறது.

உடலின் வலிமை என்று பார்த்தால் தாய்மைக்கான வலிமை என்பது எந்த ஒரு ஆணின் உடல் வலிமையையும் விட மிக அதிகமானது. அதே சமயம் ஆணின் வலிமை இரையைத்தேடும் உணவுக்கான தேடுதலில் வளர்ந்திருக்க வேண்டும். விலங்குகளோடு பொருதிய மனிதன் பின்னர் விலங்குகளிடம் கற்ற வன்முறைகளை சகமனிதனிடம் பரீட்சித்திருக்கலாம்.


அதை தான் விரும்பிய பெண்ணை விரும்பிய பொழுதினில் அடைவதற்கு பயன்படுத்தியிருக்கலாம். அவன் அந்த வலிமையை பிறகு தனக்கெதிராகவும் பிரயோகிக்கக் கூடுமென்று அறியாமல் ஆணின் வலிமையை விரும்பிய பெண் அதை விருப்பதோடே அனுமதித்திருக்கலாம்.

படிப்படியாக மண்ணை தனக்கான ஆதிக்க அடையாளமாக கைப்பற்றிக் கொண்ட மனிதன் பெண்ணையும் அதே வலிமையோடு அடக்க முடியும் என்று உணர்ந்தான். தனக்கான மண், தனக்கான பெண் என்று தனிக்குழுவை அமைத்துக் கொண்டான். தனக்கான எதையும் இன்னொருவன் அபகரித்து விடாமல் இருக்க தனக்குக் கீழ் அடிமைகளை உருவாக்கினான். பெண் தானாகவே தன்னை விடுவித்துக் கொள்ளாதிருக்க அவளைக் கட்டுக்காவலில் வைத்தான்.

பின்னர் சமத்துவம் பற்றிப் பேசப்பட்டது.சாதி, மதம் என்னும் அடிமைச் சாசனங்கள் இல்லாததாக்கப் படும்போது மட்டுமே நிபந்தனையற்ற ஒரு சமத்துவம் பெண்ணுக்கும் அதன்மூலம் ஆணுக்கும் கிடைக்க முடியும் என்ற கருத்து வலுவுற்றது.

ஆணுக்கும் பெண்ணுக்குமான உறவு காமம் சார்ந்தது மட்டுமென்ற எண்ணமும் இன்று மாறியிருக்கிறது. மனிதர்கள் சாதிப்பதற்கு எத்தனையோ வேலைகளும் தேவைகளும் மீதமிருக்கின்றன. விழிப்புணர்வுற்ற ஆணும் பெண்ணும் மீண்டும் கற்கால வாழ்வைத் தொடரக் கூடுமென்ற அச்சமோ தயக்கமோ இன்றியே ஆண் பெண் உறவை சாதாரணக் கண்ணோட்டத்தில் உணரமுடியும்.

நன்றி: சிந்தா நதி




ஜோதிடர் விஜய் வர்மா

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட நக்ஷத்திரம் திரு விஜய் வர்மா அவர்கள் கைரேகை, சாமுத்திரிகா இலக்ஷணம், ஜாதகம், பிறப்பியல், நாமநஷத்திரம், வருங்காலம் ஆகியவற்றைக் கொண்டு உங்களின் சென்ற காலம், நிகழ்காலம், வருங்காலம் ஆகியவற்றை மிகத் துல்லியமாகக் கணித்து வழங்குவார்.

திருமணப் பொருத்தங்கள் பார்க்கப்படும். திருமணத்தடைகள் நீங்க, குடும்பத்தில் நிலவுகின்ற கணவன், மனைவி பிரச்சினைகள் தீர, காதல், வேலை மற்றும் வியாபாரம் ஆகியவற்றில் ஏற்படும் தடைகள் மற்றும் எதிர்பாராத சரிவுகளுக்குப் பரிகாரம் வழங்கப்படும். வாகனப் பொருத்தங்கள் பார்க்கப்படும். பில்லிசூனியம், ஏவல், செய்வினை ஆகியவற்றால் பாதிப்படைந்தவர்களுக்குப் பரிகார பூஜைகள் மற்றும் குழந்தை பாக்கியம், தேவி உபாசனைகள் மூலம் தீர்வுகள் வழங்கப்படும். அனைத்துவித மாக தோஷங்களுக்கும் சனிதிருஷ்டிகளுக்கும் பரிகாரம் வழங்கப்படும்.

**Specialist in all kinds of Astrology**

You will come to know about your past, present & future by hand predicition, horoscope, face reading, intending persons mat contact. for job family matters, husband & wife relationship, love, education, business, choice of stones, marriage, sickness, promotion, family problems, children problems, Immigration, abroad, money, sexual problems, etc. Witch craft will be cleared by performing Poojas and Devi Upasanas. Lakshmy Pooja, prayers and protection from enemy.

Contact Mob: **07957 547 255**

**1st Floor, 14A Ealing Road, Wembley, Middx, HA0 4TL**
(Upstairs of Oviya Entertainment)
(Opposite Sagithana Jewellers)

**Opening Hours:** 9.00 a.m – 9.00 p.m Seven days a week

# யாழ். மக்களைச் சுரண்டும் கப்பல் வாணிபம்

'யாழ்ப்பாண மக்களின் பசி பட்டினியைப் போக்க துணிச்சலுடன் கப்பல் மூலமாக யாழ்ப்பாணத்துக்கு உணவுப் பொருட்களை எடுத்துச் செல்வதாகக் கூறும் கொழும்பு வர்த்தகர்கள் குடாநாட்டு மக்களை ஈவிரக்கமின்றி சுரண்டும் கொள்ளை இலாபம் சம்பாதிக்கும் வணிகத்திலே ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ். குடாநாட்டுக்கான ஒரே தரை வழிப்பாதை மூடப்பட்டு இன்றுடன் நூற்றி எழுபது நாட்கள் முடிந்து விட்டன. ஏ-9 தரைவழிப்பாதை மூடப்பட்டதால், குடாநாட்டு மக்களுக்கான வெளி மாவட்டத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டு அம்மக்கள் திறந்தவெளிச் சிறைச் சாலைக்குள் தமது வாழ்வை முடக்கிக் கொண்டு செய்வதறியாதுமௌனித்துப் போயுள்ளனர். அவர்கள் இன்றுவரை உணவுக்காகவும் வைத்திய வசதிகளுக்காகவும் சந்தித்து வரும்மனித அவலங்கள் வரலாறாகிவிட்டன. ஒன்றுமறியாத அப்பாவி மக்களைஅரசாங்கம் தாம் நினைத்தவாறு,சில கப்பல்களில் உணவுப் பொருட்களையும் தர்மாஸ்பத்திரிக்குத்தேவையான மருந்துப் பொருட்களையும் அனுப்பி வைத்து 'வஞ்சகம்' தீர்த்துவருகின்றது. சுருங்கச் சொன்னால் சீரோடும் சிறப்போடும்வாழ்ந்து வந்த யாழ்ப்பாண மக்களின் சுதந்திர உணர்வுக்கு அரசாங்கம் ஆப்பு வைத்து வருகின்றது.

விரும்பிய நேரத்தில் விரும்பிய உணவைச் சாப்பிட முடியாத அவலநிலை அங்குண்டு. தன் உறவுகளைப் பார்க்க முடியாத நிலை, சுகதுக்கங்களில் பங்கு கொள்ளமுடியாத நிலை, உறவுகளின் இழப்புகளிற்குக் கூட பயணம்செய்ய முடியாதநிலையில், கண்ணீரையே மண்ணுக்கு உரமாக்கி வருகின்றான். உற்பத்தியாளன் மூலப்பொருட்களை எடுத்து வருவதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதியோ கப்பல் வசதியோ வழங்கப் படாமையால் தனியார்துறைபணியாளர்கள் ஒரு நேரகஞ்சிக்குக் கூட திரிவதை அன்றாடம் காண முடியும். தொழில்துறை முடங்கிப்போனதால் வங்கிகளுக்கு நிலுவைப் பணம் கொழும்பிலிருந்து தருவிக் கப்படும் இக்கட்டான நிலை உருவாகி யுள்ளது.

இந்நிலையை நேரடியாக அவதானித்த சர்வதேச மனிதாபிமானத் தொண்டர் நிறுவனங்களும் இந்த மண்ணிலே பணியாற்றும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுக்களும், உள்ளூர் தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் யாழ்ப்பாண மக்களின் மனித அவலங்களைப் போக்க இரு தரப்பினரும் இணக்கப்பாட்டுக்கு வந்து ஏ-9 பாதையைத் திறக்க வேண்டுமென சர்வதேச சமூகம் மூலம் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர். இது பாதுகாப்பு நடவடிக்கையென அரசு கூறிக் கொண்டு, யாழ்ப்பாண மக்களுக்கு 'புதைகுழி' வெட்டும் கலாச்சாரமாக நின்றுகொண்டேசெல்கின்றதுஅடிக்கடி தேசிய ஊடகங்களில் மட்டும் குடாநாட்டில் சுகஜநிலை உருவாகியுள்ளதாக செய்திகளை வெளியிட்டு வருகின்றது. எப்படி சகஜநிலை உருவாகியிருக்கின்றதென்பதற்கான காரணங்களை தெரிவிக்காமல்இருந்து வருகின்றது போர் முழக்கங்கள் இல்லாமல், பாதுகாப்புப் பிரிவினரின் நடவடிக்கை தளர்வில்லாமல், மக்கள் அச்சமின்றி என்ன வேண்டுமானாலும் பெற்றுக்கொள்ளக்கூடிய சகஜநிலை உருவாகியுள்ளதா எனக் கேட்கக் கூடியதாகவுள்ளது.

நிலைமைகளில்மாற்றம் எதுவுமில்லை. மக்கள் முண்டியடித்துக்கொண்டுபலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலேதான் பொருட்களைப் பெறமுடியும். எரிபொருளை மக்கள் பெறுவதற்கு மாதத்தில் ஒருநாள் கூடும் காட்சி மாறவில்லை. எந்தப் பொருளையும், கொள்ளை விலையில் வாங்கியேவாழ்வைஓட்ட வேண்டியுள்ளது. இந்த நிலைகளால் யாழ். செயலக அதிகாரிகள் வந்த பொருட்களுக்கும் விநியோகித்த பொருட்களுக்கும் கணக்குத் தெரியாமல், இருப்பெடுப்பதும், நாலுபணம் சம்பாதிப்பதற்காக நடைபாதையில் விற்பனை செய்யும் வியாபாரிகளை மிரட்டும் பாணியில் செயல்பட்டுவருகின்றனர்.

சுருங்கச் சொன்னால்,யாழ் மாவட்ட நிர்வாக அதிகாரிகளுக்கு 'குடும்பநிர்வாகம்' கூட பரிச்சியமில்லையெனதெரிகின்றது.உடுப்புத் தோய்க்க சுகாதாரத்தைப் பேண சவர்க்காரத்தைக் கூட மக்கள் தேவைக்கேற்ப தருவிக்க முடியாமல் திண்டாடுகின்றனர். இவற்றால் சகல சவர்க்காரங்களும் கொள்ளை விலையில் வாங்கக் கூடியதாகவுள்ளது.

ஒரு வயோதிபர் நெஞ்சு உருக்கும் வகையில் கூறியதைநினைக்க நெஞ்சு பதைக்கின்றது. 'இந்த விலையில் எங்களால் சவர்க்காரம் வாங்க முடியாது தம்பி. நான்போட்டிருக்கிற துண்டு தண்ணீரில் போட்டு அடிஅடியென்று அடித்து கசக்கிப் பிழிந்து துண்டே பிய்ந்து விட்டது' கேட்கவே தடுமாறுகின்றது.

இந்தநிலையைப் பயன்படுத்திகொழும்பில் வாழும் யாழ்ப்பாணவர்த்தகர்கள்யாழ்ப்பாண மக்களின் அவலநிலையை உணர்ந்து யாழ்ப்பாணத்துக்கு உணவுப்பொருள் எடுத்து வந்து நியாயமான விலைக்கு விற்பனை செய்துவருவதாக கூறி வருகின்றனர். அவர்கள் கூறுவது ஒன்று மட்டும் உண்மை. இன்றைக்கு நன்நெறியுடன் கூடிய வணிபம் யார் செய்கிறார்கள். எங்கு இலாபம் இருக்கிறதோ அதைத்தான் செய்ய முடியும் என்கிறார்கள்,எனவேதான் யாழ்ப்பாண மக்களைச் சுரண்டும் ஈவிரக்கமற்ற கொள்ளைலாபத்தை ஈட்டும் செயலில் இறங்கியுள்ளனர். எந்தப் பொருள் யாழ்ப்பானத்தில் ஐநூறுமடங்கு லாபத்துக்கு விற்பனை செய்ய முடியுமோ அவற்றை யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வருகின்றனர். இதில்விசித்திரமும் வேடிக்கையும் நிறைந்தது, யாழ்ப்பாண மக்களின்பசிபட்டினியைப்போக்க போதைப்பொருளான'பான்பரக்',மகளிருக்குத்தேவையானசுகாதார நப்கின்கலான 'கோட்டக்ஸ்'களை பத்து மெற்றிக்தொன் எடுத்துவந்து நடை பாதைகளில் வீதிக்கு வீதி விற்பனைக்கு விட்டுள்ளனர்.

மரக்கறி எண்ணெய், சீனி,சர்க்கரை வெல்லம், பெருங்சீரகம், கருவாடு, சலவைப் பவுடர் என எல்லாமே யுத்தகாலம்போல விலை அதிகரிப்புடன் விற்பனை செய்யப்படுகின்றது. இதைவிட யாழ்ப்பாண முஸ்லிம்கள், விமானப் பயணங்களை "OPEN TICKET" என்ற போர்வையில் ஆக்கிரமித்து தங்கம், மருந்து வகைகளை யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வந்து ஒரு பயணத்தின் போது பயணச் செலவு போக ஒரு முறையில் இருபத்தையாயிரம் சம்பாதிக்கின்றனர். இது வாணிபம் அல்ல தறிகெட்ட வாணிபம் என்பதுஎல்லோருக்கும் தெரியும்.

யாழ்ப்பாணத்திலுள்ள மருந்தகங்களில் மருந்துகளின்பெயர்களைக்கூட பயமில்லாமல் பற்றுச்சீட்டுக்களில் எழுதி கொள்ளை விலைக்கு விற்பனை செய்து வருகின்றனர், அன்றாடம் பாவிக்கும் மருந்துகளுக்கு ஒருவன் தனது வருமானத்தில் இருபது சதவிகிதத்தை செலவு செய்ய வேண்டியுள்ளது.

அதிகாரிகள் யாழ்ப்பாணம் வருவதும் போவதும் ஒன்றும் புதிதல்ல,அவர்கள் மக்களுடன் உறவாடிஉண்மைநிலையை அறிந்து கொள்ளவாய்ப்பில்லை, அவர்கள் கூடுமிடம் பலாலி படைத் தலைமையகம், அவர்களது வருகை செய்திகளில்வரும் ஆனால்உருப்படியாகஎதனையும்சாதித்ததாக வில்லை. சுருங்கச்சொன்னால்எரிபொருள் வந்தால்மின்சாரம்கிடைக்கும்,அதுவேசாதனையாகவுள்ளது, ஆனால் யாழ்ப்பாண மக்களின் மனித அவலங்களுக்கு என்றுமே விடிவுதரப் போவதில்லை என்பது உறுதி.

| பொருட்கள் | கொழும்பு | யாழ் |
|---|---|---|
| சீனி கிலோ | 48.00 | 175.00 |
| கிழங்கு கிலோ | 80.00, | 130.00 |
| வெ. பூடு கிலோ | 65.00 | 520.00 |
| மரக்கறி எண் | 110.00 | 650.00 |
| செத்தல் மிளகாய் | 230.00 | 420.00 |
| நெத்தலிக் கருவாடு | 160.00 | 400.00 |
| கோட்டக்ஸ் | 75.00 | 340.00 |

*-யாழின் மைந்தன்*


## மரண அறிவித்தல்....

இளவாலையைப் பிறப்பிடமாக் கொண்டவரும்
தற்பொழுது Rulrallee 34, 44139 Dortmundஐ
வதிவடமாகக் கொண்டவருமாகிய

**திருமதி சூரியகலா கதிர்செல்வன் அவர்கள்**
1.2.2007 அன்று காலமானார்.
அன்னாரின் ஈமைக்கிரியை ஒழுங்குகள் பற்றி தகவலுக்கு

தொடர்பு கொள்ள
**00492311371551 / Mob: 015203719830**




# காதல் வானிலே... காதல் வானிலே... (1)



அது கல்லூரிக்காலம் சுமார் பத்து வருடங்கள் இருக்கும் உயர்தரம் படித்துக் கொண்டிருந்த நேரம், எனக்கெல்லாம் காதல் வராதா என்னை ஒருத்தி பார்க்க மாட்டாளா என்று ஏங்கித் திரிந்திருக்கிறேன்.

என் அயல் வீட்டுப் பதின்மூன்று வயதுச் சிறுவனுக்கு கூட இனிப்புக் கொடுக்க ஒரு சிறுமி இருந்தாள். எனக்கு அப்போதே இரண்டு கழுதை வயது (ரீச்சர் சொல்லுவா.) ஆனால் எனக்கொருத்தி இருக்கவில்லை.

சில பெண்கள் என்னைப் பார்த்துச் சிரித்திருக்கிறார்கள்தான். ஆனால் அதையெல்லாம் பார்த்து காதல் என எண்ணிவிடாதே என்று நண்பன் சொல்வான். ஏன் என்று கேட்டால் போய்க் கண்ணாடியைப் பார் தெரியும் என்பான். நானும் பார்த்திருக்கிறேன். என் முகத்தை கண்ணாடியில்ப் பார்க்க எனக்கே சிரிப்பு வரும். அவர்களுக்கு வராதா பின்னே?. அதையெல்லாம் காதலென்று நான் எப்படி...!

ஏதோ எனக்குக் காதல் வரவில்லை... சரி... சரி... என்னையாரும் காதலிக்கவில்லை. அந்தக் கொடுப்பனை எனக்கு இருக்கவில்லை. இப்படி ஒவ்வொரு வருடமும் என்னைக் கடந்து சென்றது, எத்தனையோ பெண்களும் சிரித்துக்கொண்டு கடந்து சென்றார்கள் அதற்கான அர்த்தம் தெரிந்து கொண்டதால் அமைதியாக இருந்திருக்கிறேன். வேறென்ன அர்த்தம்! முகக் கண்ணாடி என் முன்னாடி வந்து நிற்கும். போடா போய் வேலையைப் பார் என்று மனம் சொல்லும் எனக்கு இப்படித்தான் வாழ்க்கை என்று இருந்து பழகிப் பத்து வருடமாகி விட்டது.

வீட்டில் பெண் பார்க்க முடிவுசெய்து விட்டு என்னிடம் கேட்டார்கள். மறுத்து விட்டேன். நான் புகைப் படத்திற்குச் கொஞ்சம் அழகாக இருப்பது என்பது உண்மைதான் அதைப் பார்த்து விட்டு ஒரு பெண் ஏமாந்து விடக்கூடாதே என்ற நல்லெண்ணம்தான் அதன் உள் நோக்கம். பார்த்தீர்களா நான் எவ்வளவு ஒரு நல்ல ஜீவராசி! ஆனால் இங்கே நல்ல ஜீவராசியை யாருக்குப் பிடிக்கிறது? உலகம் எதை எதையோ எல்லாம் அல்லவா எதிர்பார்க்கிறது. சரி அதை விடுவோம். தத்துவத்திற்கு இங்கு நேரமில்லை...

எனக்குச் சிலகழுதை வயதாகி விட்டதாலோ என்னவோ காதல் என்ற பக்கம் கதவடைத்துப் போய் விட்டது. இப்போ அது சகாராவைப் போல!

ஆனால்...!

ஆனால்...! இந்த முகத்தை,

இந்த ஜீவராசியை,

இன்னொரு நல்ல ஜீவராசிக்குப் பிடித்து விட்டது.

பாறை ஒன்றின் மேலே சிறு பூவாய் முளைத்தாயே
உறவுக்கு உயிர் தந்தாயே!

நானே எனக்கு!!!

நண்பன் இல்லையே. உன்னால் ஒரு சொந்தம்
வந்ததே

ஆக இப்போ எனக்கும் காதல்!!! என்னையும் காதலிக்க ஒரு ஜீவராசியால் முடிந்திருக்கிறது என்றால் இது உலகின் ஒன்பதாவது அதிசயம்!!! (என்ன எட்டாவதை விட்டுவிட்டேன் என்று யோசிக்கவேண்டாம். கடந்த மாதம் என் நண்பனையும் ஒருத்தி திருமணம் செய்திருக்கிறாளாம்)

இப்போ எனக்குக் காதல்!!!

சகாராவில் சுனாமி வந்தால் எப்படி இருக்கும்? அப்படி இருந்தது எனக்கு. அப்படியே இன்னும் இருக்கிறது எனக்கு! அப்படியே இருக்கும் எனக்கு. இருக்கவேண்டும் எனக்கு. நேற்று வரை எதோ பாட்டுடன் திரிந்த என்னால் இப்பொழுது அப்படி இருக்கவோ இயங்கவோ முடிய வில்லை. எப்போதும் அவள் முகம் வந்து முன்னே நின்று சிரிக்கிறது, சிணுங்குகிறது, கோவிக்கிறது.

சட்டென்று சலம் வருமென்று சாதகத்தில்
சொல்லலையே

நெஞ்சோடு காதல வருமென்று நேற்று வரை நான்
நம்பலயே!

மெலியவேண்டுமென்றால் போய்க் காதலி என்று ஓஷோ சொன்னதன் அர்த்தம் இப்போது தான் புரிகிறது. எனக்குப் பசித்துப் பல நாட்கள் ஆகிவிட்டது. அவள் வற்புறுத்தலினால் மட்டுமே நேரத்திற்கு உணவு உள்ளே போய்க்கொண்டு இருக்கிறது. சாப்பிட்டீங்களா? என்ன சாப்பிட்டீங்கள்? என்று அவள் கேட்டால் பதில் சொல்லத் தெரியவில்லை. யாருக்குத் தெரியும்? இருக்கிறதை உள்ளனுப்பிக் கொண்டிருக்கிறேன் அவ்வளவுதான்.

டொக்டர் "இருமலா இருமலா" என்று கேட்டால் நிர்மலா நிர்மலா என்று கேட்கிறது. புரிகிறது எனக்கு உள்ளே ஓர்மோன்கள் கட்டுப்பாட்டில் இல்லை. கட்டுப்படுத்த யாராலும் முடிவதில்லை! அதற்கான முயற்சியும் யாரும் எடுப்பதில்லை.

காதலித்துப்பார் கான் தண்ணி காப்பித் தண்ணியாகும் என்று அன்று நான் எழுதியதெல்லாம் உண்மையோ என்கிற சந்தேகம் இப்போ எழுந்திருக்கிறது. கான் தண்ணியென்ன விஷமே ரசமாகும் போல் இருக்கிறது.

அவள் மேல் என்னுடைய பிரியத்தை விட அவளுக்கு என்மேல் உள்ள பிரியம் அதிகம். இதை நானும் அறிவேன் அவளும் அறிவாள். ஆனால் என்னை விட என்னை அவள் மிகவும் நேசிக்கிறாள் என்பதை நான் மட்டுமே அறிவேன். அப்படியென்றால் இவ்வுலகில் என்னை விட வேறு அதிஷ்டசாலி யார் இருந்து விடமுடியும்!?.

காதலித்தால் கவிதை வரும் என்பார்கள். காதலன் கவிஞன் ஆவான் என்பார்கள். கவிதை வந்ததுதான் எனக்கல்ல கவிஞனாகியது நான் அல்ல என்னை நையாண்டி செய்தே என் நண்பன் கவிஞன் ஆனான். இது என்னைப் பற்றிய அவன் எழுதிய முதல் கவிதை!

நிம்மதியாய் இருந்தவன் தான்

நிலவைப்போல் ஒளிர்ந்தவன் தான்

நிர்மலாக்குப் பின்னால் போய்

நிர்க்கதியாப் போவானோ!!!

பாவி எழுதியதுதான் எழுதினான், பார்த்துக் கொஞ்சம் சந்தோஷமானதா எழுது. இப்படியா எழுதுவது. நானும் அதை முட்டாள் தனமாக அவளுக்குச் சொல்லி அடி வாங்காத குறை! மூடு வாயை எல்லாவற்றையும் அவளிடம்போய்சொல்லாதே முட்டாள்! என்று ஆழ்மனம் ஏசியது. என்ன செய்வது அவள் முகத்திற்கு முன்னால், என்னால் அப்படி நடித்துவிட முடிவதில்லை. ஆழ் மனம் சொன்னதைக்கூட அவளிடம் சொல்லிவிட்டேன். உன்னையெல்லாம் திருத்த முடியாது என்று சொல்லி கைவிட்டு விட்டது என் ஆழ்மனம்.

சரி. எங்கோ வந்து எப்படியோ திரும்புகிறது இந்தக் கதை என்னுடைய வாழ்க்கையைப் போல. சரி மறுபடி என்னுடைய காதல் கதை!

போடா அப்படியென்ன நீ காதல் செய்து விட்டாய். பொல்லாத காதல். என்று நீங்கள் நினைக்கலாம்!

மனிதர் உணர்ந்து கொள்ள இது மனிதக்காதல் அல்ல
அதையும் தாண்டிப் புனிதமானது . . .

என்று சொல்லி என்னை குணாவைப் போல ஒரு மன நோயாளியாக்க விரும்பவில்லை. நானும் காதல் செய்கிறேன் ஆனால் எனக்கு என்னுடைய காதலே உலகில் முதன்மையான காதல். லைலா மஜ்னு, ஷாஜகான் மும்தாஜ், அல்லி அர்ஜீனா போன்றோரது காதலெல்லாம் என் காதலுக்குப் பின்னர்தான்.

நான் இப்படி இருக்க ரோஜாச் செடியை இதயத்திலிருந்து இழுத்து எடுத்தால் எப்படி இருக்குமோ, முட்கள் கிழித்து வரும் வேதனை எப்படி இருக்குமோ அப்படி ஒன்றை நேற்று அவன் சொன்னான். "வெடிங்கிற்குப் பிறகு சிக்கலெண்டா மற்றவை மாதிரி இருக்க மாட்டேன் டிவோர்ஸ் பண்ணிட்டுப் போயிடுவன் ஓகே"

ஏனோ அவன் மேல் எனக்குக் கோவம் வரவில்லை. பொதுவாக அவன் மேல் எனக்கு கோவம் வருவதுமில்லை. ஒரு ஆறுதலுக்காக என் நண்பன் சொன்னது போல முகக் கண்ணாடியைப் பார்த்துக் கொண்டேன் என்னைப் பார்க்க எனக்கே சிரிப்பு வந்தது.

பெண்ணை நம்பிப் பிறந்தபோதே தொப்புள் கொடிகள்
அறுபடுமே

மண்ணை நம்பும் மாமரம் ஓர் நாள் மாபெரும் புயலில்
வேரறுமே

என்னை நம்பும் உறுப்புகள் கூட ஒரு நாள்
என்னைக் கைவிடுமே

வெறும் பெண்ணை மட்டும் நம்பும் நம்பகம் பிண
நாள் வரையில் பின்வருமா ?

HAPPY VALENTINES DAY

-சுக.பாலா

SHOP FOR LEASE FOR SALE
SW19 Collierswood High Streetஇல் Shop lease for sale.
Contact: 07960 761 606

**Receptionist Wanted (Full Time)**
Must be an experienced receptionist, have excellent communication and customer service skills with good IT skills and a good command of the English and Tamil language.
Closing Date: 23/02/07
Contact: 020 8900 1378 / E-mail: bhavana@orientalfoodsltd.com

**Domestic Assistant Wanted**
பிரசவம் பார்க்க பெண் உதவியாளர் தேவை. தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:
07894 202 858

**Photographic Business for Sale**
South west London, SW3
For Further Details Please Contact:
Sriskantharaja on
020 7376 5674 / 020 8554 1947

**PRIVATE TUITION – MATHS**
•For 11+ Maths •For year 7 to GCSE Maths •A/Level Maths
Area Covered:
Kingston, Sutton, Wimbledon, Croydon, Wandsworth, Balham
By: Rav BSc (Hons) MSc (Eng) Tel: 07961 111 945


**Room for Let**
Double room ஒன்று வாடகைக்கு உண்டு.
North cheam area.
தொடர்புகளுக்கு: 07974 118 190

**Warehouse to Rent**
1200 square feet upstairs room.
Storage racks fitted.
In Hounslow / Isleworth area
Contact:
Kannan 020 8758 0100 / 07939 576 644

ஒரு பேப்பர் ORU PAPER
உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £25 மட்டுமே!
**SUBSCRIPTION FORM**
Name:
Address :
Postcode:
Telephone:
Email:
மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £25 க்கு "Jasmine Studio Ltd." ன் பெயரில் காசோலையினையும், Oru Paper, 45B Crusoe Road, Mitcham, Surrey CR4 3LJ, என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# KIDS பட்டம்

## Becks – Is he really worth the money?



David Beckham now 31 years old, moved to American soccer team LA Galaxy getting $128m in 5 years, that's 491,000 a week ( much more than your parents probably get in a year. )

The England star rised to fame at his time at Manchester United. He was then disgraced after a red card in World Cup 1998. He was then the Golden Boy of England, a spectacular free kick against Greece, the reason why. He then moved to Spanish giants Real Madrid and made a promising start, but he soon fell and Manchester United definitely got the best side of 25 million ( amount paid for Beckham's services by Madrid.)

Where it all wrong?

Well after scoring a free kick for England to make them progress to the quarter finals, it all went downhill. After a quite ineffective start to the Portugal quarter final he got injured. Though he wanted to play, it was big injury and so it proved. He went off and watched brave England crash out on – you guessed it – penalties. A few days later, after he resigned from captain. However, he expected to still be an England player, just not a captain. But with England have many injuries he was expected to play a friendly v Greece. However, he was not even in the squad, Manchester United reserve Kieran Richardson even beat him to a place. McClaren is quoted to have said he wants young talent in his squad rather than veterans. At 94 appearances for England, it seems his desire to get a century is beyond doubt, 95 even seems impossible.

Not only weren't things going his wise or his country. His club Real Madrid were constantly dropping him. He was now a " benchwarmer." His former United team Ruud Van Nistelrooy joined him, labelling him as a reason he wanted to join. Well he can't honestly say that now. Beckham only made 5 appearances and scored. He gave good performances ,but new signing Jose Antonio Reyes was favoured. With Beckham annoyed ,clubs around the world were getting out the money of their piggybanks. Bolton and Blackburn from England, Inter Milan, AC Milan, Roma and Juventus from Italy, Lyon and Marseille from France were all interested. But bizarrely, he reject Inter Milan and AC Milan for LA Galaxy.

What happens now?

Well he actually plays for LA Galaxy June this year. For the rest of the current season he is a Real Madrid player. He will earn a whopping $128m in 5 years at the club. He has tried to leave Madrid earlier but Madrid have forbidden him. He has taken such drastic measures ever since Madrid boss Capello said he would never play again, and chairman Ramon Caledron branded him a "cheap Hollywood actor."

***By: cheran MG (11)***

## Colouring



Why not enter our colouring competition? Simply colour me in and send it to *ORU PAPER* and you could be the lucky winner of a water colouring kit.

The winner will be published in the next issue.

Last week's winner: ***Jasmini Kumaran (Age 6) from Scarborough.***

Last week's runners up -

***Seyon Nagulan (Age 5)***
*Montreal, Quebec*

***Suwaraka Thevan (Age 7)***
*Markham, Ont*

***Nilavini Sooriyajevan (Age 6)***
*Toronto, Ont*

***Yalini Kandiah (Age 8)***
*Scarborough, Ont*

***Dilani Ramachandran (Age 7)***
*Missisauga, Ont*

***Lambo Saravanan (Age 5)***
*Ottawa, Ont*

***Aarani Sivakumar (Age 5)***
*Ilford, Essex*

***Ayshvaan T (Age 5)***
*Kenton, London*

## Starting Taekwondo



Starting taekwondo can be a little hard, but as you go through it , it gets easier. It's good for self - defence and all kind of blockings. Taekwondo is famous for its hand and foot. Based on the hand and foot of punches and kicks. Also, it brings you good exercise and more flexibility. Taekwondo has to be done with hard work and a lot of effort. You have encouragements of other people as well as learning. It can be practised anywhere but ONLY to be used for emergency's. Just playing around in school fields doesn't help.

You take it more serious. If your having a joke around with others, then my advice is that you don't use kicks and punches while having a joke because it may become serious. So just beware if you are starting taekwondo just remember that you only use it for emergency's. Either if you need more advice or help please email me at : *kids@orupaper.com*

***By Tharshia Ravindrakumaran (11)***

## The Snow

*Snow, it is so gracious*
*It looks so vivacious*
*Can you believe that snow?*
*Falling high and low*

*Morning, jump out of bed*
*Look at the window pane*
*There's snow, go insane*
*Jump , leap, but don't strain*

*Smiles on children and even grown ups*
*Dodging, weaving, with hot cocoa in your cups*
*Laughing, grinning, being jolly*
*Like Xmas, decorating holly*

*Snowballs, snowmen, whatever you can carve*
*Woolly hats, huge gloves, and a Tartan scarf*
*Little workers need food, otherwise they'll starve*
*Being happy is sharing, here's some loaf, I'll halve*

*Prancing, skipping, to school*
*Wearing a knitted jumper, made out of cotton wool*
*Looking, glancing at the smile of your mates'*
*Run, play with snow, don't be late*


*Teachers, subs, students all join in*
*Nobody's a loser, we all win*
*It's all good, it's all fun*
*Acting like it's the World Cup we won*

*Nature, Mother Nature the creator*
*I'll give it ten in my fun – rater*
*Nature surrounds us*
*So that's what causing the science class fuss*

*Now come on get in a line*
*Getting in to school, nobody whines*
*Brr! I'm so cold, I need to be burning*
*Now let's engage in some serious learning!*

***By Cheran***

My name is Kanushana
I am 10 years old
I am in level 1 in tamil
I have one sister and one brother.
I also learn dance in tamil school.
My favourite animal is PUPPIES
My favourite sports is SWIMMING.



## Riddle

I am slim and tall, Many find me desirable and appealing. They touch me and I give a false good feeling. Once I shine in splendor, But only once and then no more. For many I am "to die for". What am I?

**Sadly, I am a cigar.**

## Tongue Twister

**I need not your needles, they're needless to me;**
**For kneading of noodles, 'twere needless, you see;**
**But did my neat knickers but need to be kneed,**
**I then should have need of your needles indeed.**

***By Tharshia.R (11)***

## Word Search

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| V | I | L | A | U | O | P | C | X | T |
| V | A | A | L | A | I | U | K | A | R |
| S | O | M | P | C | K | O | I | Y | A |
| P | X | A | T | U | K | L | M | R | D |
| A | P | A | P | P | A | V | F | T | N |
| L | G | U | F | U | N | B | R | A | I |
| A | N | W | S | O | H | I | Q | Y | Z |
| A | I | B | I | L | M | A | D | P | E |
| O | E | N | I | L | M | A | P | O | D |
| E | L | J | E | U | A | R | S | M | R |

**Hidden Words:**
**Subject: Tamil Fruits**
MAA, PALA, VAALAI, KOIYA, PAPPA, VILA

*Submitted by:*
***By: Rathan Thivaharan (Age 7)*** *(Gantshill, Essex)*

## Shilpa Shetty win the title of celebrity big brother 2007



Shilpa Shetty a bollywood actress has won the celebrity big brother 2007 after battling through few issues. I am so happy to see Shilpa Shetty won the celebrity big brother 2007. I watched all the episodes of big brother on channel 4. I did really feel sorry for Shilpa of what was happening to her, but already I knew that Shilpa would win the celebrity big brother 2007. I only watched few of her films and was surprised to see her in the big brother show.(Which obviously mean I was happy to see her in the big brother show). I have to say Jermaine Jackson (Michael Jackson's brother) deserved to be the runner up and most of all Shilpa deserved to be the winner. Looking at all the main parts of celebrity big brother on television I had an own judgement of people. I thought of Shilpa as a person who does not swear , a person who uses their heart and moves away from problem. I thought of Jermaine as a kind helpful person who is good at advising, is a person who knows about the modern world and how to move on in the modern world. Some years I am not really interested in big brother but just watch it but this year I was really interested and had my fingers crossed for Shilpa Shetty to win a Jermaine to come runners up and that's what just happened. CONGRATULATION SHILPA SHETTY!!! IF YOU THE BEST OF LUCK IN THE FUTURE!!!!

***By Rishiyan Ravindrakumaran(13)***

*(Enfield, London)*

## English Sport News

### Snooker



In the U.K. championship Ronnie O'Sullivan defeated young Ding Junhui 10-3 to lift the championship. After his controversial walk out, where he conceded against Stephen Hendry he has been heavily criticised. But the "The Rocket" thrashed 19 year old Ding Junhui. Sadly Ding walked out on one of the sessions after crowd abuse.

### Football/Soccer

Manchester United missed a big chance to go 9 points clear at the top with a defeat at Arsenal. Arsenal look set for a first defeat at their new stadium when Wayne Rooney scored a header. But in the last 11 minutes ( plus stoppages) it all changed, Robin Van Persie and Theirry Henry both scored to give United a late defeat. Chelsea also lost to Liverpool 2-0. Dirk Kuyt scored after a neat interchange by Crouch, and a stunner from Jermaine Pennant gave Liverpool a win. In France Marseille beat Auxeure 3-1, winger Ribery get two goals. In Germany Bayern Munich thrashed FC Mainz 0-4 , but they are still 3 points behind tabletoppers Werder Bremen

### Tennis

Young Scot Andy Murray gave some great performances but sadly he was defeated by world number 2, Spaniard Nadal, he went to the quarter final, only to be beaten by an inspired Gonzalez.

## Foreign Sport News

### American Football

Lane Kiffin was appointed the new boss of Oakland Raiders. He is now the youngest ever manager in the National Soccer League at 31 years.

### Baseball

Philadelphia star Chase Utley has signed a new 7 year contract weighing up to $85,000,000.

***By Cheran Gabiratnam (Age11)***






***By: Ayshvaan Thevaraja (Age 5)***
*(Kenton)*







***By: Meran Annalingam (Year 5, Colindale Primary School)***





***By: N. Yathoosun (Age 9)***
*from Redhill*






"தாயகக் காற்று 2007"

வெண்புறா அமைப்பினால் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி தாயகப் பாடல் போட்டி நிகழ்ச்சி நடத்தப்படவுள்ளது.

15 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள், பெண்கள் கலந்துகொள்ளும் இந்தப் பாடல் போட்டி நிகழ்ச்சிக்கு போட்டியாளர்கள் வரவேற்கப்படுகின்றனர்.

விண்ணப்ப படிவங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி


**White Pigeon**
No -175, Tooting High Street,
Tooting,
London SW17 0SZ

தொலைபேசி இலக்கம்
**02086 724 100**

முடிவு திகதியான மார்ச் மாதம் 1ஆம் திகதிக்கு பின்னர் எமது கைக்கு கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

நீங்கள் தெரிவு செய்யும் பாடல்கள் நிச்சயமாக தாயகத்தின் இயற்கை வளங்களை அல்லது மக்களின் அவலங்களைப் பிரதிபலிப்பனவாக இருக்க வேண்டும். பாடல்களை நீங்கள் இயற்றி இசையமைத்தும் பாடலாம்.

Registered charity 1107434




**AIR SAVERS TRAVEL**
IATA
» We Provide Insurance Service to our customers
» We are ATOL bonded for the protection of our clients
Open 7 Days a week all major credit cards accepted
உலகமெல்லாம் பறந்து சென்றுவர...... நம்பிக்கையான நாணயமுள்ள நல்ல ஏஜெண்டுகளை நாடுங்கள்!
**AIR SAVERS TRAVEL**
90 Leamington Avenue, Morden, Surrey, SM4 4DN
ATOL
Tel: 020 8540 2226
Fax: 020 8540 6131
Mob: 07 961 401 260

**PERMA**
**INTERNATIONAL SHIPPING LTD**
உங்கள் தனிப்பட்ட பாவனைப்பொருட்கள், வாகனங்கள், வீட்டுப் பாவனைப்பொருட்கள், இயந்திர உபகரணங்கள், போன்றவற்றை தாயகத்திற்கோ பிற நாடுகளுக்கோ அனுப்ப விரும்புகிறீர்களா?
இங்கிலாந்தின் எப்பகுதியாயினும் உங்கள் பொருட்களை எம்மால் சேகரித்து பாதுகாப்புடன் வைத்திருந்து அனுப்ப முடியும் தரமான பிரத்தியேக சேவைக்கு நாடவேண்டிய இடம்
**தொடர்புகளுக்கு: சிவம்**
45C Crusoe Road, Mitcham, Surrey CR4 3AL
Tel: 020 8646 5222, Mobile: 07939 550397

# காக்கை வன்னியர்களே! காது கொடுத்துக் கேளுங்கள்

சோரம் போனவர்களின் கூடாரமான தேனீ. கொம்மில் திரு. சிவநேசன் என்பவரால் ஒரு பேப்பரின் மீதும் அதன் கட்டுரையாளர்கள் ஆசிரியர் மீதும் ஒரு தாக்குதல் நடாத்தப் பட்டுள்ளது.

'கனடாவில் புற்றீசல்களாகப் பெருகி வரும் தமிழ்ப்பத்திரிகைகள்' என்று ஒட்டுமொத்தமாக கனடாவில் இருந்து வெளிவரும் தமிழ்ப் பத்திரிகைகள் மீது தாக்குதல் தொடுத்துள்ளார். கனடாவில் எண்ணி ஒரு முப்பது தமிழ்ப் பத்திரிகைகள் வெளிவருமா? அதிலும் அரை வாசிப் பத்திரிகைகள் விளம்பரத் தட்டிகளாக வெளிவரும் போது மீதி இருக்கும் பத்துப் பதினைந்து பத்திரிகைகள் மூன்று இலட்சம் தமிழ்க் கனேடியர்களின் அறிவுத் தாகத்தைப் பூர்த்தி செய்யப் போதுமானதா? என்ற கேள்வி இங்கு எழுகின்றது.

போராட்ட இலக்கியங்களையும் புலம் பெயர் இலக்கியங்களையும் பதிவு செய்ய வேண்டிய கடப்பாடுடைய பத்திரிகைகளின் மேல் இவருக்கு என்ன கோபம்? தேனீ. கொம் போன்ற சிண்டுமுடியும் பேரினவாதிகளின் கால் பிடித்துக் கதை விடும் இவர்களின் புலுடாக்கள் மட்டுமே தமிழ் மக்களின் உணர்வுகளைத் திருப்தி செய்யப் போதுமானது என்று இவர் உண்மையிலேயே நம்புகின்றாரா?

வன்முறையைக் காதலிக்கும் அரக்கர்களின் கரங்களால் சிதைக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சிறுவர்களின் வங்காலைப் படு கொலையையும் வள்ளி புனப் பள்ளிச் சிறுமி களின் சிதைந்து சின்னாபின்னமாக்கப்பட்ட குருதி தோய்ந்த உடல்களைப் பிரசுரித்து சர்வ தேசத்தின் மனச்சாட்சியை உலுக்க எடுத்த நடவடிக்கைகளையும் ஏதோ செய்யக் கூடாததைச் செய்தது போல இவர் சாடியுள்ளார். இவர்கள் கால் பிடிக்கும் எஜமானர் களின் மனச்சிதைவை சர்வதேசமே கண்டனம் செய்த படங்களை வெளியிட்டது இவரின் மனச்சாட்சியைக் குத்தியதோ? குதறியதோ?

இவ்வகையான படங்களை வெளியிடு பவர்களுக்கு சிறைத் தண்டனை கூட கிடைக்கும் என்று வேறு பயமுறுத்த முயல் கின்றார். பொதுமக்களின் மனதைப் பாதிக்கும் இவ்வகையான கொடூரப் படங்களைக் காட்சிப்படுத்துவது என்று வேறு வியாக் கியானம் கொடுக்க முற்படுகின்றார்.

அவ்வகையான கொடூரங்களை விதைப்பது இவர்கள் வால்பிடிக்கும் புத்தி பேதலித்த சிங்களப் பேரினவாதிகளும் அவர்களின் மனச் சிதைவுகளான இராணுவ மந்தைகளும் இவர்கள் 'தோழர்களாக' உறவு கொண்டாடும் முன்னைநாள்களும் இவர்களின் நண்பர் களுமான டம்மிகளும் என்பதை வசதியாக மறந்து விட்டதுதான் முரண்நகை

இன்று ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் கொடிய குண்டுகளால் குதறி எறியப்பட்டு இரத்தமும் நிணமுமாக சதைக் குவியல்களாக சிதைக்கப் பட்ட மனித உடலங்களை கனடாவின் முன்னணி ஊடகங்களுக்குப் பிரசுரிக்கக் கொடுத்து பொது மக்களின் மனதைப் பாதித்து தூக்கத்தைக் கெடுக்கும் கைங்கர்யத்தையும் இதே தமிழ்ப் பத்திரிகைகள் தான் செய்கின்றன என்று சாதிக்க விளைவாரோ? என்னவோ?

உங்கள் தனிப்பட்ட இலாபத்திற்காகவும் அதற்கான செஞ்சோற்றுக்கடன் தீர்ப்பதற்கும் எஜமான விசுவாசம் காட்டுவதற்கும் உங்கள் துப்பாக்கிகளை தமிழ்த் தேசியத்தின் எழுச்சி மிக்க விடுதலையை நோக்கித் திருப்பிப் பிடித்திருப்பதை எந்த வகையில் நியாயப் படுத்தப்போகின்றீர்கள்? வந்த நோக்கம் மறந்து வாழும் காரணம் இழந்து எதைச் சாதிப்பதாக நினைத்து எச்சில் உமிழ்கின்றீர்கள்?

வங்கிகளில் கொள்ளையடித்து முகவர் கொடுத்து சுவர்வரி எழுதி முடிந்தால் பிடித்துக் கொள் என்று முழக்கமிட்டபோது ...ஆஹா.... ஆஹா.... இவர்களன்றோ ஆண்மை மி க்கவர்கள் ...எங்கள் அடிமை விலங்கொடித்து சுதந்திரத் தமிழீழம் அமைக்கப் போகும் எங்கள் பிள்ளைகள் என்று ஆரத்தழுவி அமுதூட்டிய மக்கள் மீதல்லவா அதே சோற் றுக்காக உங்கள் துப்பாக்கிகள் இன்று திரும்பி நிற்கின்றன.

யாரிடம் குறை இல்லை? யாரிடம் நிறை இல்லை?..... ஏதேதோ காரணம் சொல்லி எதிரியிடம் சரணடைந்து அவன் கால் கழுவி வாய் கிழியக் கத்துகின்றீர்களே...... உங்களுடன் உண்டு உறங்கி எழுந்த எத்தனை தோழர்கள் யார் குத்தினாலும் அரிசியானால் சரி என்று தமிழீழச் சுதந்திரம் அன்றி வேறு வேண்டும் ஈனப் பிழைப்பு எடுக்காது வாளாவிருக்கின்றார்களே... ஏன் உங்களால் முடியவில்லை.?.....

அம்பு வில்லுக் காட்டி ஆள் விரட்டிய 16 ஆம் நூற்றாண்டு தமிழினம் என்று எண்ணிக் கொண்டு காட்டிக் கொடுக்கக் துணிந்தீரா? அந்த ஈனச் சரித்திரம் அன்றுடன் போகட்டும். கடந்தவைகளில் இருந்து பாடம் படித்துக் கொள்வோம். அன்றும் இன்றும் நீங்களும் தமிழ் மக்களின் பிள்ளைகளே.

உங்களை மன்னித்து ஏற்றுக் கொள்ள மக்கள் தயாராகவே இருக்கின்றார்கள். எதிரியின் கால்களில் மிதிபட்டுக் கிடப்பதை விட தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்பது என்பது வெட்கப்படவோ வேதனைப்படவோ வேண்டிய செயலல்லவே...

ஒரு சில காரணங்களுக்காக ஒரு சிலரில் கொண்ட கோபத்தினால் அவர்களுக்கெதிராக செயல் படுவதாக எண்ணிக் கொண்டு ஒரு தேசிய இனத்தின் விடுதலைக்கெதிராக அல்லவா உங்கள் துப்பாக்கிகள் சன்னங் களைக் கக்குகின்றன. இந்த கருத்தில்லாத வங்குரோத்துத் தனத்தை எவ்வாறு நியாயப் படுத்துகின்றீர்கள்?

எதிரியின் கால்களில் மண்டியிடுவதை விட 'சும்மா' இருப்பது கூட எவ்வளவோ மேல் அல்லவா? ஒவ்வொருவரின் இடத்தையும் அவர்களாலன்றி வேறு எவராலும் நிரப்ப முடியாது என்பதை நீங்கள் அறியாதவர்கள் அல்ல. தமிழ்த் தேசிய இனத்தில் உங்களுக்குள்ள இடத்தை உங்களால்த் தான் நிரப்ப முடியும்.

தமிழ்ச் சமூகத்தின் அங்கமான உங்களுக்காக அந்த இடம் என்றுமே காத்துக் கிடக்கின்றது. சிவநேசன் போன்றவர்களின் திறந்த வெளிப்படையான கருத்துப் பரிமாற்றம் நிச்சயமான ஒரு மாறுதலைக் கொண்டு வரும். அது வழி தவறிப் போன ஆடுகளாக இருக்கும் உங்களை மீண்டும் எங்களிடம் கொண்டு வந்து சேர்க்கும்.

உங்கள் வருகைக்காக திறந்த மனதுடன் தமிழ் மக்கள் நிறைந்த அன்பு சுமந்து காத்திருக்கின்றார்கள் என்பதை நினைவி ருத்திக் கொள்ளுங்கள். நீங்களும் நாங்களும் சேர்ந்துதான் இங்கு நாம் ஆகின்றோம்.

நாம் சேர்ந்தே எழுந்து நின்றால் நம் நாடு எங்களுக்கே என்பதை உரக்கவே சிந்தனை செய்வோம்.

*- எல்லாள மஹாராஜா*

## உன்னையே நீ எண்ணி ...

கண்களை மூடுங்கள். உங்களைப் பற்றி கொஞ்சம் எண்ணிப் பாருங்கள். குறிப்பாக உங்கள் முகத்தை நினைவில் நிறுத்துங்கள். இப்பொழுது கண்களை திறக்கவும்.

எப்படியிருக்கிறது? ஒரு பேய் படம் பார்த்த எஃபெக்ட் இருக்குமே!!!

*- யோசிப்பவர்*

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி .....



திரு. ஜெயராசா தவக்குமார்

கரவெட்டி துன்னாலை தெற்கை பிறப்பிடமாகவும், பிரான்சை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திரு. ஜெயராசா தவக்குமார் அவர்கள் 05.01.2007 அன்று பிரான்சில் காலமானார்.

இவர் திரு திருமதி ஜெயராசா தவமணிதேவியின் அன்புமகனும், சிவகுமார் (நோர்வே), விஜயகுமாரி (லண்டன்), ஜெயக்குமார் (லண்டன்), யோகேஸ்குமார் (பிரான்ஸ்), உதயகுமார் (பிரான்ஸ்), அசோக்குமார் (லண்டன்), வசந்தகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வராஜா, கஸ்தூரிதேவி, ஜெயமலர், பவானி, சித்திரா, ரதி, கிருஸ்ணதேவி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

விநோதன், விஜிதன், விதூர்ஷன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவானி, சிந்துயன், மிதுஷா, பானுஷன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், அனோஜன், அஜித்தன், மையூரன், சிந்துஜன் ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் ஆவார்.

அமோகமாக இருக்கிறது. அதுமட்டுமன்றி இங்கேயுள்ள சிறுவர்களிடம்ஆர்வம், திறமை என்பவை அதிகமாகவே இருக்கிறது. இங்கே ஒவ்வொரு குடும்பத்திலும் ஆகக் குறைந்த ஒருவராவது ஏதோ ஒரு கலையில் தேர்ச்சி பெற்றவராக இருக்கிறார்கள். இது ஆச்சரித்தையும் ஆனந்தத்தையும் தருகிறது.

*புலத்திலே அரங்கேற்றத்தை மையப்படுத்தி கலைகளைப் பயில்கிறார்கள் என்ற குற்றச்சாட்டுப் பற்றி*

அது உண்மை. பாடசாலையில் Extra curricualr activitesஇற்கான புள்ளிகளைக் பெறுவதற்காகவும் அரங்கேற்றம் செய்வதற்காகவும் பழக வருபவர்களே அதிகமாக இருக்கிறார்கள். ஆனால் அதிஸ்டவசமாக நான் அரங்கேற்றம் செய்த 15க்கு மேற்பட்ட மாணவர்கள் தொடர்ந்து என்னிடம் பயின்று வருகிறார்கள். அத்துடன் கச்சேரிகளுக்கும் வாசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

*மிருதங்கம் போன்ற கலைகளுக்கு ஊடகங்கள் போதிய ஆதரவைத் தருகின்றன என்று கூற முடியுமா?*

அப்படிக் கூற முடியாது. ஆனால் இங்கே இரண்டு பக்கங்கள் உள்ளன. இந்த நாடுகளில் ஊடகங்கள் வர்த்தக நோக்கோடு தான் இயங்க வேண்டியிருக்கிறது. மக்கள் விரும்புகின்ற நிகழ்ச்சிகளையே ஒலிபரப்ப ஒளிபரப்ப வேண்டியிருக்கிறது. நீண்ட நேர கர்நாடகக் கச்சேரியைக் கேட்கின்ற மனநிலையில் இருப்பவர்களின் எண்ணிக்கையும் குறைவாக இருப்பதால் ஊடகங்களும் மணிக்கணக்கில் இந்த நிகழ்ச்சிகளை ஒலிபரப்ப தயக்கம் காட்டக் கூடும். ஆனால் இங்கே ஆர்வத்தோடு பயிலுகின்ற சிறார்களை ஊக்கப்படுத்தும் விதமாக குறைந்தது அரைமணி நேர நிகழ்ச்சியை தினம்தோறும் நடத்தி இளங் கலைஞர்களுக்கு சந்தர்ப்பம் கொடுத்து நல்ல கலைஞர்கள் ஊக்கப்படுத்துவது நல்லது.

*ஒரு தோல் வாத்தியக் கருவியை பழகினால் ஏனைய கருவிகளை பயிற்சியின்றி வாசிக்கலாம் என்பது உண்மையா?*

80% உண்மை. மிருதங்கத்தைப் ராஜவாத்தியம் என்பார்கள். இதைப் பயின்றால் சில பயிற்சிளையும் மாற்றங்களையும் செய்வதன் மூலம் மிருதங்கம், கஞ்சிரா, மோர்சிங் கடம் போன்ற தோல் வாத்தியக் கருவிகளையும் வாசிக்கலாம்.

*தமிழ்க் கலைகளைக் கற்கின்ற அளவிற்கு தமிழைப் படிப்பதிலோ பேசுவதிலோ இங்குள்ள சிறுவர்கள் ஆர்வம் காட்டுவதில்லை என்ற கருத்துத் தொடர்பாக?*

உண்மைதான். இதற்கு பிள்ளைகளை விட பெற்றோரின் மீதே தவறு சொல்ல வேண்டும். காரணம் பெற்றோர் கூட பிள்ளைகளுடன் தமிழில் கதைப்பது குறைந்து வருகிறது. இதற்கு தாயகத்தில் இருந்து வந்த எமக்கு இயல்பாயுள்ள ஆங்கில மோகமும் ஒரு காரணம்.

உதாரணமாக என்னையே எடுத்துக் கொண்டால் என்னுடைய மனைவி இங்கே பிறந்து வளர்ந்தவர். அவர் வீட்டில் பிள்ளைகளுடன் நிறையத் தமிழிலேயே பேசுவார். ஆனால் நான் தாயகத்தில் இருந்து வந்தவன். ஆனால் நான் குழந்தைகளுடன் பேசும் போது அடிக்கடி ஆங்கிலத்தையே உபயோகிக்கிறேன்.

அடுத்ததாக அவசரமாக இயங்க வேண்டிய இந்த நாட்டிலே விரைவாக அவர்களுடன் கருத்துக்களைப் பகிர்வதற்கு ஆங்கிலம் இலகுவாக இருப்பதும் நம்மில் பலர் பிள்ளைகளுடன் ஆங்கிலத்தில் பேசக் காரணமாக இருக்கலாம். உதாரணமாக நாம் அவர்களுடன் தமிழில் பேசுகின்ற போது சிலவேளைகளில் அவர்களால் உடனடியாகப் புரிந்து கொள்ள முடிவதில்லை. அப்போது மீண்டும் அவர்களுக்கு அதனைச் சொல்ல வேண்டி இருக்கிறது. ஆங்கிலத்தில் பேசினால் இந்தச் சிரமம் இல்லை.

ஆனால் எம் குழந்தைகள் தமிழ் பேச வேண்டுமென்றால் நாம் அவர்களுடன் தமிழிலேயே பேசியாக வேண்டும்.

*ஒரு பேப்பர் குறித்த உங்களுடைய பார்வை?*


நிறைந்த தகவல்களை உள்ளடக்கிய அருமையான பத்திரிகை. அதுமட்டுமன்றி ஆங்கிலத்திலும் ஆக்கங்கள் வந்து கொண்டிருப்பது புலத்திலே பிறந்து வளருகின்ற சிறுவர்களைக் கூட இந்தப் பேப்பரைப் பார்க்க வைத்திருக்கிறது.

ஆக அனைவரும் வாசிக்கக் கூடிய நல்ல பகுதி. இந்தப் பணி தொடர வேண்டும் என்பது தான் எங்களுடைய விருப்பம்.

- *மணிவாசகன்*

**Kerala Ayurvedic Health Clinic** (Near Wembley)

1 Odean Parade, Sudbury Heights Avenue, Greenford, Middlesex UB6 0NA
5 mins walk from Sudbury Town - Piccadly Line





- Massage Therapies by experienced and highly skilled therapists
- Treatment is designed around your individual health needs
- Safe and effective Ayurveda supplements/ medicines for your needs
- Only natural medicines are used
- No side effects at all
- Wide range of therapies

20% SPECIAL CHRISTMAS DISCOUNT

▲ Arthritis
▲ Frozen Shoulder
▲ High Blood Pressure
▲ Pulled Muscles
▲ High Cholesterol
▲ Trapped Nerve
▲ Paralytic Conditions
▲ Certain Skin Conditions
▲ Stress and Strain
▲ Back Pain
▲ Whiplash
▲ Obesity
▲ Joint Pain
▲ Digestive Disorders
▲ Diabetes
▲ Sleeplessness
▲ Stiffness
▲ Migraine

**FREE Consultation**

Authentic and Effective Kerala Ayurvedic Treatments
Qualified and Registered Ayurvedic Physicians
Affordable Prices

உங்கள் நோய்க்கு ஏற்ப அனுபவம் மிக்க பிரத்தியேக ஆலோசனைகளுக்கும், மருத்துவ சிகிச்சைக்கும் கேரளா ஆயுர்வேத மூலிகை மருத்துவரை நாடுங்கள்



GIFT VOUCHERS AVAILABLE

இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்

- Providing Free Steam Bath, Shower, Towels, Shampoo etc.,
- Male and Female therapists available
- Can speak in Hindi Tamil or English & Malayalam
- Free Parking

**Call 020 8902 1104 or 020 8902 1707**

மட்டைக் கிளப்பானின்....

# அலசுவாரம் - 27

மட்டக்களப்பின் அருங்கலை கூத்தை வளர்க்க
முயன்றிடுவோம் – அதை வட்டக்களரியை விட்(டு)
அரங்காட வழிபல கண்டிடுவோம்

எட்டுத் திசையும் புகழக் கரகம்
சிலம்பங்களாடிடுவோம் – மழை கொட்டிடும்
காலமறிந்து சிறப்புறு கொம்பு முறித்திடுவோம்

என்று மிகச்சிறு வயதில் ஏதோவோர் விழாவுக்காக நான் எழுதிய கவிதை. இத்தொடரில் மட்டக்களப்பின் சமய கலாச்சாரம் பற்றி எழுதும் போது நினைவில் வருகின்றது. சென்றமுறை மட்டக்களப்புப் பிரதேசத்தில் நடைபெறும் கொம்பு முறித்தல் அல்லது கொம்பு விளையாட்டுப் பற்றி சில தகவல்கள் இப்பந்திகளில் எழுதப்பட்டன. அதன் தொடர்ச்சியாக மேலும் விபரங்கள் இங்கு தரப்படுகின்றன.

கொம்பு முறித்தலுக்காக தேர்வு செய்யப்படும் மரத்தின் பெயர் கரையாக்கு எனப்படும். இது கருவீரம், வெட்சி என்னும் பெயர்களால் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. மரக்கிளைகளிலிருந்து வெட்டப்படும் கொம்புகள் மேலும் உறுதியாவதற்காக பனிச்சை எனப்படும் காட்டு மங்குஸ்தான் மரக் காய்களின் பசை பூசப்பட்டு நன்கு காய வைக்கப்படும். இக் கொம்புகள் பின்னர் முறுக்கேறிய கயிறுகளால் பலமான இரண்டு தடிகளுக்கிடையில் வைத்துக் கட்டப்பட்டு விளையாட்டுக்காக எடுத்துச் செல்லப்படும்.

கொம்பு முறித்தலின் முன் போர்த்தேங்காயடித்தல் வழமையாகும். மட்டக்களப்புப் பிரதேசங்களில் வளரும் சிறிய காய்களைக் காய்க்கும் ஒரு வகைத் தென்னையிலிருந்தே போர்த் தேங்காய்கள் பெறப்படுகின்றன. ஒருவர் ஒரு தேங்காயை உருட்டி விட எதிர்த் தரப்பிலுள்ளவர் தனது தேங்காயால் உருட்டப்பட்ட தேங்காயின் மீது ஓங்கி எறிவார். அவரவர் தரப்பில் உடையும் தேங்காய்களை எதிர்த்தரப்பார் சேமித்து இறுதியில் யார்பக்கத் தேங்காய்கள் அதிகம் உடைந்துள்ளனவோ அவர்கள் தோற்றவர்களாகக் கணிக்கப்படுவர். போர்த் தேங்காயடித்து முடிந்ததும் முதற்கொம்பை முறித்துவிழா ஆரம்பித்துவைக்கப்படும். இந்த முதற் கொம்பை கொழுக்கொம்பு என்று கூறுவர். விழாவின் நிறைவின் போது முறிக்கப்படுவது தண்ணீர்க் கொம்பு எனப்புடும். இவற்றுடன் கொம்புத் தட்டுக் கொம்பு, கூடாரக் கொம்பு, ஏடகக் கொம்பு என்பன உட்பட மொத்தம் ஐந்து வகைக் கொம்புகள் கொம்பு விளையாட்டில் பயன்படுத்தப் படுகின்றன. விரிவஞ்சி அவை பற்றிய மேலதிக விளக்கங்களை விட்டு மேற்செல்வோம்.

முதலில் உடைக்கப்படும் தேங்காயும், முதல் முறிக்கப்படும் கொம்பும் வடசேரியினுடையதாக அதாவது வெற்றி கண்ணகை அம்மனின் தென்சேரிக்கேயுரியதாகப் பார்த்துக்கொள்வது மரபு. தவறின் அது அவ்வாண்டிற்கான நற்சகுனமாகக் கருதப்படமாட்டாது. ஆதலால் வடசேரியார் எப்போதும் ஓடு பலமிலாத தேங்காயையே தங்கள் முதற் தேங்காயாக உருட்டுவதும், பலங்குறைந்த கொம்பையே முதற் கொம்பாக்கி முறியக் கொடுப்பதும் முறைமையாகும். அதன் பின்னர் போட்டிகள் வெற்றிக்காகவே நடக்கும். எவ்வாறாயினும் தென் சேரியின் வெற்றி அம்மனின் வெற்றியாதலால் அதையே ஊர் விரும்பும். அல்லாவிடில் வென்றவர்கள் தங்கள் வெற்றியைக் கொண்டாடினாலும் அது அவ்வாண்டிற்கான நல்ல சகுனமாகக் கருதப் படுவதில்லை. போதிய மழையின்மையால் வரட்சி, விளைச்சலில் வீழ்ச்சி, கால்நடைகளுக்கு நோய், ஊரில் அம்மை மற்றும் இதர கொள்ளை நோய்களின் அதிகரிப்பு, ஊர் முக்கியஸ்தர்கள் மரணமடைதல் போன்றன அவ்வாண்டில் நிகழுமென ஊர் எதிர்பார்க்கும்.

போர்த் தேங்காயடித்து முதற்கொம்பு முறித்தபின் மறு நாளிலிருந்து ஒவ்வொரு நாளும் கொம்பு முறித்தல் நடக்கும். கொம்பு முறித்த பின் கொம்புகளையும் கண்ணகை அம்மனின் சிலையையும் பூக்களால் நன்கு அலங்கரிக்கப்பட்ட தேரில் வைத்து ஊர்வலமாக எடுத்துச் செல்வர் ஊருக்குப்பொதுவான ஊர்வலமாகையால் அவ்வூர்வலத்தில் கண்ணகையம்மன் பக்திப் பாடல்களான ஊர்சுற்றுக் காவியம், உடுகுச்சிந்து, மழைக்காவியம், கண்கையம்மன் திருவூஞ்சல் போன்றன பாடப்பெறும். ஊர்ச்சந்திகள் வரும்போது சந்திகளில் கரகாட்டம், சிலம்பாட்டம், வசந்தன் எனப்படும் கோலாட்டம் போன்ற நடனங்களைக் குழுக்களாக நின்று ஆடுவர். சிலர் மந்திரங்களை ஓதிச்செல்வதும், சிலர் தெய்வமாடுவதும், சிலர் காவடியாடுவதுமுண்டு. வினோத உடையணிந்து இளைஞர்கள் பைலா நடனமும் செய்வர். சில இடங்களில் பக்திப் பாசுரங்களை அதாவது தேவாரங்களைப் பாடிச் செல்வதுமுண்டு.

கொம்புத் தேர் ஊர்வலம் வரும்போது குடிமக்கள் தத்தம் வீடுகளின் முன்னால் கேற்றடியில் மாவிலை தோரணங்கட்டி நிறை குடம், குத்து விளக்கு போன்ற வற்றையும் வைத்து அம்மனின் தேர் தம் வாயிற்படியில் சில நிமிடங்கள் தரித்துச் செல்லும் வண்ணம் ஒழுங்கு செய்வர். கோயில் நிர்வாகத்திற்காக நிதி சேர்க்கக் குலுக்கிக் கொண்டுவரப்படும் உண்டியலில் தட்சணையும் இடுவர். தேரின் முன்னே ஆடிவருவோரின் குழுத்தலைமையிடமும் தட்சணைகள் சேரும். கொடுக்கப்படும் தட்சணையின் அளவுக்கேற்ப ஆட்டமும் தாளமும் வேகமடைவதோடு தேர் தரித்து நிற்கும் நேரமும் சற்று அதிகரிக்கும். ஊரில் செல்வாக்குப்பெற்ற பசையுள்ள பிரமுகர்களின் வீடுகளுக்கு முன்னால் அவரவர் தகுதிக்கேற்ப தேர் தரித்து நின்று ஆட்டமும் பாட்டும் அதிகரிக்கும் காலமும் வேறுபடும். தேர் விரைந்து சென்று விட்டதெனின் பிரமுகர் கையை இறுக்கிக் கொண்டார் என்பதை அறியலாம். பொதுவாகத் தங்கள் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ள இத்தகைய சந்தர்ப்பங்களில் ஊர்ப் போடிமார்களும் பணக்காரர்களும் முனைவர். ஆடுவோருக்கு அதனால் நல்ல கொண்டாட்டமிருக்கும்.

ஊர்வலத்தில் நடனமாடுவோர் பாடும் பால்கள் நல்ல தாளநடையுடன் கூடிய பக்தி, நகைச்சுவையுணர்வு மிகுந்தவையாகக் காணப்படும். சில பாடல்கள் எதிர்ச்சேரியாரை வம்புக்கிழுக்கும் பாடல்களாகவு மிருக்கும். உதாரணமாக: வீட்டுப் படலை இரவில் திற க்கும் சப்தம் கேட்க தலைவி தோழியை அது யாரென விசாரிக்கிறாள். அதற்குப் படலையைத் திறந்தவன் தலைவியை ஒரு கணிகையாக இழிவு படுத்திப் பதில் கூறுகிறான்.

பால் போல் நிலவெறிக்கப்
படலை திறந்தவன் ஆர் தோழி
நான் தாண்டி தென் சேரியான் – உனக்கு
நாழிப் பணங்கொண் டுலாவுறண்டி

இது வடசேரிப் பெண்களை வம்புக்கிழுக்கும் ஓர் பாடலாகும். இதே பாடலை தென்சேரிப் பெண்களை வம்புக்கிழுக்க நான்தாண்டி வடசேரியான் என்றும் பாடலாம். எனினும் அதே பாடலைப் பாடினால் தமது இயலாமை வெளிப்பட்டுவிடுமென்பதால் வேறுபாடலைப் பாடி எதிர்த்தரப்பாரை மடக்குவர். உதாரணமாக தோற்றுப் போன தென் சேரியை வம்புக்கிழுக்க:

ஆற்றோரம் சிறாம்பி கட்டி
அங்கே நின்று வடமிழுத்து
தோற்று வாறான் தென்சேரியான் அவனைத்
துடைப்பமெடுத்து அடியுங்கடி

*- தொடரும்*

# இல்லந்தோறும் இனிய வாழ்வு

## வெற்றிகரமாக உரையாடும் இரகசியம்

**Dr. பாலேந்திரன்**
*(ஒரு பேப்பருக்காக)*

இன்று வெற்றிகரமாக உரையாடுவது எப்படி என்பது பற்றிப் பார்ப்போம். உரையாடலின் தன்மை முக்கியத்துவம் ஆகியவற்றிற்கு ஏற்ப சிறப்பான ஒரு சூழலைத் தேர்ந்து எடுக்கவேண்டும். மேலும் தகுந்த ஆடைகளை அணிந்துகொள்வதும் சூழ்நிலைக்கு மெருகூட்டுவதாக அமையும்.

உரையாடலின்போது கவனிக்க வேண்டியவை:-

உரையாடலில் சம்பந்தப்பட்டவரின் இனம், மதம், மொழி, கலாச்சாரம், அரசியல், சமூக பொருளாதார அந்தஸ்து ஆகியன பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும். அப்போதுதான் அவர் முன்வைக்கும் விடயங்கள் அவற்றின் உண்மையான கருத்து அவசியம் ஆகியன பற்றி உணர முடியும். மற்ற வருடைய கருத்தை எனது கண்ணோட்டத்தில் உணர்ந்துகொள்ள முற்பட்டால் அது மிகவும் தவறாகும். மேலும் உரையாடலின் முன்னரே மற்றவரைப்பற்றி ஒரு அபிப்பிராயத்தை ஏற்படுத்திக்கொண்டு அதற்கு அமைவாக உரையாடலை மேற்கொண்டால் அது தவறான முடிவுகளுக்கே வித்திடும். "Don't judge any person until you have walked two moons in their moccasins" - American Trovere

உரையாடலில் பங்குபற்றுபவர்கள் உங்களைப் போன்று சம அந்தஸ்து, அறிவு, செல்வாக்கு என்பன உள்ளவராக மதித்து அதற்கேற்ப உரையாட வேண்டும். இவ்வாறான மனநிலையுடன் நடாத்தப்படாத எந்த உரையாடலும் நியாயமான தீர்வுகளை தருவதில்லை. மற்றவரை புண்படுத்தும் வார்த்தைப் பிரயோகங்களை முற்றாக தவிர்க்க வேண்டும்.

உரையாடலின்போது பண்பான, கண்ணியமான, முகபாவம், கண்களின் உணர்வு, வார்த்தைகளின் மென்மை ஆகியன சிறப்பானதாக அமைய வேண்டும். இது Body Language எனப்படும். அமர்ந்திருக்கும் முறை கைகளை வைத்திருக்கும் பண்பு, கால்களை சீராக வைத்திருத்தல் போன்ற செய்கைகள் மற்றவரின் மனநிலையில் சாதக, பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும். கனிவான பார்வை, கண்ணியமான வார்த்தைகள் அமைதியான உரையாடல் போன்றன வெற்றிக்கு வித்திடும். பயன்படுத்தும் சொற்கள் அவற்றை பண்புடன் உச்சரித்தல், நிதானமாக பேசுதல் போன்றன நல்ல விளைவுகளை ஏற்படுத்தும். ஏளனமான சொற்கள் நிச்சயமற்ற கருத்துக்களை உடைய சொற்பிரயோகம் போன்றன எதிர்விளைவுகளை ஏற்படுத்தும்.

உரையாடலின் ஆரம்பத்தில் ஆற்றும் முன்னுரை சுருக்கமாகவும், நோக்கத்தை தெளிவாக விளக்குவதாகவும், உரையாடல் இரு சாராருக்கும் நன்மையாக அமையவேண்டும் என்ற நல்லெண்ணத்தை எடுத்துக் காட்டுவதாகவும் அமையவேண்டும். உரையாடலின்போது சமகால இடைவெளிகளில் தொடக்கம் முதல் பேசப்பட்ட விடயங்களையும் அவை பற்றி இருசாராரும் ஏற்றுக்கொண்டவை எது, ஏற்றுக்கொள்ளாதவை எது என தெளிவுபட ஒரு சுருக்கவுரை செய்வது முழுமையான உரையாடலின் முன்னேற்றம் பற்றி இரு சாராரும் உணர்ந்துகொள்ள உதவும். இவ்வாறு உணர்வதால் மீதி உரையாடலையும் வெற்றிகரமாக மேற்கொள்ள இரு சாராரும் முனைவுடன் மேற்கொள்ளுவர்.

உரையாடலின்போது பேசப்படும் விடயங்கள் வித்தியாசமான உணர்வுகளை ஏற்படுத்தும். இவ்வாறு ஏற்படும் உணர்வுகள் உரையாடு பவர்களின் நிதானத்தைப் பாதிக்காதவகையில் பார்த்துக்கொள்வது மிக அவசியம். இவ்வாறு உணர்வுகள் நிதானத்தை தடுமாறவைக்குமாயின் உரையாடலில் இடைவேளை விடுவது நன்று. உரையாடலின்போது மற்ற வரின் தவறுகளை எடுத்துக்காட்டவேண்டி ஏற்படின் மிகக் கண்ணியத்துடன் நிதானமாக உரையாட வேண்டும். மேலும் அதேசமயத்தில் தனது தவறுகளையும் வெளிப்படையாகக் கூறி அதற்கான தனது வருத்தத்தையும் கூறவேண்டும்.


இவ்வாறு செய்வது மிக கண்ணியமானதும் உரையாடலில் நல்ல பலனையும் அளிக்க உதவும். முக்கியமான உரையாடல் நீதியாகவும் வெற்றியாகவும் அமையவேண்டும் என்ற ஆத்மரீதியான நம்பிக்கை வேண்டும். மேற்கூறிய விடயங்களை உங்கள் குடும்பத்தினர், வேலைசெய்யும் இடம், உறவினர் ஆகியோருடன் உரையாடும்போது கடைப்பிடிப்பீர்களானால் மிக மகிழ்ச்சியாகவும், நிறைவாகவும் வாழலாம்.



# அஷ்வின் தையலகம்

ஆண், பெண் இருபாலாருக்கான ஆடைகள் தைத்தும், றெடிமெற்றாகவும் பெற்றுக் கொள்ளலாம். எல்லா வகையான சாறிகளும் இங்கு கிடைக்கும். சாறி பிளவுஸ் சிறந்த முறையில் தைத்துக் கொடுக்கப்படும்.
திருத்தல் வேலைகள் எதுவாக இருந்தாலும் சிறந்த முறையில் செய்து தரப்படும்.
வெளி இடத்து ஓடர்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

Opening Hours 7 Days 10 AM – 8 PM
**Gurukirpa Shopping Centre** (Halifax Bankக்கு அருகாமையில்)
**Unit 9, 42 The Broadway Road, Southall, Middlesex, London UB1 1PT**
Tel: 020 8843 0129 / 07903 974 084



# காதல் வானிலே காதல் வானிலே (3)

## எனது காதல் கதை

இன்றைய இளைஞர்கள் அதிர்ஷ்டசாலிகள். காதலிப்பது அவர்களுக்குச் சாதாரணம். அந்தக் காதலை அவர்களின் இலக்குகளுக்குத் தெரிவிப்பதும் சுலபம். ஆனால் நான் சொல்லப் போகும் கதை நடந்தது கிட்டத்தட்ட 50 வருடங்களுக்கு முந்திய காலம். காதலிப்பது கல்விக்கு இடக்கு என அன்றைய இளைஞர்களின் மூளைகளில் பதிய வைத்திருந்த காலம்.

காதலித்தால் பெயர், கெட்டுவிடும் என்று பெண்பிள்ளைகளின் காதுகளில் பெற்றோர்கள் தினமும் ஓதி வைத்திருந்த காலம். பெற்றோர் களும் சரி, ஆசிரியர்களும் சரி பிள்ளைகளுக்கு வரும் கடிதங்களை பிரித்து வாசித்து விட்டு அதன்பிறகே உரியவர் கைகளில் ஒப்படைத்த ஒரு காலம். உறவினரல்லாத வேறு ஆண்பிள்ளைகளின் முகத்தை பெண்பிள்ளைகள் ஏறெடுத்துப் பார்க்கப் பயந்த காலம். அப்போது எனக்கு வயது 17 அல்லது 18 இருக்கலாம். உறவினரல்லாத வேறு பெண் பிள்ளைகள் அருகினில் உட்கார்ந்திருந்தாலே உள்ளம் கிழுகிழுக்கும் வயது. கூட்டமாயிருந்த பஸ்களில் ஏறி பெண்பிள்ளைகளுடன் ஒட்டிக் கொண்டு நிற்பதில் ஒரு சுகம் கண்ட வயது. திரும்பிப் பார்த்துப் புன்னகைக்கமாட்டாளா என்று ஏங்கும் நேரத்தில் திரும்பிப் பார்த்து, பல்லை இறுக்கிக் கடித்தபடி, 'முட்டாமல் நிக்கேலாதோ?' என்று கேட்டபோதெல்லாம் திருட்டுத்தனமாகச் சுற்றிப் பார்த்து விட்டு விலகிப் போய் நின்ற வயது.

நான் படித்ததோ யாழ்ப்பாணத்தில் பிரபல மான ஒரு ஆண் கல்லூரியில் S.S.C.. வரையும் ஆண்பிள்ளைகளை மாத்திரமே வகுப்பில் வைத்திருந்துவிட்டு உயர்தர வகுப்புக்களில் (H.S.C) பெண்களையும் சேர்த்துக் கொண்டது அக்கல்லூரி S.S.C. வரை பிற பெண்களின் வாடையேபட்டிராத எனக்கு H.S.C வகுப்புக்கள் தந்தது ஒரு புது அனுபவம். S.S.C வரை எட்டத்தில் இருந்து பார்த்த அழகிகளை இனி கிட்ட இருந்து பார்க்கலாம் என்ற மகிழ்வுடன் நானும் H.S.C வகுப்பில் சேர்ந்து விட்டேன், அல்லது சேர்க்கப்பட்டேன்.

எனக்கொரு நண்பன் இருந்தான். அவனுக்குப் படிப்பைத் தவிர மற்றதெல்லாம் வரும். நன்றாகப் பாடுவான். நன்றாகப் பந்தடிப்பான். காற்பந்து, கைப்பந்து, கிரிக்கெட் அவனுக்குக் கைவந்த கலை. மாணவர்களிடையே அவன் ஒரு முக்கிய புள்ளி. அதனால் H.S.C வகுப்பில் சேர்ந்த 6 மாத காலத்தினுள் அவனுக்கு ஒரு அழகுத் தேவதை நண்பியாகக் கிடைத்துவிட்டாள். இங்கே நான் காதலி என்று குறிப்பிட முடியாது. அது காதலா, நட்பா என்று தரம் பிரித்து அறியும் அனுபவம் இல்லாத வயது. புத்தகத்தினுள் ஒளித்து வைத்து அவனுக்குக் கடிதம் கொடுத்ததை நான் கண்டிருக்கிறேன். எனக்கு அந்தக் கடிதத்தின் உறையைக் காண்பிப்பான். ஆனால் எனக்கு அந்தக் கடிதத்தைக் காட்டமாட்டான். அவள் என்ன எழுதியிருப்பாள் என்று அறிய எனக்கு ஆசை. எவ்வளவோ கெஞ்சிக் கேட்டும் அவன் அதைக் காட்ட மறுத்துவிட்டான். அட இவனும் ஒரு நண்பனா? என்று அவனுடைய நட்பைத் துண்டித்து விடலாமா என்று யோசித்தேன். நான் அவனுக்கு நண்பனாக இருப்பது அவனுக்கு முக்கியமானதாகத் தோன்றவில்லை. ஆனால் அவனது நட்பு எனக்கு மிகவும் தேவையாக இருந்தது இன்னாரின் நண்பன் என்று சொல்வதில் நான் மிகவும் பெருமைப்பட்டேன். அதனால் அவனது நட்பைத் துண்டித்துக் கொள்ளவும் முடியவில்லை. ஆனால் அவனுக்கு ஒரு நல்ல பாடம் படிப்பிக்க வேண்டும். என்னையும் பெண்ணொருத்தி விரும்புகிறாள். எனக்கும் ஒரு 'கேள் பிறெண்ட்' உண்டு என்று அவனுக்குக் காட்டவேண்டும் என எனக்குள் ஒரு வெறி. அந்த எண்ணத்திலேயே என் நேரம் கழிந்தது. பாடம் ஒழுங்காக என் மனதில் ஏறவில்லை. எனது கல்வித் தரமும் பின்னால் போய்க் கொண்டிருந்தது. ஆனாலும் 'கேள் பிறெண்ட்' பிடிக்க வேண்டும் என்ற ஆர்வம் கொஞ்சமும் குறையவில்லை. ஒரு நாயாய், பேயாய் இதே எண்ணத்தில் அலைந்தேன். எனது கல்லூரியில் அப்போது படித்துக் கொண்டிருந்த அத்தனை பெண்களையும் பார்த்துப் புன்னகைத்தேன். நான் நோக்கும் காலை நிலம் நோக்கினார்கள். நோக்காத போது என்னைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தார்கள். விடுவேனா நான் ஓரிருவருக்குக் கடிதமும் எழுதிப் பார்த்தேன். அவையெல்லாம் துண்டு துண்டாக்கி கிழிக்கப்பட்டு குப்பைத் தொட்டியில் எறியப்பட்டன.

யோசித்துப் பார்த்தேன். பெண்களைக் கவரும் அளவிற்கு என்னிடம் அழகில்லை என்பது எனக்குப் புரிந்தது. அப்படியானால் இவர்களைக் கவருவதற்கு என்ன செய்யலாம்? ஆ! வீரம்! அழகால் கவரமுடியவில்லை. வீரத்தால் கவர என்ன செய்யலாம் என யோசித்தேன். எனக்கு ஒரு 'ஐடியா' தோன்றியது. கல்லூரியில் குத்துச்சண்டைக் குழு ஒன்று இருந்தது. அதில் சேர்ந்து குத்துச்சண்டை வீரனாக வர முடிவு செய்தேன்.

அந்தக் குத்துச்சண்டைக் குழுவில் பலர் இருந்தனர். சிலர் பல நாட்களாகக் குத்துச்சண்டை பழகி பிற கல்லூரிகளுடன் போட்டியிட்டுப் பரிசில்கள் பெற்றவர்கள். சிலர் என்னைப் போன்று கற்றுக்குட்டிகள். நான் ஒரு கற்றுக்குட்டி என்பதற்காக என்னிலும் பார்க்க வயது, நிறை முதலியன குறைந்தவர்களுடனேயே பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டேன்.

இந்த நேரத்தில் எனது வாழ்வில் ஒரு திடீர் திருப்பம் ஏற்பட்டது. என்னைப் பார்த்து ஒரு பெண் புன்னகைத்தாள். அவள் பெரும் அழகி என்று சொல்லமாட்டேன். ஆனால் எனக்கோ அழகிகள் தேவைப்படவில்லை. ஒரு 'கேள் பிறெண்ட்' தான் தேவைப்பட்டாள். காதலிப்பதற்கு அல்ல. எனது நண்பனுடன் சமமாக நின்று பெருமை பேச. எனவே அவளைப் பார்த்து நானும் புன்னகைத்தேன். ஓரிரு வாரங்களில் கடிதமும் பரிமாறிக் கொண்டோம். எனது ஆனந்தத்திற்கு அளவே இல்லை. எனது வீரத்திற்குக் கிடைத்த அங்கீகாரம் என நினைத்துக் கொண்டேன். அவளது கடிதத்தில் பெரிதாக ஒன்றும் இருக்கவில்லை. ஒரு உப்புச் சப்பில்லாத கடிதம். நானும் ஏதோ பதில் ஒன்றை எழுதி அவளிடம் சேர்ப்பித்தேன். அது எப்படி நடந்ததோ தெரியவில்லை. நாங்கள் இருவரும் கடிதம் பரிமாறியது மற்றையோருக்கும் தெரியவந்து விட்டது. இந்த விடயம் மாணவர்கள் மத்தியில் காட்டுத்தீ போல் பரவிவிட்டது. என்னை எல்லோரும் ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள். சிலர் கண்ணில் ஏளனம். பலர் கண்களில் பரிதாபம்.

எனது வெற்றிக்குக் காரணமாகிய குத்துச்சண்டைப் பயிற்சியைத் தொடர முடிவு செய்தேன். அன்று பயிற்சிநாள். என்னுடன் வழமையாக பயிற்சியில் பங்கேற்கும் சிறுவன் அன்று வரவில்லை. புதிதாக இன்னொரு மாணவன் என்னுடன் பயிற்சியின் எதிர்த் தரப்பில் பங்குகொள்ள வந்திருந்தான். என்னுடைய 'ஸ்பாறிங் பாட்னர்'. நானும் கைகளில் உறைகளை மாட்டிக்கொண்டு பயிற்சிக்குத் தயாரானேன். பயிற்சியின் தொடக்கத்தில் இருவரும் கைகுலுக்குவது வழக்கம். அவன் கைகுலுக்குவதற்காக அருகில் நெருங்கி, 'நீ தானே என்ர அக்காவுக்கு காயிதம் குடுத்தநீ' என்றான்.

அந்தக் கேள்வியை அவன் கேட்டது மாத்திரம் தான் எனக்கு ஞாபகம் உள்ளது. அடுத்து எனக்கு அறிவு வந்தபோது நான் 'சிக் றூம்' இல் இருந்தேன். மூக்கில் ஐஸ் வைத்து பண்டேஜ் கட்டப்பட்டு இருந்தது. அந்தச் சம்பவத்தின் நினைவுச் சின்னமாக இன்னும் எனது முன்பல் பொய்ப்பல்லாகவே உள்ளது.

அன்றிலிருந்து நான் குத்துச்சண்டைப் பயிற்சிக்குப் போவதை நிறுத்திவிட்டேன். அதை மாத்திரம் விடவில்லை. பெண்பிள்ளைகளுக்குப் பின்னால் அவர்களின் காதலைத் தேடி அலைவதையும் விட்டுவிட்டேன்.

- இராகு


IPOS Solutions

EPOS Solutions for Today's Retailers

The Ultimate costs effective
and complete
'EPOS and News Delivery System

Special offer starts from £1999





* Barcode Scanning
* Pre-Loaded 20000 stock
* Stock Control
* Handles all promotions
* Paper & Magazine Control
* Home News Delivery
* Prints Shelf Edge Labels
* Invoice Control
* Reports
* Costcutter & KISA Link

Tel:
0845 838 0856

# இல்லை சார் ஏதாவது செய்யணும் சார்...



"தம்பி கோர்ட்டுக்கு எப்படி போகணும்..?'

சுமார் 70 வயது இருக்கும் அந்தப் பெரியவர்க்கு. அழுக்கு ஆடையணிந்தாலும் கண்ணியமான தோற்றம். கையில் ஒரு பாலிதீன் பை.

*"இந்த ரோட்டுல நேராக போனீங்கன்னா ஒரு ரோடு வரும். அங்கிருந்து பஸ்ல போகணும்.. பக்கம்தான் ரெண்டு ஸ்டாப்புக்கு பிறகு இறங்கிருங்க.."*

என்று சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே தனது பெரிய பாலிதீன் பையை சரிப் படுத்திக்கொண்டு நான் கூறியதை காதில் வாங்கியும், வாங்காததுமாய் நான் சுட்டிக் காட்டிய திசையை நோக்கி மெதுவாய் நடக்க ஆரம்பித்தார் நடக்க முடியாமல் அவர் விந்தி நடக்கின்றதைப் பார்த்து இதயம் லேசாய் சிந்தியது உடனே அவரை அழைத்தேன்..

*"ஹலோ என் வண்டியில வாங்க நான் உங்களை அந்த ஸ்டாப்ல இறக்கி விடுறேன்"* என்று நான் அவரை அழைத்தேன்..

இப்படி யாராவது சொல்ல மாட்டார்களா? என்று ஏங்கியது போல் ஒரு பார்வை பார்த்து தனது வயதுக்குண்டான முக சுருக்கங்களில் மலர்ச்சி அரும்ப என்னை நோக்கி வந்தார்

பார்ப்பதற்கு பாவமான தோற்றம். முகத்தினில் அனுபவம் கலந்த முதிர்ச்சி. பார்வையில் ஒரு விதமான ஏக்கம். என் அருகே வந்து எனது வண்டியில் ஏறிக்கொண்டார். கண்களில் லேசாய் திரண்டிருக்கும் நீர்த் துளிகளோடு

"தம்பி ரொம்ப நன்றிப்பா.. என்னால உங்களுக்கு தொந்தரவு.. நான் சங்கரன் கோவிலில் இருந்து வருகின்றேன்..' என்றார்

*"ம்..''*என்றேன்?. "நான் நல்லா வாழ்ந்தவன்பா..இப்படி எல்லாம் வாழணும்னு தலை விதி" என்று அவர் நொந்து புலம்பும்பொழுதே தெரிந்துகொண்டேன். அவர் மனதில் ஆழமாய் ஏதோ ஒரு சோகம் ஓடிக்கொண்டிருக்கின்றது.

*"ஏன் என்ன ஆச்சுங்க.?"* மெல்ல கேட்டேன்

"என்னுடைய பசங்களால இப்படி ஆயிட்டேன். யாருமே என்னை கவனிக்கறது இல்லைப்பா.." அழுகுற தொனியில் கூறினார்

## நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்....

*"உங்க பசங்க என்ன பண்றாங்க..?"* ஆறுதலாய் கேட்டேன்

"ம் பொறுப்பத்த பயலுவ.. மனுசங்களா அவங்க.." என்று திட்டினார் நான் இதனை எதிர்பார்த்தேன்.

*"ஏன்..? அவங்க உதவுறது இல்லையா..?"*

"அவங்கவங்க நல்லா வாழுறானுங்க.. என்னைய தனியா விட்டுட்டானுங்க.." என்று ஏக்கத்தோடும் ஒருவிதமான சலிப்போடும் கூறியபடி தொடர்ந்தார்

"நான் டிப்ளமோ சிவில் படிச்சேன்.. பெங்களூர்ல நல்ல வேலை - கை நிறைய சம்பளம் அதுமட்டுமல்ல மிலிட்டரியில வேற கொஞ்ச நாள் சர்வீஸ் பண்ணினேன்..

நான் நடந்ததே இல்லைப்பா எங்கே போனாலும் கார்தான்... இப்ப பாவிங்க நடக்க வச்சுட்டானுங்க.."

புரிந்துகொண்டேன் ஒரு காலத்தில் நல்லா வாழ்ந்தவர். இப்போ வயதானவுடன் மகன்களின் ஆதரவு கிடைக்காமல் துரத்தி விடப்பட்டவர் என்று.

*"எதுக்கு கோர்ட்டுக்கு போறீங்க..?"*

"ஒரு வழக்கு சம்பந்தமாக மனு ஒன்று கேட்டேன். அனுப்புறேன்னு சொன்னவங்க இழுத்தடிக்குறாங்கப்பா அதான் நேர்ல வந்து பார்க்கலாம்னு வந்தேன்.."

என்ன வழக்கு என்று சொல்ல மறுக் கின்றார். சரி எதற்கு நோண்டி நோண்டி கேட்க வேண்டும் என விட்டுவிட்டேன். பின் அவர் இறங்க வேண்டிய இடம் நெருங்கும்பொழுது

"யப்பா..யப்பா.. இப்படி பண்ணிட்டாங்களே நல்லா வாழ்ந்தேனே" என்று புலம்பிக் கொண்டே வந்தார். ஒருவித ஏக்கத்தில் குரல் பிசிறிப்போய் அவர் அப்படி கூறியது எனக்கு மனசே சரியில்லாமல் போனது..

## இவனுங்கள எல்லாம் தேசத் துரோகிகள் என்று தூக்குத்தண்டனை கொடுத்தால்தான் என்ன..?

அவரைப் பார்க்கின்ற வழிப்போக்கர்கள் கூட பரிதாப்பட்டு அவருக்கு ஏதாவது உதவ வேண்டும் என்று நினைப்பார்கள். அந்த அளவிற்கு அமைதியான முகம். ஆனால் அவருடைய மகன்களுக்கு எப்படி மனசு வந்தது இவரை அநாதையாக்குவதற்கு? அவரின் மகன்களின் மீது கோபம் கோபமாய் வந்தது.

## கடைசி காலங்களில் அவர்கள் தங்களை காப்பாற்றுவார்கள் என்று எண்ணிய அவர்களது கனவுகளில் மண்ணை அள்ளி வீசுகின்றார்கள் மகன்கள்.

"இங்கே இறங்கிக்கோங்க.. தூத்துக்குடி வண்டி வரும் அதில ஏறி நீதிமன்றம்னு சொல்லுங்க இறக்கி விட்டுறுவாங்க..'என்று சொன்னேன்.." அவரும் மெதுவாய் இறங் கினார்.

"கால் விளங்காம போயிடுச்சுப்பா அதான் இறங்குவதற்கு சிரமமா இருக்கு" என்று சொல்லியபடி மெதுவாய் இறங்கினார்..

திரும்பி பார்த்தேன்

விந்தி விந்தி நடக்கின்றது

அவருடைய கால்களும் கனவுகளும்.

விளங்காமல் போனது அவருடைய கால்கள் அல்ல, அவருடைய மகன்கள்தான் என்று மனசுக்குள் எண்ணிக்கொண்டு அப்பொழுது கடந்து போன மணல்லாரியை விடவும் அதிகமான மனபாரத்தோடு விடைபெற்றேன்.

அந்தப்பெரியவரைப்போல எத்தனையோ பேர் சொந்த மகன்களால் துரத்தப்பட்டு வீதியில் அலைந்து கொண்டிருக்கின்றார்கள்.

## நான் நடந்ததே இல்லைப்பா எங்கே போனாலும் கார் தான்... இப்ப பாவிங்க நடக்க வச்சுட்டானுங்க.."

ஒரு காலத்தில் நன்றாக வாழ்ந்து, குழந்தை களை கள்ளம் கபடமில்லாமல் கொஞ்சி மகிழ்ந்து, தன்னுடைய வருமானத்தில் முக்கால் வாசியை குழந்தைகளின் படிப்புக்காய் செலவிட்டு, அவர்களை முன்னேற விட்டு விட்ட பிறகு கடைசிகாலங்களில் அவர்கள் தங்களை காப்பாற்றுவார்கள் என்று எண்ணிய அவர்களது கனவுகளில் மண்ணை அள்ளி வீசுகின்றார்கள் மகன்கள்.

*இவனுங்கள எல்லாம் தேசத்துரோகிகள் என்று தூக்குத்தண்டனை கொடுத்தால்தான் என்ன..?*

*நெஞ்சு பொறுக்குதில்லையே - இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்....*

மனைவியை அடித்தால் தண்டனை என்ற சட்டத்தைப்போல தந்தையை அல்லது தாயை வீட்டை விட்டு விரட்டிய மகன்களுக்கும் தண்டனை தரவேண்டும் என்று ஒரு சட்டம் இயற்றக்கூடாதா..?

கண்டிப்பா ஏதாவது செய்யணும் சார்?

*- ரசிகவ் ஞானியார்*

## நன்றிக்கடன்

அலட்சியமாய் களைந்த ஆடைகளை
யெல்லாம் துவைத்து வைப்பாள்!

மிச்சம் ஏதுமின்றி தின்று வீசிய
பாத்திரங்களை ... பத்திரமாய்
பூசி விடுவாள் !

ஒரு நாள் வராவிடினும் ...
வீட்டை கூவம் என்று அழைப்போம் !

இப்படி விவரம் தெரிந்த நாள் முதல்
அறிவிக்கப்படாத உறவாக ..

வலம் வருபவள்!

இன்று காலைதான் செய்தி வந்தது

என் வீட்டு வேலைக்காரி
இறந்துவிட்டாளாம்!

அய்யோ!

நாளை

தேங்கும் வேலையை

யார் செய்வதாம்?

*- ரசிகவ் ஞானியார்*

IMPORT"THAS"
KINGS NIRU SURYAA TRS



KINGS NIRU SURYAA TRS
தயாரிப்புகளின் சுவிற்சர்லாந்தின் தனி முகவர்கள்

உங்கள் வியாபார ஸ்தாபனங்களுக்குத் தேவையான, இலங்கை, இந்தியா, தாய்லாந்து ஆபிரிக்கா உணவுப் பொருட்களுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்....

Tobelaeckerstrasse 4, 8212 Neuhausen
Tel. 052/672 28 38 / Fax 052/672 28 39



# டாக்டர் டி.வீ.பழனிவேல் FDSRCS (England)

## J.L. VARA DENTAL PRACTICE

290 High Street North, Manor Park

Eastham, London E12 6SA Tel: 020 8552 1626

ஈஸ்ட்ஹாம் ஸ்டேசனில் இருந்து ஐந்து நிமிட நடை


## Private Orthodontic Treatment



நெருக்கப்பட்ட முன்பற்கள்
Crowded Incisors



அண்ணப்பக்க தோற்றம்
Palatal view




சிகிச்சை 18 மாதத்தில் முடிவடைந்த பின்பு பல் புடுங்கிய இடைவெளி மூடப்பட்டு பற்கள் ஒழுங்காகியுள்ளன




நடுவில் நான்காவது பல் அகற்றப்பட்டு Fixed Appliance பொருத்தப்படுகின்றன




இடதுபக்க தோற்றம்
Left Lateral view



பற்களில் உலோக பிறக்கற்கள் Brackets பொருத்தப்படுகின்றன




பிறக்கற்களை இணைத்து ஆர்ச்வயர்கம்பி Archwire பொருத்தப்பட்டுள்ளது



சிகிச்சை முடிந்த பின் இரு வெள்ளி வளையங்கள் இன்னமும் அகற்றப்படவில்லை



பல்லு அகற்றிய இடம் 9 மாதத்தில் அடைந்து விடும் Space Closed



பல்புடுங்கிய இடைவெளி மாதம் 0.76 மி.மீ வீதம் குறைகிறது

## பிறைவேட் பல் ஒழுங்குபடுத்தல் சிகிச்சை
## 11 வயது சிறுவர் முதல் 55 வயது வந்தோர் உட்பட

- இழந்த பற்களை, தாடை எலும்புகளில் இம்பிளான்ற் (Implant) மூலம் மீளவும் கட்டி எழுப்புதல்
- பல்வலியை பல் அகச்சிகிச்சை (Endonontic Therapy) மூலம் நிற்பாட்டுதல்
- முரசு இரத்தம் வருதலை நிற்பாட்டல்
- ஆட்டம் கண்ட பற்களை Splint Therapy மூலம் வலிமையாக்குதல்
- கிளிப் அல்லது பிறேஸ் (Orthodontic) சிகிச்சை மூலம் விகாரமான பற்களை அழகான வரிசைக்கு ஒழுங்குபடுத்தல்
- மஞ்சள் நிறமான பற்களை பால்போன்ற வெண்மையாக மாற்றுதல்
- பல் முரசு சம்பந்தமான சகல சத்திர சிகிச்சைகள்
- புன்னகை அழகை மேம்படுத்த (Cosmetic Dental Treatment)

சகல சிகிச்சைகளும் ஒரே நிறுவனத்தில் செய்யப்படும்.

நசனல் ஹெல்த் வசதி இல்லை. பிறைவேற் சிகிச்சைகள் மட்டுமே உண்டு

Orthodontic சிகிச்சை NHS இல் செய்யப்பட இயலாது பிறைவேற்கட்டணம் £690 இல் இருந்து £2400 வரை, பிரச்சினையின் சிக்கல் தன்மையை பொறுத்தது. ஆறுவாரத்துக்கு ஒருமுறை தவணை முறையில் (Installment) உங்கள் சிகிச்சை செலவை கட்டமுடியும்.

டாக்டர் பழனிவேல் கொழும்பு, மட்டகளப்பு, யாழ்ப்பாணத்தில் நான்கு வருடமும், லண்டனில் இருபத்தைந்து வருட அனுபவமும் உள்ளவர்.

**Fellow in Dental Surgery of The Royal College of Surgeons of England**

# சிறுகதை

## 'காதல்'

முற்றத்தில் வேப்ப மரத்தின் கீழே போடப்பட்டிருந்த சாய்மணைக் கதிரையிலே சாய்ந்திருந்த றஜீவன் சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். வளர்ப்பு நாய் அவனருகே வந்து தன் முன்னங் கால்களால் சுரண்டி அவனை விளையாட அழைத்தது. வழமை போல அதனுடன் சேர்ந்து விளையாடவோ அல்லது அதன் செயற்பாட்டை ரசிக்கும் மனநிலையிலோ றஜீவன் இல்லை என்பது அந்த ஐந்தறிவு ஜீவனுக்கு எப்படித் தெரியப் போகிறது.

தகப்பனார் காலையில் பேசிய விடயம் தொடர்பாக ஒரு தீர்மானத்தை மேற்கொள்ள முடியாது குழம்பிப் போயிருந்தான். மீண்டும் மீண்டும் அந்த வார்த்தைகள் றஜீவனின் மனத்திரையில் தோன்றிக் கொண்டிருந்தது.

'தம்பி கொஞ்சம் இப்பிடி இரு ராசா. புறோக்கர் கந்தசாமி உனக்கு ஒரு சம்பந்தம் கொண்டு வந்திருக்கிறார். நல்ல வசதியான இடம், பிள்ளை கனடா சிற்றிசன் உள்ளதாம். உனக்கு விருப்பமெண்டா அங்கபோய் உன்ர படிப்பை தொடர வழி செய்து தருவினம். இங்கையும் நிறையக் காணி பூமி எல்லாம் இருக்குது. புறோக்கர் நாளைக்குப் பின்னேரம் வாறன் எண்டு சொன்னவர். அதுக்குள்ளை உன்ரை முடிவைச் சொன்னியெண்டால் பேச்சைத் தொடரலாம்.'

பெண்ணினுடைய படத்தை அவனிடம் கொடுத்து அந்தப் பேச்சை சுருக்கமாகவே முடித்திருந்தார்.

' சாந்தினியுடனான இந்த மூன்று வருடக் காதல் இல்லாமல் இருந்திருந்தால் அவனுக்கு அங்கு யோசிப்பதற்கு எதுவுமே இருந்திருக்காது. ஆனால் சாந்தினி?

மூன்று வருடங்களுக்கு முன்னர் அவளை A/L வகுப்பில் சந்தித்த அந்த நாட்களை இரை மீட்டிப் பார்க்கிறான்..

ஆரவாரமின்றி வகுப்புக்கு வந்து தானுண்டு தன் கற்றலுண்டு என்றிருக்கும் அவளின் அடக்கமும் பாடங்களில் காட்டும் தீவிர ஆர்வமும் தன்னிடம் ஒரு இரசாயன மாற்றத்தை ஏற்படுத்தியதை றஜீவனால் உணர முடிந்தது. கணித பாடத்தில் அவனுக்கிருந்த அசாத்தியத் திறமை காரணமாக தனக்கு ஏற்படும் சந்தேகங்களை சாந்தினி அவனிடம் கேட்டுத் தெரிந்துகொள்வாள். படிப்படியாக அவர்களுடைய அளவளாவல் பாடவிடயங்களுக்கு அப்பால் கதை, கவிதை, சினிமா, அரசியல், விளையாட்டு என்று வியாபித்துச் செல்லத் தொடங்கியது. இவற்றில் இருவருக்குமே இருந்த ஒத்த ரசனைத் தன்மை படிப்படியாக இவர்களுடைய நட்பை காதலாக மாற்றியது.

இவ்வாறாக மலர்ந்த காதல் இந்த மூன்று வருட காலத்தில் பிரிக்க முடியாத பிணைப்பை ஏற்படுத்தியிருந்தது. இந்த நிலையில் தான் தந்தையாரின் பேச்சு றஜீவன் மனதில் ஒரு சலனத்தை ஏற்படுத்தி விட்டிருந்தது.

சாந்தினி தன்னை தன் உயிரினும் மேலாக நேசிக்கின்றாள் என்பதை றஜீவன் நன்கறிவான். ஆனால் அவளுடைய குடும்பம் மிகவும் ஏழ்மையானது. விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருந்த தந்தை விமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்டதிலிருந்து அவளது குடும்பம் வறுமையில் வாடியது.

தாயாரின் கடும் உழைப்பினால் தான் நான்கு பெண் பிள்ளைகளும் கல்வி கற்றுக்கொண்டிருந்தனர். இந்த நிலையில் அவளைத் திருமணம் செய்துகொள்ளும் பட்சத்தில் தன் உழைப்பிலேயே குடும்பத்தை நடாத்த வேண்டும் என்பதை றஜீவன் உணர்ந்திருந்தான். இது இயல்பாகவே சற்று ஆடம்பரப்பிரியனான றஜீவனின் மனதில் சிறு நெருடலை ஏற்படுத்தியிருந்ததும் உண்மையே.

இந்த நிலையில் மீண்டும் மீண்டும் தந்தையின் வார்த்தைகளைச் சிந்தித்த அவனது மனம் பணத்தின் முன் காதலைத் தியாகம் செய்வதற்கு தயாராகிக் கொண்டிருந்தது. ஏழெட்டு வருடங்களாகக் காதலித்தவர்கள் கூட தங்கடை நல்வாழ்விற்காக இப்படியான முடிவுகளை எடுக்கிறார்கள் தானே என்று தன்னுடைய முடிவுக்கு நியாயமும் கற்பித்துக் கொண்டான். தங்களுடைய சுயநலமான முடிவுகளை நியாயங்களாக நினைத்துக் கொள்வதில் யாருக்கும் தடையில்லையே.

இந்த முடிவை இன்று எப்படியாவது சாந்தினியிடம் கூறிவிட வேண்டுமென மனதிற்குள் தீர்மானித்தாலும் அதனை அவளிடம் நேரடியாகக் கூற முடியாது குற்றமுள்ள மனது குறுகுறுத்தது. இறுதியில் தன்னுடைய முடிவைக் கடிதமாக எழுதிக் கொண்டு சாந்தினியைச் சந்திப்பதற்காக சைக்கிளில் புறப்பட்டான். மனத்திலிருந்த குற்றஉணர்வு அவனுடைய சைக்கிளின் வேகத்தை வெகுவாகக் குறைத்திருந்தது. றஜீவன் சென்று கொண்டிருந்த பாதையில் சிறிது தூரத்தில் சிறு கூட்டமொன்று எதையோ வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. அங்கே நடப்பதை அறிய விரும்பியவனாக சைக்கிளை நிறுத்தி விட்டு மெதுவாக எட்டிப் பார்க்கிறான்.

புறா ஒன்று மின்சாரம் தாக்கி இறந்துபோய்க் கிடக்கிறது. அருகே இருந்த அதன் ஜோடி தன் அலகுகளால் இறந்த புறாவின் இறக்கைகளைக் கொத்திக் கொத்தி அவலக்குரல் எழுப்பிக் கொண்டிருந்தது. அதன் கண்களில் சோகம் அப்பியிருந்தது. நீண்ட நேரமாக இவ்வாறு அலறிக் கொண்டிருந்த காரணத்தால் அது மிகவும் இளைத்திருந்தது.

'காலையிலிருந்து இது இப்படித்தான் தீன் ஊண் இல்லாமல் கத்திக் கொண்டிருக்குது.' என்று வேடிக்கையாளர்களில் ஒருவர் சொல்ல அருகே நின்ற வயதான ஒருவர் 'இந்த ஐந்தறிவு ஜீவன்களிடம் இருந்து நாங்கள் படிக்க வேண்டியது எவ்வளவோ இருக்குது' என்று பெருமூச்சுடன் சொன்னார். நடந்த சம்பவமும் பெரியவரின் வார்த்தைகளும் தனக்குச் சாட்டையால் அடிப்பதைப் போல றஜீவன் உணர்ந்தான்.

தன்னுடைய துணையின் இழப்பைத் தாங்காது உணர்வின்றி உடல்சோர்ந்து கதறியழும் இந்த ஐந்தறிவு ஜீவனையும் உண்மையான காதலின் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாது காதலிப்பது கட்டாயக் கடமை போலவும் காதலிக்காமை தரக்குறைவான விடயமாகவும் கருதி அதற்காகவே யாரையாவது காதலித்து பின்னர் வீட்டிலேற்படும் எதிர்ப்புகள் காரணமாகவோ அல்லது புரிந்துணர்வின்மை காரணமாகவோ அந்தக் காதலை சர்வ சாதாரணமாகவே முறித்து சிறிது காலத்திலேயே மற்றுமொரு பந்தத்தை ஏற்படுத்தி காதல் என்ற வார்த்தையையே கொச்சைப்படுத்தும் இந்த மானுட சமுதாயத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கிறான்.

அதிலும் தன்னை மானசீகமாக மூன்று ஆண்டுகளாக நேசித்த, நேசித்துக் கொண்டிருக்கிற ஒரு அப்பாவிப் பெண்ணை பணம் பகட்டுக்காக சில நிமிடங்களிலேயே மறக்கத் துணிந்துவிட்ட தன்னையும் அந்தப் புறாவையும் ஒப்பிட்ட போது அந்த ஐந்தறிவு ஜீவனை விடத் தான் எவ்வளவோ குறுகிவிட்டதை அவனால் உணர முடிந்தது.

ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனாக சட்டைப் பையிலிருந்த கடிதத்தைச் சுக்கு நூறாகக் கிழித்து எறிந்து விட்டு சைக்கிளைத் திருப்பிக் கொண்டு மீண்டும் வீட்டுக்குச் செல்லத் தயாராகிறான். தந்தையிடம் சொல்லவேண்டிய முடிவைப் பற்றி இப்பொழுது அவனிடம் ஒரு தெளிவு இருந்தது.

*- சுபத்திரன்*

# மனைவி அமைவதெல்லாம்...

மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்று கண்ணதாசன் சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

மனைவி மட்டும் அல்ல கணவன் அமைவது, வேலைக்காரி அமைவது, சொந்தங்கள் அமைவது எல்லாமே இறைவன் கொடுக்கும் வரம் என்பதை விட அந்த உறவுகளை நாம் எடுத்துக்கொள்ளும் விதம், அவர்கள் நம்மிடம் நடந்து கொள்ளும் விதம் நாம் அவர்களுக்கு தந்த அனுபவத்தின் பின் விளைவே அன்றி கடவுள் தரும் வரம் அல்ல.

ஒரு பந்தை சுவற்றில் அடித்தால் அது நம்மிடம் திரும்பி வருவது போல தான் எந்த ஒரு உறவும், நட்பும். நமக்கு கிடைக்கும் ஒவ்வொரு அனுபவமும் இதை தான் காட்டுகின்றன. ஆனால் இந்த கட்டுரையில் நான் அளவளாவ வந்த விசயம் ஒரு திரைப்பட பாடலின் தாக்கம்.

'ஆலங்குயில் கூவும் ரயில் ஆரிராரோ தாலேலேலோ யாவும் இசை ஆகுமடா கண்ணா' என்று வரும் 'பார்த்திபன் கனவு' பட பாடலின் திரையாக்கப்பட்ட ஒரு சில காட்சிகளே இந்த கட்டுரைக்கு கரு. அருமையான ஆலாபனையோடு தொடங்கும் கர்னாடக இசை பாடல் ஒன்றை கதாநாயகி பாட அலுவல முடிந்து வரும் நாயகன் அதை ரசிக்காமல் என்ன இப்படி கர்னாடக பாடல் எதை எடுத்தாலும் இழுத்து இழுத்து என்று கூற அவனை மகிழ்விக்க அவள் பாடும் பாடல்.

அப்பாடலின் ஒரு வரி முடிவதற்கும் அந்த நாயகி கணவனுக்கு செய்யும் சேவைகள் பின் வருமாறு. அவன் உடை மாற்றியவுடன் பழைய ஆடையைத் துவைக்கும் போடப்பட வேண்டிய அழுக்கு துணிகள் சேர்க்கும் கூடையில் போடுவாள். அப்படியே அலமாரியில் இருந்து முகம் கழுவும் கணவனுக்கு முகம் துடைக்க துண்டு ஒன்றை எடுத்து தருவாள். அவன் முகம் கழுவி வாழும் அறைக்கு வந்து அமர்ந்ததும் கையில் படிக்க ஒரு தினப்பத்திரிக்கையை எடுக்க, அவள் அவனுடைய மூக்குக்கண்ணாடியை நீட்டுவாள். அப்புறம் காபிக் கோப்பையை ஏந்தி வந்து அவனுக்கு கொடுப்பாள். இது அந்த இயக்குனர் எண்ணப்படி இல்லத்தரசிக்கு இருக்க வேண்டிய குணாதிசயங்களா இல்லை இல்லத்தரசி என்பவள் கணவனின் மனம் புரிந்து நடந்து கொள்ளவே பிறந்து வளர்ந்தவள் என்பது நிர்ணயிக்கப்பட்ட விதியா?

பெண் என்பவள் அழகு பதுமையாக இருக்க வேண்டும். அன்பே உருவானவளாக இருக்க வேண்டும். பொறுமையின் பிறப்பிடமாக இருக்க வேண்டும். அறிவுடையவளாக இருக்க வேண்டும் ஆனால் மலைக்கு பின்னால் ஒளிந்து ஒளிரும் நிலவினை போல கணவனுக்கு பின்னால் இருந்து சில சமயம் அறிவினை வெளிப்படுத்த வேண்டும் பல சமயம் அறிவில்லாதவளாக கண்டும் காணாதவளாக இருக்க வேண்டும். இந்த எதிர்பார்ப்பு தான் நடைமுறையில் இருக்கின்றது.

தன் உள்ளம் புரிந்தவளாக தன் மனைவியை எதிர்பார்க்கும் அனைவரும் ஒரு நொடி தன் நடவடிக்கைகள் பற்றிச்சிந்திந்தால் மனைவியாக அமைந்தவள் இறைவன் கொடுத்த வரமாக இருப்பாள். திருமணம் ஆன முதல் நாளே தன்னைப் பற்றிய முழு அறிவையும் மனைவியிடம் யாரும் ஏற்றி விட முடியாது. சிறுகச்சிறுக அவள் உள்ளத்தில் தன் எல்லா எண்ணத்தையும் ஏற்றலாம்.

தன் வீடு மக்கள் விட்டு உங்கள் வீடு வரும் அவள் மனம் உங்கள் குடும்ப சூழலுக்கு தன்னைத்தானே தயார் செய்து கொள்ளும் வரை பொறுமை தேவை. அவள் முக்கியமானவளாக கருதப்படுவதை அவளுக்கு வெளிப்படையாக உணர்த்துங்கள் பின்பு அவள் உங்கள் மனம் புரிந்தவளாக நடப்பாள்.

அதே போல் பெண்களும் திருமணம் ஆன அடுத்த நாளே கணவன் தன் கட்டுக்குள் தான் இருக்க வேண்டும் என்ற எண்ணமும். அவன் அன்னை, அக்காவை விட அதிக முக்கியத்துவம் தனக்கு உடனே வேண்டும் என்ற எண்ணம் கூடாது. அன்பால் வெல்ல வேண்டும். காயப்பட்டால் தனிமையில் பொறுமையாக எடுத்துக் கூறுங்கள்.

அதிக சத்தத்தால் சாதிக்கப் போவது எதுவும் இல்லை. மனம் புரிந்து அவனை எங்கும் விட்டுத் தராமல் மிக தன்மையாக நடந்தால், அன்பாக தினமும் நாலு வார்த்தை பேசினால், நல்ல சமையல் செய்து தந்தால், எந்த கணவன் தான் மயங்க மாட்டான். மீண்டும் உறுதியாக சொல்வேன் சொந்தங்கள் அமைவது எல்லாமே இறைவன் கொடுக்கும் வரம் என்பதை விட அந்த உறவுகளை நாம் எடுத்துக்கொள்ளும் விதம், அவர்கள் நம்மிடம் நடந்து கொள்ளும் விதம் நாம் அவர்களுக்கு தந்த அனுபவத்தின் பின் விளைவே அன்றி கடவுள் தரும் வரம் அல்ல.

*- லாவண்யா*



Specialists in
▸ Tyres ▸ Servicing ▸ Brakes ▸ Electrical Work ▸ Recovery Service ▸ Clutches
▸ Mechanical Repairs ▸ Exhausts ▸ Rebuild Engine & Gear Boxes ▸ MOT

அனைத்து வகையான மோட்டார் வாகன திருத்த வேலைகளையும் பல வருட அனுபவமும், திறமையும் கொண்டவரினால் குறைந்த செலவில் செய்து தரப்படும்.

K Autos
Your Reliable Motoring Centre

மணியுடன் தொடர்பு கொள்ளுங்கள்
T: 020 8540 3847 / M: 07961265 232
98A Robinson Road, Colliers Wood, London SW17 9DR




# WORCESTER PARK MINI MARKET


180 Central Road, Worcester Park, Surrey KT4 8HQ

## 020 8330 1113


---

அதிநவீன வசதிகளுடன் சொகுசு தொடர் மாடிக்கட்டடம் விற்பனைக்கு

## *Luxury Apartments in Wellewatte, Colombo*



- 3 Bedrooms & 2 Bathrooms
- 2 Bedrooms & 2 Bathrooms
- 1 Bedroom & 1 Bathroom
- Imported high quality fittings & glazed tiles for Bathrooms
- Hot water geyser
- Ground floor reserved car park
- Roof top garden
- A/C provision in all rooms
- Rust proof ,powder coated window
- Elevator to all floors
- Stand by generator
- Modern fire protection system
- Garbage shoot in every floor
- Intercom security system
- Mahogany cabinets Pantry with granite work top
- Provision for washing machine connection
- Telephone and television outlets
- Fully secured 8 feet parapet wall right around




**Sri Lanka Office**
Provisix International (Pvt) Ltd
No. 6, I.B.C. Road
Colombo 06, Sri Lanka
Tel : ++ 94 714528484
e-mail : m.somasundaram@provisix.com

**Canada Contact**
Tel : ++ 1 514 8928804 (After 4pm & weekend)


**Australia Contact**
Tel : ++ 61 2 98963521
++ 61 4 22471129

**Provisix Limited - United Kingdom**
458, Alexandra Avenue
Harrow, Middlesex, HA2 9TL,
United Kingdom
Tel : ++ 44 2088683646
Fax : ++ 44 2088683666
Mobile : ++ 44 7715323010
++44 7774455156
e-mail : provisix@provisix.com

3 Bedrooms from 84 laks
2 Bedrooms from 73 laks
1 Bedroom from 43 laks

**Only selected units Available**

For call back
please e-mail us



# கண்களின் அழகும் ஆரோக்கியமும்!



நம் உணர்ச்சிகளையும் உடல்நலத்தையும் பிரதிபலிப்பவை நம் கண்கள்தான். முகம் அழகாக இருப்பதற்கும் கண்கள் அழகாக இருப்பது முக்கியம். ஆகவே, உங்கள் கண்களுக்காக சில அழகுக் குறிப்புகள்... பளிச்சிடும் கண்கள் வேண்டுமா? பாட்டிகளின் டிப்ஸைப் பின்பற்றுங்கள்.

தினமும் இரவு தூங்கப் போவதற்கு முன் ஒரு சொட்டு ஆமணக்கு எண்ணெயைக் கண்ணில் விட்டுக்கொள்ளுங்கள். இதை மூன்று மாதங்கள் செய்தால் விழிகள் மின்னும். ஆமணக்கு எண்ணெய் கொஞ்சம் கொழகொழ சமாச்சாரம் என்பதால் உங்கள் கண்களில் தலா ஒரு சொட்டு மட்டும் பயன்படுத்துங்கள். அடர்த்தியான புருவங்களுக்கு? அதற்கும் ஆமணக்கு எண்ணெய்தான்! தினமும் இரவு புருவங்களில் ஆமணக்கு எண்ணெயைத் தடவிக்கொள்ளுங்கள். சில மாதங்களில் புருவங்கள் அடர்த்தியாகிவிடும். அடர்த்தியான பின் நீங்கள் அதைத் தொடர்ந்து பயன்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

சுத்தமான, நன்றாக மூடி வைத்து பேக் செய்த ஆமணக்கு எண்ணெயை வாங்கி இருட்டான, குளிர்ச்சியான இடத்தில் வைத்திருங்கள். கண்கள் சோர்வாக இருக்கின்றனவா? கொஞ்சம் பஞ்சை ரோஸ் வாட்டரில் தோய்த்து கண்கள் மேல் 10-15 நிமிடங்கள் வைத்துக்கொள்ளுங்கள். இதை விட அதிக பலன் தருபவை தேநீர்ப் பைகள் (Tea bags). அதே போல ஒவ்வொரு கண் மேலும் ஒரு வெள்ளரிக்காய்த் துண்டு கூட வைத்துக்கொள்ளலாம்.

இவை எதுவும் கிடைக்கவில்லையா? பஞ்சைக் குளிர்ந்த நீரில் தோய்த்து எடுத்துக் கண்களில் வைத்துக்கொள்ளுங்கள். கண்களுக்கு ஒரு நல்ல எக்சர்சைஸ்: உள்ளங்கைகளால் கண்களை மூடிக்கொள்ளுங்கள், பிறகு கண்களைத் திறந்து உள்ளங்கைகளின் இருட்டை சுமார் ஒரு நிமிடம் பார்த்துக்கொண்டிருங்கள். கண்களின் சோர்வு குறையும். நிறைய டி.வி. பார்ப்பதோ கம்ப்யூட்டரில் வேலை செய்வதோ கண்களுக்குக் கெடுதல் என்பதை சொல்லவே தேவையில்லை. இமைக்காமல் திரையைப் பார்ப்பதால் கண்கள் வறண்டு போகின்றன.

இது கண்களுக்கு ஆரோக்கியமானதல்ல. கண்களை உலராமல் வைத்திருக்க அடிக்கடி கண் சிமிட்டுங்கள்.

அவ்வப்போது கம்ப்யட்டரை விட்டு நகர்ந்து செல்லுங்கள். சக ஊழியர்களுக்கு எப்போதும் ஈ-மெயில் அனுப்பிக்கொண்டிருப்பதற்கு பதிலாக அவர்களை நேரில் சந்தித்துப் பேசுங்கள். படிப்பது கண்களை பாதிக்கா? ஆனால் வெளிச்சமான இடத்தில் உட்கார்ந்து, கண்களுக்கு சிரமம் ஏற்படாமல் படியுங்கள். கண்களுக்குப் பல விதமான சிகிச்சைகள் இருக்கின்றன. ஆனால் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஒழுங்கான அழகு நிபுணர் ஒருவரிடம் கண்களை மசாஜ் செய்துகொள்வது மிகவும் நல்லது.

இரவில் கண்களுக்கு நல்ல ஒரு ஐ க்ரீமைத் தடவிக்கொள்ளுங்கள். கண்களையும் அவற்றை ச் சுற்றியுள்ள இடங்களையும் மென்மையாகக் கையாளுங்கள். இந்த இடங்களில் இருக்கும் சருமத்தைத் தேய்க்கவோ இழுக்கவோ கூடாது.

முகத்தைக் கழுவிக்கொள்ளும்போது கண்களைத் தேய்க்காதீர்கள்? அவற்றின் மேல் தண்ணீரை மென்மையாக அடித்துக்கொள்ளுங்கள். கண்கள் அழகாக இருக்க எட்டு மணிநேரம் தூங்க வேண்டும்.

கண்களை சிறப்பான நிலையில் வைத்திருக்க வருடத்திற்கு ஒரு முறை கண் மருத்துவரைப் பாருங்கள். கண்களை ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்றால் விட்டமின் ஏ. பி. சி ஆகியவை தேவை. காரட்டும் கீரை வகைகளும் நிறைய உள்ளே தள்ளுங்கள். சத்தான உணவும் கண்களின் அழகிற்கு அவசியம்.

*- பூ.மணிமாறன்*

# சுகந்திக்கு வசந்தி எழுதும் கடிதம்

அன்புள்ள சுகந்தி நலம் நலமறிய ஆவல்! நலமென்று எழுதுகிறேன் பார் அந்த வரி என்னைப் பார்த்து நகைக்கிறது. சுகந்தி! வாழ்க்கை என்றால் ஏற்றமும், தாழ்வும், இன்பமும், துன்பமும் வருத்தமும், சுகமும் என்று எல்லாமே தொடர் கதைதானே! என்னத்தை இவள் சொல்ல வாறாள் என்று நீ குழம்புவது தெரிகிறது. ஒவ்வொரு விடயமும் பட்டுத் தெளிகிற போது நல்ல தத்துவங்கள் பிறக்கும் அதுதான் இந்தப் பீடிகை. இதுக்கு மேலையும் உன்னைச் சோதிக்ககூடாது, ஒரு 'சிக்கன் குனியா' வந்து என்னைப் படுத்தினபாட்டை வார்த்தையால் வடிக்கமுடியாது. சாதாரண நோய நிவாரணியான பனடோலே கிடைக்காம நாங்க இங்கு படும்பாடு சொல்ல முடியாதது சொல்லுக்குள் அடங்காதது.. பேருக்குச் சுகம் சொல்கிறோம. வாதைகள் சுமக்கின்ற வேளைகளிலும் முறுவல் செய்வது என்பது எமக்கு இயல்பான வாழ்க்கை முறையாகிவிட்டது.

என்ன இந்த கேவலங்கெட்ட சிங்கள அரசு எங்களை என்ன நினைச்சுக் கொண்டிருக்கு? மருந்தைத் தடை செய்தா, சாப்பாட்டைத் தடை செய்தா நாங்கள் நக்கித் தின்ன இவங்கடை காலடியில விழுவம் என்று நினைச்சுப் போட்டாங்கள். போடட்டும் எத்தனை தடையையும் நாங்க சந்திச்சு நிமிருவம். தமிழீழத்தில் கிடைக்கிற வளங்களில் இருந்தே நாங்க வாழக் கற்றுக்கொண்டிருக்கிறம். இப்ப கூட ஒரு பனடோல் கிடைக்காத இந்தப் பொழுதில் எங்கள் மண்ணில் வாழக்கூடிய மருத்துவ மூலிகைகள் கொண்டு நான் சிக்கன் குனியாவால் மீண்டிருக்கிறன். நாங்க சாகப் போறதில்லை வாழத்தான் போறம். நிற்க. சுகந்தி ஏதோ வேகத்தில் எனது காகிதம் நெருப்புத்தனமா இருக்கும். தாங்க முடியாத நிலை வந்தா எல்லாமே தடம் புரளும் அதுதானே இயற்கை. எங்களுக்கும் எல்லா இன்னல்களும் எல்லைகளைத் தாண்டி வருத்துகிறது. இந்த வேதனைக்கான பலாபலன்கள் இவனுகளுக்குக் கிடைக்கும்.

சரி, சுகந்தி நீ எப்படி இருக்கிறாய்? உனது குடும்பம் புலம்பெயர் தேசத்தில் வேர்களை ஆழப்பதிக்கக் கூடியதாக உள்ளதா? நாங்கள் கேள்விப்படும் செய்திகள் என்னவோ உங்களைவிட நாங்கள் கொடுத்து வைத்தவர்கள் என்று எண்ணத் தூண்டுகிறது. பத்தாண்டுகளைக் கடந்தும் இணைய முடியாத நிலையில் கணவன் ஒருதேசத்தில் மனைவி ஒரு தேசத்தில் பிள்ளைகளோ மாமனிடமோ, பேரன் பேத்தியிடமோ என்று எங்கடை சனங்கள் ஆளுக்கொரு திசையில் அடிக்கிற அந்நியக்காற்றில் மனநோயாளிகள் ஆகி எல்லாவிடமும் இருக்கிறார்களாம், உண்மையா? அப்படியானால் எங்கடை சனத்தின் எதிர்காலம் எங்கு செல்கிறது? வெளி நாடுகளில் வாழும் உங்களைப் போன்றவர்கள் எல்லாரும் வெளியே சொல்லமுடியா வேதனையில் வாழ்கிறார்களாமே, உங்கள் வாழ்வின் எதிர்பார்ப்புத்தான் என்ன? தொடர்ந்தும் உறவுகளுடன் இணையாமலும், மனதிற்குள்ளேயே தினந்தினம் புழுங்கிப்புழுங்கி காலஓட்டத்தில் காணாமல் போகப் போகிறீர்களா? என்னவோ இந்தக் கேள்வி எனக்குள் கொஞ்சக்காலமாகக் குடைஞ்சு கொண்டு இருக்கு, ஆரிடம் கேக்கிறது அதான் உன்னிடம் கேட்டனான். இப்பிடிக் கேட்டுவிட்டேன் என்று கடிதம் போடாமல் விடாதே. நான் கேட்டது பிழையா இருந்தா 'சொறி' சொல்கிறேன். வேண்டாம் இண்டைக்கு நான் எழுதுகிற கடிதம் கொஞ்சம் காரமாவே இருக்கு. அது உன்னைப் புண்படுத்திவிடக்கூடும் அதால இந்தக் கடிதத்தை இத்தோடு முடிக்கிறன். அடுத்த கடிதத்தில அன்பான வசந்தியா வாறன். இப்படிக்கு

*- அருமைத்தோழி வசந்தி*

# ஆச்சியின்... அட்வைஸ்!

aachi@orupaper.com

*கேள்வி:*

எனது சகோதரர் இந்த வயதிலும் மனைவியிடம் படும் அவஸ்ததையைக் கேட்கப் பொறுக்கவில்லை. அவர் 50 வயது வரை இலங்கையிலும், 18 வருடமாக இங்கிலாந்திலும் வேலை செய்து பிள்ளைகளை ஏஜென்சி மூலம் அழைத்து, நல்லதாக்கிவிட்டதோடு, காதலித்துத் மணந்த 10 வயது இளமையான மனைவியையும் இங்கு அழைத்து, ஓய்வு காலத்தை மூத்த மகன் குடும்பத்தினருடன் களித்து வந்தார். சடுதியாக, மூத்த மருமகளுடன் இருக்கப்பிடிக்காத மாமியார், தனது குடும்பத்தைச் சார்ந்த இளைய மருமகளுடன் கனடாவில் வசிக்க என UK இல் P.R. கிடைத்த கணவரை இழுத்துக்கொண்டு போய்விட்டார். அங்கு அதிக குளிராலோ அல்லது வயது போனதாலோ, கை, கால் வழங்காமல் எனது சகோதரர் பாரிச வாதத்திற்குட்பட்டு அவஸ்தைப்படலானார். இந்நிலையில் அவருக்கான வைத்தியத்துச் செலவழிக்காமல் சாகப்போற உனக் கேன் இந்த வீண் செலவு என்று அவரின் பென்சன் தொட்டு, வங்கிக் கணக்குகளையும் தனக்கு மாற்றி, வாழ்க்கையிலே உழைத்தறியாத எனது அண்ணியார் பல ஆயிரம் Dollerக்கு அதிபதியாகிவிட்டா என்று எனக்கு எரிச்சலுமில்லை, இது வரை தன்னையும், பிள்ளைகளையும் பார்த்த மனிசனுக்கு மனிதாபிமான உதவியைச்செய்யாமல் அவர் அவஸ்த்தைப்படுகிறார் என்று அறிய என்னால் முடியவில்லை. வெளிநாட்டுக்கு வந்த பெண்கள் எல்லோரும் இப்படியாகவா மாறுவார்கள்? (பெயர் குறிப்பிடவேண்டாம்)

**ஆச்சியின்... அட்வைஸ்!**

நாணயத்திற்கு இரண்டு பக்கம். ஒருபக்கத்தை மட்டும் பார்த்து ஒரு முடிவும் எடுக்க இயலாது. காதலித்து கடிமணம் புரிந்தவர்கள் என்று வேறு சொல்கிறீர்கள். உங்களின் சகோதரர் என்றாலும் குடும்பம் என்று வரும் போது அவரின் குடும்பம் வேறுதானே அதற்குள் நடக்கும் எல்லாமே உங்களுக்கு தெரிந்திருக்கவும் நியாயம் இல்லைத்தானே. சிலபேர் பேசும்போது யதார்த்தமாகச் சொல்லுபவைகளும், செய்பவைகளும் கூட சிலநேரம் திரிபடைந்து அடுத்த அந்தத்தை அடையும் போது பூதாகரமானதொன்றாக வந்து விடும். உங்கள் அண்ணியோடு அவருக்கு ஆறதலாக மனம் விட்டுக் கதைத்து அவர் பக்க நியாயத்தை அறியமுயல்வதோடு உங்கள் ஆதங்கங்களின் விடையையும் அறிந்து கொள்ளுங்கள்.

# மாதர் தம்மை இழிவு செய்யும் மடமை தன்னைக் கொளுத்துவோம்

பெண்களில் பேதை, பேரிளம்பெண் எனப் பல பருவங்கள் உள்ளன என எமக்கு எல்லோருக்கும் தெரியும். எமது பேப்பரில் சிறுமிகளுக்கென சிறுவர்பக்கமும், வாலை குமரிகளுக்கு டீன் பக்கமும் உள்ளது. ஆனால் அதற்கு மேல் இருந்து ஆச்சியவைகள் வரைக்கும் உள்ள வயதினர்களுக்கென பெண்கள் பக்கம் உள்ளது என நினைவுபடுத்த விரும்புகிறோம். அப்பிடி பார்த்தால் பெண்கள் பக்கத்திற்கு வரும் ஆக்கங்கள் காணது என்றே சொல்லவேண்டும்.

பொறுப்புக் கூடிய வயதினர் என்பதால் நேரமின்மை என்று சாக்கு போக்குச் சொல்லாது எழுதிப்பாருங்கள். எவ்வளவு சுவாரசியமான விடயம் என்று உங்களுக்கே புரியும். நாடு விட்டு நாடு வந்து எவ்வளவோ விடயங்களை, நினைவுகளை, அநுபவங்களை சுமந்து வந்திருக்கிறீர்கள். அத்தனையையும் உங்களோடு மண்ணுக்குள் எடுத்து போகாதீர்கள். இலக்கியமாக்குங்கள் அது காலத்தின் கண்ணாடியாக மிளிரும்.

*- ஒரு பேப்பர் காரிகள்*

**LINGA & CO**

Legal Advisors and Commissioners of Oaths


- நீங்கள் ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கும் / வேலைபார்க்கும் உரிமை மறுக்கப்பட்டுள்ளதா?
- திருப்பி அனுப்பும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதா?
- ஐக்கிய இராச்சியத்தில் நீங்கள் தொடர்ந்து சட்டப்படி வசிக்க விரும்புகின்றீர்களா?
- அப்படியாயின் பல வழிகள் உண்டு.

உடன் எம்மை தொடர்புகொள்ளுங்கள்

12 ஆண்டுகால அனுபவமுள்ள முன்னணி குடிவரவு சட்ட நிறுவனத்திடம் இருந்து உங்கள் குடிவரவு பிரச்சினைகளுக்கு தீர்வுகாணுங்கள்.

**கவர்ச்சிகரமான விளம்பரங்களை கண்டு ஏமாந்து விடாதீர்கள்!**
**உண்மை நிலையை அறிய எம்மை தொடர்பு கொள்ளுங்கள்.**

We specialise in: Asylum and immigration matters



- Human Rights Applications
- Appeals
- Detention and Bail
- Entry clearance Application and appeal
- Injunction
- Judicial Review
- Work Permits
- EEA Application (ஐரோப்பிய பிரசைகள் தமது உறவினரை Sponsor செய்தல்)
- Student Visa, Visit Visa
- Highly skilled migration program
- Naturalisation Application

46 High street, Colliers wood, London, SW19 2BY
General Line: **020 8544 9285** / Emergency Line: **07771 646 441**
Fax: 020 8452 9530

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக *ஒரு பேப்பர்* நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பிவையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.


பிரித்தானியா:
Tel: 020 8286 9327
Fax: 020 8640 6972

கனடா:
Tel: 416-297-4999
Fax: 416-335-6009

பிரான்ஸ்:
Tel: 01 7289 8165

சுவிஸ்:
Tel: 043 5000 277

email: info@orupaper.com




## மணமகள் தேவை

1) Jaffna parents living in colombo, looking for their son 30 years, 5'10" tall, B.Sc qualified, on student visa in U.K. looking for a suitable bride from U.K. Ref: 944

2) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 39 வயது 5' 9" உயரமுள்ள. Computer technician ஆக வேலை செய்யும் விவாகரத்து பெற்ற மணமகனுக்கு உறவினர் தகுந்த மணமகளை கனடாவில் தேடுகின்றனர். Ref: 943

3) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 29 வயது 5' 4" உயரமுள்ள, தற்போது கனடாவில் வசிக்கும் மணமகனுக்கு A/L படித்த மணமகளுக்கு தகுந்த மணமகளை உறவினர் லண்டனில் தேடுகின்றனர். Ref: 942

4) கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்ட 43 வயது 5' 5" உயரமுள்ள, தற்போது கனடாவில் வசிக்கும் தாரமிழந்த பிள்ளைகற்ற மணமகனுக்கு தகுந்த மணமகளை சகோதரி தேடுகின்றார். Ref: 941

5) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 33 .வயது 5' 5" உயரமுள்ள, தற்போது கனடாவில் வசிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் கனடாவில் தேடுகின்றனர்.Ref: 940

6)யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 30 வயது 6' 2" உயரமுள்ள, தற்போது பிரான்சில் வசிக்கும் A/L படித்த மணமகனுக்கு தகுந்த மணமகளை பிரான்சிலுள்ள சகோதரி தேடுகின்றார். Ref: 939

7) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 32 வயது 5' 6" உயரமுள்ள, தற்போது பிரான்சில் வசிக்கும A/L படித்த மணமகனுக்கு தகுந்த மணமகளை பிரான்சிலுள்ள சகோதரன் தேடுகின்றார். Ref: 938

8) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 30 வயது 5' 8" உயரமுள்ள, தற்போது ஜேர்மனியில் வசிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் ஐரோப்பிய நாடுகளில் தேடுகின்றனர். Ref: 937

9) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 47 வயது 5' 6" உயரமுள்ள, தற்போது நோர்வேயில் ஆசிரியராகக் கடமைபுரியும் மணமகனுக்கு தகுந்த மணமகளை உறவினர் தேடுகின்றனர். Ref: 936

10) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 30 வயது 5'9" உயரமுள்ள, தற்போது கொழும்பில் Electronics Institute சொந்தமாக நடாத்தும் மணமகனுக்கு லண்டனிலுள்ள சகோதரன் தகுந்த மணமகளை இலங்கை/வெளிநாட்டில் தேடுகின்றார். Ref: 935

11) கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்ட 36 வயது 5' 8" உயரமுள்ள, BBA(Lon) படித்த லண்டனில் 7 வருடங்களாக வசிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளை உறவினர் இலங்கை/ Europe இல் தேடுகின்றனர். Ref: 934

12) Jaffna Parents living in Colombo looking for their son 31 years, 5'6" tall, Singapore Citizen, working as a Technical Specialist in Singapore, a suitable bride in Sri-Lanka/U.K/ Australia/U.S.A/Canada. Ref: 933

13) இங்கிலாந்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 27 வயது 5'9" உயரமுள்ள, வங்கியில் பணிபுரியும் பட்டதாரி மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் லண்டனில் தேடுகின்றனர்.Ref: 932

14) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 33 வயது 5'7" உயரமுள்ள, MBBS Doctor ஆக வவுனியாவில் வேலை செய்யும் மணமகனுக்கு தகுந்த மணமகளை லண்டனில் உள்ள சகோதரி தேடுகின்றார். Ref: 931

15) Jaffna parents living in U.K looking for their british born son 27 years old, 5'7" tall, B.Sc qualified and working as an IT analyst in london, a suitable bride. Ref: 930

16) கிழக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 31 வயது 5'11" உயரமுள்ள, லண்டனில் நிரந்தர வதிவிடவுரிமையுள்ள, A/L படித்த, சுயதொழில் செய்யும் மணமகனுக்கு தகுந்த மணமகளை உறவினர் ஐரோப்பிய நாடுகளில் தேடுகின்றனர். Ref: 929

17) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 33 வயது 5'7" உயரமுள்ள, தற்போது லண்டனில் வசிக்கும் A/L படித்த மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் லண்டன்/ கனடா/ ஐரோப்பிய நாடுகளில் தேடுகின்றனர். Ref: 928

18) Jaffna Parents looking for their son, 37 years old, 5'6' -tall, British Citizen, IT graduate, working for a leading IT consultancy in UK, a suitable bride. Ref: 927

19) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 30 வயது 5'7" உயரமுள்ள, லண்டன் பிரஜாவுரிமையுள்ள M.Sc graduate நிரந்தர உயர் பதவி வகிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளை தகப்பனார் தேடுகின்றார்.Ref: 926

20) Jaffna brother living in UK looking for his brother 32 years old, 5'10" tall, ACCA partly qualified accountant working for an accounting firm, a suitable bride. Ref: 925

21) Jaffna Sister in UK looking for her divorced brother 35 years old 5'9" tall , born in Sri Lanka and living in USA , graduate and works for the state, a suitable bride from UK/USA/ Canada. Ref: 924

22) திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட 32 வயது 5'7" உயரமுள்ள, மட்டக்களப்பில் Programming Assistant ஆக வேலை செய்யும் MBA பட்டதாரி மணமகனுக்கு தகுந்த வரனை லண்டனிலுள்ள சகோதரி இலங்கை/வெளிநாட்டில் தேடுகின்றார். Ref: 923

23) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 36 வயது 6' உயரமுள்ள, தற்போது கனடாவில் வசிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளை அவரது நண்பர் கனடா/Europe இல் தேடுகினறார். Ref: 922

24) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 35 வயது 5' 8" உயரமுள்ள, தற்போது லண்டனில் வசிக்கும் O/L படித்த மணமகனுக்கு தகுந்த மணமகளை தாயார் தேடுகின்றார்.Ref: 921

25) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 32 வயது 5' 8" உயரமுள்ள, பிரித்தானிய பிரஜாவுரிமையுள்ள சொந்தத் தொழில் செய்யும் மணமகனுக்கு தகுந்த மணமகளை தாயார் தேடுகின்றார். Ref: 920

26) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 28 வயது 5' 5" உயரமுள்ள, UK PR உள்ள Manager ஆக வேலை செய்யும் மணமகனுக்கு தகுந்த மணமகளை இலங்கையிலுள்ள சகோதரி தேடுகின்றார். Ref: 919

27) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 30 வயது 5' 7" உயரமுள்ள, தற்போது கொழும்பில் வசிக்கும் B.Sc பட்டதாரி மணமகனுக்கு தகுந்த மணமகளை லண்டனிலுள்ள சகோதரி தேடுகின்றார். Ref: 918

## மணமகன் தேவை

1) Jaffna parents living in Colombo looking for their daughter 33 years 5'4" tall, Advanced Diploma in computerscience qualified , currently working in a private company in Colombo, a suitable groom. Ref: 1265

2) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 45 வயது 5' 1" உயரமுள்ள, தற்போது கனடாவில் வசிக்கும் திருமணப்பதிவு செய்து இரத்துச் செய்த மணமகளுக்கு தகுந்த மணமகனை சகோதரி தேடுகின்றார். Ref: 1264

3) வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட 33 வயது 5' 4" உயரமுள்ள, A/L படித்த தற்போது முல்லைத்தீவில் வசிக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகளை உறவினர் தேடுகின்றனர். Ref: 1263

4) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 25 வயது 5' 3" உயரமுள்ள, B.Sc computer படித்த தற்போது இந்தியாவில் வசிக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டனிலுள்ள சகோதரி தேடுகின்றார். Ref: 1262

5) தென்மராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட 37 வயது 5' 6" உயரமுள்ள, B.A படித்த மணமகளுக்கு தகுந்த மணமகளை உறவினர் வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref: 1261

6) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 37 வயது 5' 3" உயரமுள்ள, இந்தியாவில் B.A (Music) படித்து தற்போது M.A படித்துக்கொண்டிருக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். Ref: 1260

7) முதூரைப் பிறப்பிடமாகக் கொண்ட தற்போது திருமலையில் வசிக்கும் 21 வயது 5'2" உயரமுள்ள, O/L படித்த மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டனிலுள்ள சகோதரன் ஐரோப்பிய நாடுகளில் தேடுகின்றார். Ref: 1259

8) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 27 வயது 5' 6" உயரமுள்ள, BA படித்து கொழும்பில் Tutor ஆக வேலை செய்யும் மணமகளுக்கு தகுந்த படித்த மணமகனை கனடாவிலுள்ள சகோதரி தேடுகின்றார். Ref: 1258

9) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 33 வயது 5' 2" உயரமுள்ள, தற்போது வவுனியாவில் Programming Assistant ஆக வேலை செய்யும் பட்டதாரி மணமகளுக்கு தகுந்த மணமகனை உறவினர் இலங்கை/கனடா/லண்டனில் தேடுகின்றார்கள். Ref: 1257

10) Sister living in U.K looking for her sister 43 years old, 5'4" tall, CIMA finalist working in Colombo, a suitable groom from UK or Canada. Ref: 1256

11) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 26 வயது 5'2" உயரமுள்ள, தற்போது அங்கே ஆசிரியையாகக் கடமை புரியும் BA பட்டதாரி மணமகளுக்கு தகுந்த மணமகனை கனடாவில் வசிக்கும் மாமா Canada/Sri Lanka/ UK/Europe இல் தேடுகின்றார். Ref: 1255

12) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 27 வயது 5'2" உயரமுள்ள, BA Accounting & Finance படித்து கொழும்பில் வேலை செய்யும் மணமகளுக்கு தகுந்த மணமகனை சகோதரன் UK இல் தேடுகின்றார். Ref: 1254

13) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 29 வயது 5'9" உயரமுள்ள, BBA படித்து தற்போது கனடாவில் வசிக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். Ref: 1253

14) Jaffna Parents living in colombo looking for their daughter, 30 years, 5'3" tall, working as an account assistant in Colombo, a suitable groom from U.K/Canada/Australia. Ref: 1252

15) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 43 வயது 5'4" உயரமுள்ள, தற்போது கொழும்பில் அரசாங்க உத்தியோகம் பார்க்கும் மணமகளுக்கு தகுந்த மணமகனை உறவினர் தேடுகின்றனர். Ref: 1251

16) Jaffna parents living in Australia looking for their daughter, 28 years, 5'5" tall, a B Tech (Computers) graduate & Now studying final year MBBS at Sydney University, a suitable groom from U.K/Canada/USA/ NZ/Australia. Ref: 1250

17) Jaffna parents living in Australia looking for their daughter, 26 years, 5' tall, Australian Citizen, a B.Com, working in a multi national company ,a suitable groom from U.K/Canada/ USA/NZ/Australia. Ref: 1249

18) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 30 வயது 5'4" உயரமுள்ள, கனடா நிரந்தர வதிவிடவுரிமையுள்ள, BTec in Accounting படித்த, விவாகரத்துப் பெற்ற மணமகளுக்கு தகுந்த மணமகனை உறவினர் தேடுகின்றனர். Ref: 1248

19) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 43 வயது 5'4" உயரமுள்ள, தற்போது கொழும்பில் அரசாங்க உத்தியோகம் பார்க்கும் மணமகளுக்கு தகுந்த மணமகனை உறவினர் தேடுகின்றனர். Ref: 1247

20) Jaffna brother living in U.K looking for his sister 26 yeasrs old, 5'3" tall, MBBS qualified, on visitor visa in U.K, a suitable groom from U.K. Ref: 1246

21) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 35 வயது 4'9' உயரமுள்ள, தற்போது அங்கே ஆசிரியையாக பணிபுரியும் மணமகளுக்கு தகுந்த மணமகனை வெளிநாடுகளில் உறவினர் தேடுகின்றனர். விவாகரத்து பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். Ref: 1245

22) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 34 வயது 5'2" உயரமுள்ள, சிறு வயதிலிருந்து லண்டனில் வசிக்கும் விவாகரத்துப் பெற்ற நல்ல தொழில்புரியும் மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டன்/இலங்கை இல் பெற்றோர் தேடுகின்றனர். Ref: 1244

23) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 36 வயது 5'3" உயரமுள்ள, A/L படித்த தற்போது கொழும்பில் வசிக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டனிலுள்ள சகோதரன் U.K/ Sri Lanka/Canada இல் தேடுகின்றார். Ref: 1243

24) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 36 வயது 5' உயரமுள்ள, தற்போது மட்டக்களப்பில் வசிக்கும் A/L படித்த மணமகளுக்கு தகுந்த மணமகனை கனடாவில் வசிக்கும் சகோதரி கனடா/லண்டன் இல் தேடுகின்றார். Ref: 1242

25) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 27 வயது 5' 4" உயரமுள்ள, B.Sc(Hons), தற்போது U.K இல் Phd செய்யும் மணமகளுக்கு தகுந்த படித்த மணமகனை கனடாவிலுள்ள சகோதரி தேடுகின்றார். Ref: 1241

26) யாழ்ப்பாண்த்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 22 வயது 5' உயரமுள்ள, தற்போது கொழும்பில் வங்கியில் பணிபுரியும் மணமகளுக்கு தகுந்த மணமகனை உறவினர் UK/Europe இல் தேடுகின்றனர். Ref: 1240

27) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 32 வயது 5' உயரமுள்ள, O/L படித்த மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டனிலுள்ள சகோதரி தேடுகின்றார். Ref: 1239

28) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 30 வயது 5' உயரமுள்ள, A/L படித்த மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டனிலுள்ள சகோதரி தேடுகின்றார். Ref: 1238

29) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 31 வயது 5' 3" உயரமுள்ள, அவுஸ்திரேலிய வதிவிடவுரிமையுடைய Chemical engineering முடித்து M.Sc படித்துக் கொண்டிருக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகனை உறவினர் தேடுகின்றனர். Ref: 1237

30) Jaffna Parents living in Canada looking for their divorced daughter 41 years, 5' tall, Canadian citizen, B.Sc graduate and working in cánada, a suitable groom. Ref: 1236

31) Jaffna sister living in UK looking for her sister 41 years, 5'4" tall, Mphill qualified, working as a lecturer in Jaffna university a suitable groom. Ref: 1235

32) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 45 வயது 5' 8" உயரமுள்ள, A/L, Hotel management படித்த கனடாப் பிரஜாவுரிமையுள்ள - மணமகளுக்கு தகுந்த மணமகனை சகோதரன் தேடுகின்றார். விவாகரத்து பெற்ற பிள்ளைகள் அற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். Ref: 1234

33) கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்ட 32 வயது 5'5" உயரமுள்ள, தற்போது அங்கே Doctor ஆக வேலை செய்யும் மணமகளுக்கு இலங்கையில் தகுந்த வரனை லண்டனிலுள்ள சகோதரன் தேடுகின்றார். Ref: 1233

## ஈழக் கவிதை

### புதுவை இரத்தினதுரை

நிலவு தெய்வமாம் நீள் வயல் வரம்பிலே
நின்றுலவிடும் போதிலே நீ தெய்வமாம்
அழகு பூத்திடும் யாவுமே தெய்வமாம்
இலகெனச் சுவை அற்றதாய் வாழ்வினை
எய்திடும் மனப்பக்குவம் தெய்வமாம்
உலவுகாற்றது தெய்வமாம் நாளதின்
உதயவேளை இவ்வுலகது தெய்வமாம்

வதைக்கு நேரெதிராகவே நின்றிடு
வலியனாகி வல்லமை சேர்த்திடு
விதைத்த மாமணி வீரரைக் கும்பிடு
விடியும் வேளை பூபாளமே பாடிடு
உதைத்த காலினைக் கும்பிடும் ஓர்நிலை
உனக்கு நேரும் என்றால் உயிர் போய் உடல்
புதைக்கும் போதிலும் புன்னகை செய்திடு
புதிய வாழ்வதின் வேரென ஆகிடு.

*— 2003 புரட்டாதி*

## பிடிக்கும்

தாய் பிடிக்கும் எனக்கு
என்மேல் பாசத்தைப் பொழிவதால்

தந்தை பிடிக்கும் எனக்கு
என்மேல் அக்கறை கொள்வதால்

நட்பு பிடிக்கும் எனக்கு
என்னை வழிநடத்திச் செல்வதால்

இயற்கை பிடிக்கும் எனக்கு
புத்துணர்ச்சியைத் தருவதால்

காதல் பிடிக்கும் எனக்கு
என்னில் மாற்றங்களை உருவாக்குவதால்

மழலை பிடிக்கும் எனக்கு
என்னில் சோகத்தை தீர்ப்பதால்

மவுனமும் பிடிக்கும் எனக்கு
அது உன்னிடம் நிலையாய் உள்ளதால்

காத்திருப்பும் பிடிக்கும் எனக்கு
உனக்காக காத்திருப்பதால்

*-கண்ணன்*

## old is gold

### சவால் – சுந்தர ராமசாமி

நோவெடுத்துச்சிரம் இறங்கும் வேளை
துடைகள் பிணைத்துக்கட்ட
கயிறுண்டு உன் கையில்

வாளுண்டு என் கையில்
வானமற்ற வெளியில் நின்று
மின்னலை விழுங்கிச் சூலுறும்
மனவலியுண்டு

ஓய்ந்தேன் என மகிழாதே
உறக்கமல்ல தியானம்
பின் வாங்கல் அல்ல பதுங்கல்

எனது வீணையின் மீட்டலில்
கிழிபடக் காத்துக் கிடக்கின்றன
உனக்கு சரையேற்றுக் காலங்கள்

எனது கொடி பறக்கிறது
அடிவானத்துக்கு அப்பால்.

*—1972*

## புதிதாய் ஒன்று

புதிய நூற்றாண்டு பிறக்கும் வேளை
வாண விளையாட்டுக் காட்டிக்
குதூகலமாய் உறவினருக்கு வாழ்த்துச்
சொல்லும்
நாளல்லவா அது.

இன்பமாய் குதூகலிக்கும் இந்த
நூற்றாண்டை
எப்படி வரவேற்பேன்
கண்களில் ஏக்கமும் வார்த்தையில்
வேசமும் காட்டும் இவ்வாழ்க்கை
அடுத்த ஆண்டிலும் தொடருமா

இவ்வாண்டே முடியட்டும்
இக் கொடுமை
புதிய கதை புதிய பாதை என்று
புதிதாய் தொடரட்டும் வாழ்க்கை

*- Scarborough வெண்ணிலா*

## திரைக்கவி

வெய்யிலோடு விளையாடி
வெய்யிலோடு உறவாடி
வெய்யிலோடு மல்லுக்கட்டி
ஆட்டம் போட்டோமே

பசி வந்தால் குருவி முட்டை
தண்ணிக்கு வேலன் குட்டை
பறிப்போமே சோளத்தட்டை
புழுதிதான் நம்ம சட்டை

பொட்டல் காட்டில் பொழுதெல்லாம்
ஓட்டம் போட்டு திரிஞ்சோம்
வெயிலைத் தவிர வாழ்க்கையில்லை
வேறை என்ன அறிஞ்சோம்
எங்க ஊரு மேகமெல்லாம்
எப்பவாச்சும் மழை பெய்யும்
தொப்புள் கொடியைப் போலத் தான்
இந்த ஊரை அறிஞ்சோம்
வெயிலைத் தவிர வாழ்க்கையில்லை
வேறை என்ன அறிஞ்சோம்

*- நா.முத்துக்குமார்*

## காதல் செய்யச் சொல்லுதடி

இது என்ன மனசோ ,
காதல் செய்ய சொல்லுதடி ...
காதலுக்கு அர்த்தமும் புரியல
காதலர்கள் உறவுகளும் சரி--இல்ல
கனவுக்கு மட்டும் குறையில்ல
நடப்பது எதுவும் விளங்கல

நேற்று வரையோ நினைப்பில்ல
இன்று என்னவோ உறக்கமில்ல
இடையில் வந்ததுக்கு உருவமில்ல
இது படுதுறபாடு முடியல

தூக்கம் என்னில் வர மறுக்குதே
வேலைகள் ஆயிரம் இங்கே இருக்குதே
நினைவுகள் என்னை ரொம்ப பொசுக்குதே
எண்ணம் அவளுள் உறைந்து கிடக்குதே

ஏதோ இந்த மனசு
காதல் செய்ய சொல்லுதடி ...

*- மது உறை*

## மொழி

இயற்கையின் மொழிகள் புரிந்துவிடில்
மனிதரின் மொழிகள் தேவையில்லை!
இதயத்தின் மொழிகள் புரிந்துவிடில்
மனிதர்க்கு மொழியே தேவையில்லை!

*- கறுப்பி*




NAG & CO
SOLICITORS

- CRIME
- CONVEYANCING
- MATRIMONIAL
- IMMIGRATION
- TRAFFIC MATTERS
- LANDLORD & TENANTS
- POLICE STATION MATTERS
- EMPLOYMENT MATTERS
- WORK PERMITS

Tel: 020 7737 1211 | Fax: 020 7737 0809
Unit 3 Holles House, Overton Road, Myattsfield Road South, London SW9 7JN
Nearest Underground - Brixton Station on Victoria Line and Oval Station on Northern Line

# அறுவைப் பக்கம்

## விஜயோடு சில நிமிடம்; கவுண்டர் 2



எல்லா விசேஷத்துக்கும் டீ.வி பேட்டிக்கு முதல் ஆளா வந்து நிக்கறது இளைய தளபதி தான். அவரையே இன்னைக்கு நம்ம நிகழ்ச்சிக்கும் சிறப்பு விருந்தினரா கூப்பிட்டுருக்கோம். அவரும் வழக்கம் போல வர ஒத்துக்கிட்டாரு. சரி இனி நிகழ்ச்சிக்கு போவோம்.

குறிப்பு: விஜய் ரசிகர்கள் இதை படித்து டென்ஷனானால் கவுண்டரை பிடிக்கவும்... இது முழுக்க முழுக்க நகைச்சுவைக்காக மட்டுமே!!!

க: ஏன்டா தமிழன் தமிழன்னு ஒரு படம் நடிச்சியே அது கதை கேட்டு தான் நடிச்சியா?

வி: டைரக்டர் ரெண்டே வரில எனக்கு கதை சொன்னாருணா... ஒரு தறுதலை தபால் தலையில் வருகிறான். இது தான்ணா அதோட கதை.

க: டேய் ரெண்டு வரில சொல்றதுக்கு அது என்னடா திருக்குறளா? கதை கேக்கறதுக்கு ஒனக்கு ஒரு மணி நேரமாகுமாடா? காசு போடறது எவனோ, படம் பாக்கறது எவனோங்கற தைரியத்துல நீ நடிச்சிட்டு இருக்க. யுத்னு ஒரு படம் நடிச்சியே அது நியாபகம் இருக்கா?

வி: அது மறக்கக்கூடிய படமாணா? ஆல் தோட்ட பூபதி பாட்டுக்கு தமிழ் நாடே ஆடுச் சேணா...

க: அது உன் ஆட்டத்துக்கு இல்லடி. சிம்ரன் ஆடனதால தமிழ் நாடே ஆடுச்சு. அதுல எதுக்குடா உனக்கு வெக்க வேண்டிய பேரை விவேக்குக்கு வெச்சிங்க?

வி: அது என்ன பேருங்கணா? நியாபகம் இல்லையே!!!

க: கருத்து கந்தசாமி. படம் முழுக்க கருத்து சொல்லியே மக்கள கொன்னுட்டனு உன் பேருல பொது நல வழக்கு வேற இன்னும் இருக்காம்.

வி: அண்ணா என்னங்கணா இதுக்கெல்லாம் போயி டென்ஷனாகிட்டு.

க: இதெல்லாம் விட இன்னோரு கொடுமை அந்த புதிய கீதை. அதுல உனக்கு எதுக்குடா ஆறு விரல்?

வி: கமல், விக்ரம், சூர்யா மாதிரி ஏதாவது வித்யாசமான கெட்டப்ல வரணும்னு ஆசைப்பட்டேண்ணா. அதனால தான் ஆறு விரல் வெச்சிக்கிட்டேன். உங்களால என்னை அடையாளம் கண்டு பிடிச்சிருக்கவே முடியாதே!!!

க: டேய்!!! கைல ஒரு விரல் அதிகமா வெச்சிக்கிட்டா அடையாளம் தெரியாதா? உன்னைய என்ன பண்றதுன்னே தெரியலையே. அதுல க்ளைமாக்ஸ் அதுக்கு மேல கொடுமை. வண்டில சைட் ஸ்டேண்ட் தட்டிவிட்டு ஆக்ஸிடெண்ட் ஆன ஒரே ஆள் நீதான்டா.

வி: என்னங்கணா இப்படி திட்றீங்க. நீங்க ரொம்ப மோசம்.

க: டேய் விஜய் மண்டையா! உன்னைய நம்பி காசு கொடுத்து தைரியமா வந்தா நீ இப்படி புதுமை பண்றேனு டகாட்டி வேலை பண்ணா உன்னைய என்ன பண்றது? நீயே சொல்லு அந்த திருமலை படமெல்லாம் மனுசன் பார்க்க முடியுமா? அதுல கடைசி சீன்ல நீ பேசற பஞ்ச் டயலாக் கொடுமை தாங்காம வில்லனே திருந்திடறான். நாங்க பாவம் என்ன பண்ணுவோம்?

வி: !/%#+&/!*%*

க: சரி.. கில்லி படத்துல எப்படிடா மதுரைல செமி ஃபைனல்ல தோத்துட்டு ஃபைனல்ல சென்னைல பஞ்சாப் டீம் கூட ஆடறீங்க?

(விஜய் தீவிரமாக சிந்திக்கிறார்)

க: சொல்லு மேன்!

வி: அது வேற மேட்சுங்கணா. அதுல லோக்கல் டீமோட கில்லி டீம் ஆடுதுண்ணா. இது தமிழ்நாடுக்காக கலந்துக்கற மேட்ச்ணா. (ஒரு வழியாக சமாளிக்கிறார் விஜய்)

க: டேய் டக்கால்டி மண்டையா. தமிழ் நாடு டீம்ல தான் ஓட்டேரி நரி, டுமீல் குப்பம் வவ்வாலு, ஆதி வாசி எல்லாம் இருக்கறாங்களாடா? சும்மா அடிச்சு விடாதடா.

வி: போங்கணா. என் படத்துல போய் லாஜிக் எல்லாம் பாக்கறீங்க.

க: அது சரி. கில்லி கூட பரவால. அந்த மதுரனு ஒரு படம் நடிச்சியே அது மனுசன் பாப்பானாடா? மீசைய ட்ரிம் பண்ணி கைல டேட்டு கூத்துனா அடையாளம் தெரியாதுனு தமிழ் நாட்டுக்கு புது டெக்னிக் சொல்லி கொடுத்ததே நீ தான்டா.

வி: ஏன்ணா அவன் மட்டும் கோட்டு போட்டா அடையாளம் தெரியாதுனு நடிக்கல?

க: அவன் எவன்டா?

வி: பேரெல்லாம் நான் சொல்ல மாட்டேன். அந்த படத்த பேரோட க்ளூ தரேன். 'ஜ'ல ஆரம்பிச்சி 'னா'ல முடியும்.

க: ஏன்டா உங்க அக்கப்போர்ல எங்கள கொடுமைப் படுத்தறீங்க? உங்களுக்குனு இருக்கானுங்க பாரு ரசிகர்னு சொல்லிட்டு அவனுங்கள சொல்லனும். அது எப்படிடா தைரியமா அந்த பேரரசு படத்துல எல்லாம் நடிச்ச?

வி: அண்ணா. அவர் எவ்வளவு பெரிய டைரக்டரு. அவர மாதிரி புதுசா சிந்திக்கிற டைரக்டரே தமிழ்நாட்ல கிடையாதுங்கணா.

க: டேய் அவன் போன வாரம் தான் துவைச்சு காயப் போட்டேன். இந்த மூஞ்சில சந்தனத்த பூசினா அடையாளம் தெரியாதுனுங்கறதெல்லாம் பெரிய சிந்தனையாடா. அவனை சொல்லக் கூடாது. முதல்ல உங்கள போட்டு நாலு சாத்து சாத்தனா சரியா போயிடும். இனிமே அவன் கூட சேராத. புரியுதா?

வி: சரிங்கண்ணா.

க: அப்பறம் குஷி படத்துல எதுக்கு ரெண்டு தடவை நடிச்ச?

வி: இல்லைங்களேணா. ஒரு தடவை தானே நடிச்சேன்.

க: நான் சொல்றது சச்சின்னு ரெண்டாவது தடவை அதே கதைல நடிச்சியே அதை சொல்றேன்.

வி: ஓ! குஷி படத்துலயும் சச்சின் படத்துலயும் ஒரே கதையாணா? அது எனக்கு தெரியாதே!

க: அடங்கொக்கா மக்கா. நீ நடிக்கிற படத்து கத உனக்கே தெரியாதா? ஒழுங்கா கதைய கேட்டு நடி. உன்னைய நம்பி காசு கொடுத்து வந்து அடிக்கடி எல்லாரும் ஏமாந்து போறோம். அப்பறம் இன்னோரு விஷயம் தெலுங்கு படம் பாக்கறத குறைச்சிக்கோ. நம்ம ஊர்லயே நல்ல டைரக்டருங்க எல்லாம் அருமையான கதையோட இருக்காங்க. நீ ஒழுங்க கதை கேட்டு நடி. அப்பறம் பஞ்ச் டயலாக் பேசறத இன்னையோட நிறுத்திடு. ஓகேவா?

வி: சரிங்கண்ணா... இனிமே ஒழுங்கா நடிக்கிறேன்னா... இனிமே உங்களை ஏமாத்தாம ஒழுங்கா கதை கேட்டு நடிக்கிறேங்க.

வாழ்க்கைங்கறது ஒரு வட்டம் அதுல கீழ இருக்கற வன் மேல வருவான் மேல இருக்கவன் கீழ போவான். ஆதி ஃப்ளாப் ஆயிடுச்சினு போக்கிரிய மிஸ் பண்ணிடாதீங்க...

க: டேய். இப்பதான சொன்னேன். இனிமே நீ மட்டும் பஞ்ச் டயலாக் பேசின உன் காத புடிச்சி கடிச்சி வெச்சிடுவேன். ஒழுங்கா ஓடி போயிடு... (கவுண்டர் துரத்த... விஜய் எஸ்கேப் ஆகிறார்)

*- வெட்டிப்பயல்*

## எனக்குப் பிடிக்காததே என்...

எனக்குப் பிடிக்காதது ஒன்றாயிருக்க காலம் இதுவரை அதற்குள்ளேயே வம்படியாக என்னைத் தள்ளிவிட்டு வந்திருக்கிறது. பள்ளிக்கூடத்தில் படிக்கும் போது பத்தாம் கிளாஸ் வரைக்கும் அறிவியல் பாடத்தில் வரும் இயற்பியல் (பிஸிக்ஸ்)பகுதி பிடிக்காது!

அடியேன் ப்ளஸ் டூவில் பர்ஸ்ட் குருப்பில் இருந்தபோது பிஸிக்ஸ் தனியான ஒரு பாடமாகப் படிக்கவேண்டியிருந்தது. (இருந்தாலும் சமாளித்து ரொம்ப ரசித்துப் படித்து 92% எடுத்தேன்)

பிளஸ்டூவில் பிஸிக்ஸ் பாடத்தில் வரும் எலக்டிரானிக்ஸ் பகுதி எனக்கு பிடிக்காது! (செமி கண்டக்டர் பிஸிக்ஸில் ஒரு டிரான்சிஸ்டரை அடிவாய், உமிழ்ப்பான், சேர்ப்பான் என்றும் Commonbase சர்க்யுட்ஐ பொது அடி வாய்ச் சுற்று என்று கல்வித்துறை மொழி பெயர்ப்பும், கலைச்சொற்களும் தமிழில் படுத்தி எடுக்கும்

கல்லூரியில் பட்டப்படிப்பில் இண்டஸ்டிரியல் எலக்டிரானிக்ஸ் எனது முதன்மை பிரிவு என்றானது

இண்டஸ்டிரியல் எலக்டிரானிக்ஸ் கல்லூரிப்படிப்பில் ஒரு சப்ஜெக்டான "இன்ஸ்ட்ருமெண்டேஷன்" சப்ஜெக்ட் எனக்குப் பிடிக்காது

மேற்படிப்பாக 'டிஜிட்டல் இன்ஸ்டிருமெண்டேஷன்' பிற்பாடு படிக்க வேண்டியதானது

வேலைக்கு வந்து முதன் முதலா 'டெக்னிகல் சேல்ஸ் & மார்க்கெட்டிங்' சேர்ந்தபோது தலைநகர் சென்னையில் ஆங்கிலம் பேசத் தடுமாறி (தமிழ் மீடியத்திலே பள்ளியிறுதி வரை படித்ததால்) வேலையை ராஜினாமா செய்துவிட்டு பொட்டியைக் கட்டிக் கொண்டு சென்னையைத் துறந்து சொந்த ஊர் சென்று அடுத்த ஆறுவாரத்தில் சுவற்றில் அடித்த பந்துமாதிரி சென்னைக்குத் திரும்பி வந்தேன். மீண்டும் சென்னை வந்து வேலையிலும் ஆங்கிலத்திலும் தேர்ச்சி பெற்றேன்.

தற்போது பத்தாண்டுகளாகச் சோறு போடுவது 'டெக்னிகல் சேல்ஸ் & மார்க்கெட்டிங்' சார்ந்த வேலை தான்!

வாழ்க்கையில் காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக் கொள்வது என்று ஆசைப்பட்டேன். ஆனா கல்யாணம் செய்து மனைவியைக் காதலிக்கிறேன். (கல்யாணம் பண்ணிட்டும் இன்னும் எனக்குக் காதலிக்கத் தெரியவில்லை என்பது மனைவியின் கம்ப்ளைண்ட்)

இப்போ சமீப காலங்களா தமிழ்நாட்டு அரசியல் சுத்தமா இல்லைன்றதாலே அரசியலே சுத்தமாப் பிடிக்கிறதே இல்லை எனக்கு (எந்தத் தேர்தலுக்கும் ஊரில் இல்லாததாலும் வாக்காளர் அட்டை இல்லாததாலும் இதுவரை ஓட்டுக்கூடப் போட்டதில்லை அடியேன்)

இதுவரையிலான என்னோட வரலாற்று வாழ்க்கையை அலசியதன்படி அரசியல்வாதி ஆகிடுவேனோன்னு ஒரே பயமா இருக்குங்க எனக்கு

தமிழ்நாட்டு மக்களுக்கு விதி வலியது என்று இருந்தால் கல்வி உதவி- சமூக சேவை- அரசியல்னு என்னை எதிர்கொள்ள வேண்டியிருக்குமோ?

தமிழ் நாட்டோட ஜாதகம் இருந்தா ஒரு கொப்பி அனுப்பவும் எனக்கு. பின்னே என்னோட ஜாதகம் தமிழ்நாட்டோட பொருந்திப் போகுறதையும் கணிச்சாத்தானே வெற்றியடைய முடியும் ( ரஜினி - கே.எஸ். ரவிகுமார் ஜாதகப் பொருத்தம்.. சக்குபாய் படம் டிராப்பானது பேக் டிராப்ல வருதா?)

நல்ல ஜோஸியர் இருந்தால் ரெக்கமெண்ட் செய்யவும். பகுத்தறிவோடு அரசியல் எதிர்காலம் கணிக்கத்தாங்க! பின்ன அரசியல்வாதியானா என்ன கலர் துண்டு போடனும்னு முதல்லயே முடிவு செஞ்சுடணும்ல!

விஜய்காந்த் மாதிரி நேர்மையான போலீஸ் ஆபீசர் சினிமாவா நிறையப் பார்த்ததில் 'அசிஸ்டெண்ட் கமிஷனர் ஹரிஹரன் ஐபிஎஸ்'ன்னு போலீஸ் ஜீப்ல கொடிபறக்க ஆகணும்னு (கொடி பறக்குது ரஜினி அசிஸ்டெண்ட் கமிஷனர் ஈரோடு சிவகிரி) ஆசைப்பட்டேன்...

ஆனா இதுக்கெல்லாம் நேரெதிரா எங்கே திருடனா ஆகிடுவேனோன்னு (மக்கள் மனதைத் திருடும் திருடனாத்தாங்க) தனியா இருக்கிறப்போ இப்போ ஃபீலிங்ல சீலிங்கை அப்பப்போ பார்க்கிறேன்.

*- ஹரிஹரன்*



இந்தியாவில வீராச்சாமி நல்லா ஓடுதாம்

# சினிமா

## சினித்துளி

### அழகப்பன்



இம்சை அரசன் விரைவில் இந்திரலோகத்தில் நா.அழகப்பன் ஆக மாறுகிறார். முதல் படத்தில் எட்டடி பாய்ந்தால் அடுத்த படத்தில் பதினாறு அடி பாயவேண்டும் என்று விதியா? இம்சை அரசனில் இரண்டு வேடங்களில் நடித்த வடிவேலு இந்திரலோகத்தில் நா. அழகப்பன் படத்தில் நான்கு வேடங்களில் வருகிறார். புராண இதிகாசத்தையும், நவீன உலகையும் இணைக்கும் கதை இது. படத்தின் ஒரே நோக்கம் பார்வையாளர்களை இரண்டரை மணி நேரம் சிரிக்க வைக்க வேண்டும்! இதனால் வடிவேலுவின் கெட்டப்பை மட்டுமல்லாமல் படத்தில் வரும் எமலோக செட்டப்பையும் படு காமெடியாக அமைக்க இருக்கிறார்கள். - வரட்டுமே பார்ப்பம்.

### மாணவன்



சூர்யா நடிக்கும் புதிய படம் வாரணம் ஆயிரம், கவுதம் மேனன் இப்படத்தை டைரக்ட் செய் கிறார். வாரணம் ஆயிரம் படத்தில் இவருக்கு பள்ளி மாணவன் வேடம். படத்தில் சிறுவயது தோற்றத்தில் தெரிவதற்காக உடல் எடையை குறைத்து மெலிதாகி வருகிறார். இது பற்றி சூர்யா கூறியதாவது:- வாரணம் ஆயிரம் படத்தில் எனக்கு சவாலான வேடம் கிடைத்துள்ளது. இந்த கேரக்டரை என்னால் சிறப்பாக செய்ய முடியும் என்று டைரக்டர் கவுதம் மேனன் உற்சாகப்படுத்தி வருகிறார். இந்த கேரக்டருக்கு என்னை பொருத்தமாக்க கடுமையான உடற்பயிற்சி செய்கிறேன்: - இதுவும் உங்களுக்கு நல்ல படமாக வரவேணும் எண்டு எங்களுக்கும் ஒரு ஆசைதான்.

### டப்பிங்



நயன்தாரா, பாவனா, நவ்யாநாயர், மீராஜாஸ் மின், அசின், கோபிகா, சந்தியா என பலர் மலையாளிகள். இவர்களில் ஒரு சிலர் தவிர மற்றவர்களுக்கு தமிழ் எழுத பேச வராது. எனவே அவர்கள் நடிக்கும் படங்கள்களில் வேறு ஒருவரை வைத்து டப்பிங் குரல் கொடுக்கச் செய்தனர். காதல் படத்தில் சந்தியாவுக்கு டப்பிங் குரல் கொடுக்கப்பட்டது. பரத், சந்தியா நடித்த கூடல் நகர் இப்பொழுது முடிவடைந்துள்ளதாம். இந்தப் படத்தில் முதல் முறையாக சந்தியா சொந்த குரலில் டப்பிங் பேசினார். சந்தியா தமிழ் தெலுங்கு என்று இரு மொழிகளிலும் சொந்த குரலில் பேசி நடிக்கிறார். நல்ல விசயம்! இதனை பாத்தாவது இங்க இருக்கிறவயள் தமிழ் கதைச்சா நல்லம்.

### சினிமாவில் நான்

எனக்கு நான்கு வயது இருக்கும்போது கமரா முன் நின்றேன். பதினான்கு வயதில் திரையுலகில் பிரவேசமானேன். குஜராத்தி மொழி படத்தில் கதாநாயகியாக நடித்தேன். அந்த படம் வெற்றி பெற்றது. நிறைய விருதுகள் பெற்றேன். 2002-ல் சொந்தம் என்ற படம் மூலம் தெலுங்கில் அறிமுகமானேன். அதன் பிறகு ஜெமினி படத்தில் நடித்தேன். இது தமிழில் இருந்து அதே பெயரில் ரீமேக் செய்யப்பட்ட படம். இரு படங்களும் வெற்றி பெற்றன. மொத்தம் 5 தெலுங்கு படங்களில் நடித்தேன். அதன் பிறகு தமிழில் எங்கள் அண்ணா படத்தில் நடிக்க வாய்ப்பு வந்தது. 11 தமிழ் படங்களில் நடித்துள்ளேன். இதுவரை மொத்தம் 18 படங்களில் நடித்துள்ளேன். தற்போது மாயா என்ற ஆங்கில படத்தில் நடித்து வருகிறேன். சொல்பவர் அக்கா நமிதா!

## சிறுதுளி !

நடிகரும், தே.மு.தி.க. தலை வருமான விஜயகாந்த் வீடு சென்னை சாலி கிராமத்தில் உள்ளது. இங்குதான் அவரது அலுவலகமும் செயல்பட்டு வருகிறது. அண்மையில் காலை 8 மணிக்கு வருமான வரித்துறை அதிகாரிகள் விஜயகாந்தின் வீட்டிலும், அலுவலகத்திலும் அதிரடியாக புகுந்து சோதனை நடத்தினார்கள்.

❖ ❖ ❖

சிவாஜி படத்தில் ரஜினிக்கு ஜோடியாக நடித்து வருபவர் நடிகை ஸ்ரேயா. இவர் தற்போது அப்படத்தில் நடித்துக் கொண் டிருப்பதால் வேறு எந்த படங்களிலும் நடிக்க ஒப்புக் கொள்ளவில்லை. இப்படப் பிடிப்பு பிப்ரவரிக்குள் முடிந்து விடும். இதனால் பிப்ரவரி மாதத்திற்கு பிறகு தான் வேறு படங்களில் நடிக்க ஒப்புக் கொள்வேன் என்று கூறி இருக்கிறார். இந்நிலையில் 2 பெரிய படக்கம்பெனிகள் அவரை அனுகியுள்ளன. அவர்களிடமும் பிப்ரவரிக்கு பிறகுதான் நடிக்க முடியும் என்று கூறி இருக்கிறாராம்.

❖ ❖ ❖

ஏப்ரலில் மீண்டும் சஞ்சய்ராமசாமியை இயக்குகிறார் ஏ.ஆர். முருகதாஸ்! இந்த இந்தி சஞ்சய்ராமசாமி வேறு யாருமில்லை, பாலிவுட்டின் படா ஹீரோ அமீர்கான்! 'கஜினி'யின் ஒரிஜினலான 'மெமண்டோ'வைப் பார்த்த அமீர்கான், ஒரிஜினலைவிட உங்க 'கஜினி'தான் டாப் என முருதாஸை பாராட்டியிருக்கிறார். இந்தி 'கஜினி'யில் கதாநாயகியாகும் அதிர்ஷ்டம் அடித்திருப் பது ஆயிஷா தாகியாவுக்கும், பிரியங்கா சோ ப்ராவுக்கும்.

❖ ❖ ❖

பழைய திரைப்படங்களின் பெயர்களை புதிய படங்களுக்கு வைப்பது பேஷனாகி வருகிறது. பார்த்திபனும் தனது பங்கிற்கு ஒரு படத்திற்கு பழைய படமொன்றின் பெயரை வைத்துள்ளார். இயக்குனர் ஸ்ரீதர், நடிகர் முத்துராமன், கல்யாண் குமார் மற்றும் தேவிகாவை உருவாக்கிய படம் 'நெஞ்சம் மறப்பதில்லை.' பார்த்திபன் நடிக்கும் புதிய படமொன்றிற்கு இதே பெயரை சூட்டியிருக்கிறார்கள். இந்தப் படத்தில் ஆம்புலன்ஸ் டிரைவராக வருகிறார் பார்த்திபன்.

❖ ❖ ❖

படப்பிடிப்புக்காக எங்கு சென்றாலும் அருகிலுள்ள கோயிலில் புகுந்து விடுவார் மீராஜாஸ்மின். அடிப்படையில் கிறிஸ்தவரான இவர் ஆசாரம் மிக்க இந்து கோயிலில் நுழைந்தது சில மாதங்களுக்கு முன் கேரளாவில் புயலை கிளப்பியது. பிறகு பணம் கொடுத்தார். அண்மையில் படப்பிடிப்பு முடிந்தபின் இரவு ஒன்பது மணியளவில், திருவண்ணாமலையார் கோயிலில் சாமி கும்பிட்டாராம்.



## "ஷில்பா ஷெட்டி"

இங்கிலாந்தில் சானல் 4 டிவி நடத்திய பிக்பிரதர் நிகழ்ச்சியில் நடிகை ஷில்பா ஷெட்டி அபார வெற்றி பெற்றார். இன வெறியால் அவமானப்படுத்தப்பட்ட அவருக்கு 67 சதவீத ஆதரவு கிடைத்தது. இந்த வெற்றியால் நடிகை ஷில்பா ஷெட்டியின் புகழ் அந்தஸ்து ஒரே நாளில் உலக அளவில் உயர்ந்து விட்டது. 31வயதாகும் ஷில்பா ஷெட்டி இது வரை 37 படங்களில் நடித்துள்ளார். இதில் பெரும்பாலான படங்கள் தோல்வியை தழுவியதால் இந்தி பட உலகம் அவ்வளவாக அவரை கண்டு கொள்ளாமல் இருந்தது.

எனவே எய்ட்ஸ் விழிப்புணர்வு பிரசாரத்தில் ஆர்வம் காட்டி வந்தார். மும்பை செம்பூரில் வசித்து வரும் ஷில்பாஷெட்டி பெரும் பணக்காரர் என்று சொல்லும் அளவுக்கு மிக, மிக உயர்ந்த பொருளாதார நிலையில் இல்லாமல் இருந்தார். ஆனால் இன்று பிக்பிரதர் வெற்றிக்கு பிறகு அவர் கோடீஸ்வரர் விஐபிக்களின் வரிசையில் இடம் பிடித்துள்ளார். அதோடு இது வரை இந்திய நடிகைகள் யாருக்கும் கிடைக்காத பப்ளிசிட்டியும், புகழும் அவருக்கு கிடைத்துள்ளது.

பிக்பிரதர் நிகழ்ச்சியில் வெற்றி பெற்றதும் அவருக்கு ரூ.5கோடி கிடைத்தது. இது தவிர பரிசுப் பொருட்களும் குவிந்தன. உலகின் பல நிறுவனங்கள் ஷில்பாவை தங்கள் விளம்பரகாரர் ஆக்குவதற்காக பரிசுகளை அள்ளி, அள்ளிக் கொடுத்தபடி உள்ளன. பிரபல நிறுவனங்கள் மூலம் மட்டும் ஷில்பாவுக்கு ரூ.10 கோடி வரை கிடைத்துள்ளது. பிக்ஸ் பிக்சர்ஸ் நிறுவனம் தன் புதிய ஆலிவுட் படத்தில் ஷில்பாவை ஒப்பந்தம் செய்ய முன் வந்துள்ளது. பிபிசியில் காமெடி தொடர் ஒன்றில் முக்கிய வேடம் ஒன்றுக்கு ஷில்பாவை கேட்டுள்ளனர். வசன கர்த்தா சஞ்சீவ் பாஸ்கர் இது தொடர்பாக ஷில்பாவின் தாய் சுனந்தாவுடன் பேசி வருகிறார். இந்த காமெடி தொடர் மூலமாகவும் ஷில்பாவுக்கு கோடிக் கணக்கில் பணம் கிடைக்கும். இவை தவிர புத்தகங்கள் எழுதுவது, கிரிக்கெட் நிகழ்ச்சியை தொகுத்து வழங்குவது, விருது நிகழ்ச்சியில் பங்கேற்பது, டி.வி டாகுமெண்டரியில் நடிப்பது போன்றவற்றுக்கு ஷில்பா ஒப்பந்தம் ஆகி உள்ளார். லண்டனில் புகழ் பெற்ற ஆடை, அலங்கார, நகை டிசைன் நிறுவனங்கள் ஷில்பா விடம் ஒப்பந்தம் செய்ய போட்டி போட்டு வருகின்றன.

இத்தகைய முதல் ரவுண்டிலேயே ஷில்பா ஷெட்டிக்கு ரூ.45 கோடி குவிந்துள்ளதாக தெரிய வந்துள்ளது. ஷில்பாவை இன்று வரை வெளிநாட்டு நிறுவனங்கள்தான் முற்றுகையிட்டு மொய்த்தப்படி உள்ளன. அவர் இந்தியா திரும்பியதும், அவருக்கு கிடைக்கப் போகும் பப்ளிசிட்டியைப் பொறுத்து ஷில்பாவுக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கலாம்.

எனவே இந்தியாவிலும் கோடிக்கணக்கில் பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு ஷில்பா ஷெட்டிக்கு கிடைத்துள்ளது. சினிமாவில் தான் ஒரே பாடல் காட்சியில் கதாநாயகனின் அந்தஸ்து உயர்ந்து, அவன் பணக்காரனாகி விடுவதைப் பார்த்து இருக்கிறோம். ஆனால் உண்மையிலேயே பிக்பிரதர் வெற்றி மூலம் நடிகை ஷில்பா ஷெட்டி ஒரே நாளில் ரூ.45 கோடி குவித்து சாதனை படைத்து விட்டார்.

- மாலைமலர்

சகல சட்ட ஆலோசனைகளுக்கும்

- வீடு விற்க / வீடு வாங்க
- குற்றவியல்
- குடியியல்
- விவாகரத்து
- தொழில் பிணக்கு
- கடன் வழக்கு
- தஞ்ச மனு
- மேன் முறையீடு
- குடிவரவு
- குடி அகல்வு
- போக்குவரத்து
- வாகன வழக்கு

தொடர்புகளுக்கு:
சுரம்யா கிருஸ்ணகுமாரன் / லோசனா தேவராசன்
020 7840 0505 / 0774 770 8213

தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்
- பாரதிதாசன்

SK Solicitors
Administrator of Oaths



Unit 405, 4th Floor, 71 Bondway, London SW8 1SQ
Tel: 020 7840 0505 / Fax: 020 7840 0505
Mob: 07985 189 290 / 07747 708 213

# சினிமா

## இந்திய சினிமாவில் நம்மவர் கௌரவிப்பு







திரு மாணிக்கம் நாராயணன் அவர்கள் தயாரித்த 'வேட்டையாடு விளையாடு' திரைப்படத்தின் நூறாவது நாள் வெற்றி விழா சென்னை சத்யம் திரையரங்கில் 24/12/2006 அன்று நடைபெற்றது.

தமிழக DGP திரு D. முகர்ஜி அவர்களும் ADGP திரு K.V.S. மூர்த்தி அவர்களும் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொண்டார்கள்.

நடிகர்கள் கமலஹாசன், சரத்குமார், பார்த் தீபன், சிரேயா, ஹரிஸ் ஜெயராஜ் உள்ளிட்ட பல திரை நட்சத்திரங்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் கலந்துகொள்வதற்காக 'வேட்டையாடு விளையாடு' திரைப்படத்தின் உருவாக்கத்தின் போதும் திரையிடலின் போதும் பல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய இங்கிலாந்தைச் சேர்ந்த திரு.மாரிமுத்து ஸ்ரீஸ்காந்தன் அவர்கள் சிறப்பாகஅழைக்கப்பட்டிருந்தார்.

திரு. மாரிமுத்து ஸ்ரீஸ்காந்தன் அவர்களுக்கும் ஜெர்மனியைச் சேர்ந்த திருமதி ரூபினி செல்வநாதன் அவர்களுக்கும் விழாமேடையில் நினைவுப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

தமிழ் சினிமாத் துறையின் வளர்ச்சிக்குப் புலம் பெயர் தமிழர்களின் பங்களிப்பை தயாரிப்பாளர் திரு மாணிக்கம் நாராயணன் அவர்கள் வெகுவாகப் புகழ்ந்து பேசினார்.

பல தடைகளையும் சவால்களையும் கடந்து ஒரு வெற்றித் திரைப்படத்தைத் தயாரித்தளித்த திரு. மாணிக்கம் நாராயணன் அவர்களின் துணிச்சலையும் விடாமுயற்சியையும் நிகழ்வில் உரையாற்றியவர்களில் பலரும் பாராட்டத் தவறவில்லை.

இசை நடனம் போன்ற கலை நிகழ்வுகளுடனும் மண்டபம் நிறைந்த விருந்தினர்களுடனும் நிகழ்வுகள் சிறப்பாக நடந்தேறின.

இந்த நிகழ்வைப் பற்றியும் ஈழத் தமிழர்களின் பங்களிப்புப் பற்றியும் தமிழக ஊடகங்கள் பெரும் முக்கியத்துவம் கொடுத்துச் செய்தி வெளியிட்டிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.



விமர்சனம்

## போக்கிரி

குரு படம் 3 மணிக்குத்தான் தொடங்க இருந்தது (கொழும்பு). ஸ்டில்களைப் பார்த்துக்கொண்டு இருந்தோம்.' மச்சான்! ஸ்டில்லப் பார்த்தா படம் நாயகன் ரேஞ்சில இருக்கு. பேசாம நல்ல அக்சன் படம் பாக்க வேற எங்கயாவது போவமா? பிறகு சி.டியில குரு படம் பார்க்கலாம் தானே?' நண்பன் வினாத்தொடுத்தான். உண்மையான நண்பன் தன் நண்பனின் வேண்டுதலை ஏற்றுக்கொள்வான் அல்லவா! ஆகவே நானும் அதற்கு உடன்பட்டேன்.

பின்பு நாம் கதைத்துப் பேசி முடிவானது தெஹிளை கொன்கோட்டில் போக்கிரிப்படம் பார்ப்பது என்று. விழுந்தடித்து ஓடிப்போனோம். அங்கே போக நேரமும் சரியாக இருந்தது. பல்கணி டிக்கட்டை எடுத்துக்கொண்டு ஒரு ஓரமாக யார் கண்ணிலும் படாமல் இருந்துகொண்டோம்.

வழமைபோல சில விளம்பரங்களின் பின்பு திரைப்படம் ஆரம்பமானது. இரசிகர்களின் விசில் சத்தத்தினிடையே அமைதியாக நாங்கள் மட்டும் படம் பார்த்துக்கொண்டு இருந்தோம். திடீர் என்று பார்த்தால் தக்காளிப்பழம், வெங்காயம், பச்சை மிளகாய் எனப் பலவகைப்பட்ட மரக்கறிகள் காற்றிலே பறக்கின்றன. தளபதி விஜய் அதனூடே பறந்து வருகின்றார். 'வ்வீவீ.........ல்' தியட்டர் எங்கும் விசில் சத்தம். பின்பு வழமைபோல தனியாளாக நின்று பல ரவுடிகளை மடக்கி சம்காரம் செய்கிறார் விஜய்.இதன் பின்பு ஒரு குத்துப்பாட்டு என்று படம் சராசரியாகப் போகின்றது. அவ்வப்போது அலிபாய் (பிரகாஷ் ராஜ்) ஐ பயங்கரப் பிண்ணனி மியூசிக்குடன் காட்டி பயமுறுத்துகின்றார்கள். அட... சீ... சாதாரண ரவுடிக் கதையா? நெஞ்சினிலே படம் போல இருக்குமோ என்று மனம் சலிப்பாக இருந்தது. அசினைப் பார்த்ததும் அத்தனை வெறுப்பும் புஷ் என்று பறந்து போனது. அசின் நிசமாகவே அழகாக உள்ளார். பிசினாக ஒட்டிக்கொண்டுள்ளார் என்பதை யாராலும் மறுக்கவே முடியாது (யாராவது மறுத்தால் அதை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன.). போதாத குறைக்கு வடிவேலு ஒரு பக்கம் வயிற்றைப் பதம் பார்க்கின்றார்.

கராட்டி மாஸ்டராக வரும் வடிவேலு அடிக்கும் லூட்டிகளை சொல்லி மாளாது. குறிப்பாக சுற்றும் விழிச் சுடரே பாடலுக்கு அசினுடன் கற்பனையில் ஆடும் காட்சி. இதைப் பார்க்கும் போதுதான் தெரிகின்றது சூர்யா எவ்வளவு மோசமாக டான்ஸ் ஆடியிருக்கின்றாரென்று. படம் இப்படி அசின் வடிவேலு மூலம் சூடு பிடிக்கத் தொடங்கும் போது விஜயும் தன்பாட்டுக்கு படத்திற்கு சூடேற்ற ஆரம்பிக்கின்றார். அலிபாய் அணியில் விஜயும் முக்கிய புள்ளியாகின்றார். அவரின் போக்கிரிப் பயணம் இவ்வாறு ஆரம்பமாகின்றது.

இதற்கிடையே சென்னையின் புதிய காவல் துறை ஆணையாளர் நெப்போலியன் ரவுடிகளுக்கு சாட்டையடி கொடுக்கின்றார். அத்துடன் அலிபாய்யையும் கைது செய்கின்றார். அலிபாய்யை கைது செய்து நெப்போலியன் தன் இரகசிய சிறையில் அடைத்த பின்பு, அலிபாய் (பிரகாஷராஜ்) விவேக் ரேஞ்சுக்கு நகைச்சுவை செய்கின்றார். இதைக் கொஞ்சம் தவிர்த்திருக்கலாம்.

பின்பு வழமைபோல நெப்போலியனின் மகளைக் கடத்தி அதன் மூலம் அலிபாயை அவரது கூட்டம் விடுவிக்கின்றது. அடிபட்ட புலியான அலிபாய்க்கு தன் அணியிலேயே ஒரு இரகசிய பொலீஸ் அதிகாரி இருப்பது தெரிய வருகின்றது. அது யார் என்பதை நான் சொல்லப் போவதில்லை. பின்பு அவர்கள் அந்தப் பொலீஸ் அதிகாரியையும் அவர் மகனையும் கொலை செய்கின்றனர்.

வன்முறைக் காட்சிகள் அதிகமாக உள்ளன. பாடல்களும் நன்றாக உள்ளன இவ்வாறு படம் விறுவிறு என்று செல்கின்றது. பிரபுதேவா மசாலாப் படம் என்பது எப்படி இருக்க வேண்டும் என்பதை நாடி பிடித்துப் பார்த்திருப்பாதாகத் தெரிகின்றது. அதைவிட சண்டைக் காட்சிகள் அபாரமாக உள்ளன, கமிராவும் குறிப்பாக பாடல் மற்றும் சண்டைக் காட்சிகளில் அருமையாக காட்சிகளைச் சுட்டுத் தள்ளியுள்ளது. கடைசியில் விஜய் தனியாளாக வில்லன்கள் இருக்கும் இடத்திற்குச் செல்வதுதான் ஏன் என்று புரியவில்லை.

ஏன் ஒரு பொலீஸ் அணியைக் கூட்டிக்கொண்டு சென்று ரவுடிகளை வேட்டையாடி இருக்கலாமே?. இப்படி சில குறைகளைத் தவிர போக்கிரி பொழுது போக்கிற்கேற்ற ஒரு அருமையான மசாலாத் திரைப்படம்.

*- ஜெ.மயூரேசன்*

**SATHY ESTATES LTD.**

'To Buy or Sell your Home'

'To Rent or Let your Home'

Residential Sales and Lettings.

In London Boroughs of Brent, Harrow, Ealing, Barnet, Hammersmith, Fulham & Westminster.

**We always have a large selection of houses & flats to choose from, to meet your needs!**

**Harlesden Office**
220 High Street
Harlesden, London
NW10 4SY
Tel: **020 8961 9613**
Fax: **020 8961 9614**

**Stanmore Office**
306 Honeypot Lane
Stanmore, Middx.
HA7 1LY
Tel: **020 8204 9444**
Fax: **020 8204 2666**

**Harrow Office**
117 Headstone road
Harrow, Middx.
HA1 1PG
Tel: **020 8861 1110**
Fax: **020 8861 1011**

www.sathy.com

DIAL 1st CONSTRUCTION

All types of Extensions and Building Work, Part P Approved Electrical Installation, Electrical, Central Heating, Fault Finding and Plumbing

**FREE ESTIMATES & INSURANCE CLAIM WORK**
**WORK FULLY INSURED & GUARNTEED**

We offer a complete service from INITIAL DRAWINGS to final completion and approval by your local authority to ensure complete satisfaction.

Tel: 020 8422 7166
Mob: 07958 40 2000
E-mail: dial1st@hotmail.co.uk
Web: www.dial1st.co.uk



"There is a long long way to bake a better biscuit..."

ஒவ்வொரு சிறார்களும் தனித்துவம் தானே!
அவர்தம் ஆற்றலும் தனித்துவம் தானே!

உங்கள் சிறார்களும் கல்வியில் ஓங்கவும்...
நாளைய உலகின் சவால்களை வெல்லவும்...

Give your child the Learna Advantage. Today.

- Individualised
- Interactive
- Inspiring

LEARNA because every child is unique
Computer-Based Education Centres

For your children to excel at school...
For them to meet tomorrow's challanges...

- Maths & English for KS1, KS2 & KS3
- Product of years of advanced research
- Challenging Individualised learning path
- Focus on problem solving, reading and writing
- Improve child's self-confidence and concentration skills
- Thousands of computer activities & printed worksheets
- Monthly progress tests and instant reports



Let your child have the Learna experience.
Call us or visit us on the web.

> www.learna.com <

Call 0845 094 0061

SINDU MAHAL
EVENT PLANNERS LTD
274B Barking Road, East Ham, London, E6 3BA
Tel: 020 8477 1356 Mob: 07951 418 145



SINDU MAHAL
RESTAURANT
020 8471 6226

Specialist Event Planners, Fulfills the tastes standards and cultural customs of our contemporary generation

விழாவிற்கான உணவு வகைகளையும், பலகார வகைகளையும் நிரம்பிய சுவையுடன் செய்து தருகிறோம்:

DECORATION
(All types of functions)
DJ with club style lighting, Garlands, Boquets

INVITATION CARDS
Sweet/Cake Boxes, Marquee Hire, Cutlery / Chair Hire

FOOD CATERING
(All types of foods) Cakes

நீங்கள் உங்கள் வைபவங்களை நடாத்த வேண்டும் என்றால் உடனே எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள் உங்களிற்கு தேவையான அனைத்து சேவைகளையும், தரமாகவும் மலிவாகவும் ஒரே பொதியாக வழங்கி உங்கள் நிகழ்வை சிறப்புடைய செய்வோம்

திருமணம், பூப்புனித நீராட்டு விழா, பிறந்த நாள் அரங்கேற்றம் போன்ற அனைத்து விழாக்களுக்குமான அலங்காரங்களை புதிய வடிவில் செய்து தரப்படும்

50 இருக்கைகள் கொண்ட Party Hall உங்கள் நிகழ்வுகளிற்கு தகுந்தாற்போல் சோடனை செய்து தயார்படுத்தி தரப்படும்
100 இடியாப்பம் £8 மட்டுமே!

*Our Services:*

Make- UP | Catering | Birthday Cakes
Rich cakes | Sweet boxes
Ice sculptures | Chocolate fountain hire
Drinks fountain | Fruit sculptures
Pineapple tree
Flower arrangement | Bouquets
Garlands (fresh flower)
Photography & Videography
DJ | Merla katcheries
Arrangement of priest | Staging
Marquee hire | Cutlery hire
Linen hireTable hire
(including banqueting chairs)
Chair hire | Table and chair linen hire
Service men | Limosine hire

தரமான பாகம்! தவறாத நேரம்! தரமோ நிரந்தரம்!





www.sindumahalep.co.uk
*Tel:* 020 8553 4515
*Mob:* 07951418145
*Office:* 61 Littlemoor road
Ilford, Essex IG1 2HU



Strand Motor Co
156-158 Hand Croft Road, West Croydon, Surrey CR0 3LE
"We won't leave you stranded"
எல்லா வித உதிரி பாகங்களும் சேவையும் 10%
விலைக்கழிவில் பெற்றுக்கொள்ள....
உங்கள் வாகனங்களை பழுது பார்பதற்கும் உதிரிபாகங்களை பொருத்துவதற்கும் தக்கமுறையில்
பேணுவதற்கும் எமது சேவையினை உங்களுக்கு ஏற்றவாறு வழங்குவதில் திருப்தியடைகின்றோம்.
Specialists for
Germany / France / Italian / Japanese Cars and all makes welcome
Visit Our Garage for:
MOT - Appoinment or While you wait (approx. 1hour)
Servicing - Discounted Prices, call now for a quotation
Free Body Work Estimate
Free Collection and Delivery from your home or your business address
Free Courtesy Cars (Subject to availablity)
Free lift to a local destination
Free wash and hoover
Lease and Warranty Vehicles Welcome
நீங்கள் காத்திருக்கும்போதே
உங்கள் வாகனத்தை MOT
செய்து கொள்ள தொடர்பு
கொள்ளுங்கள்...
Opening Hours:
Mon - Fri 8am - 6.30pm | Saturday 9am - 2pm
Fax: 020 8686 0667
Email: Contact@Strandmotorco.co.uk | Web: www.strandmotorco.co.uk
Call to book an appoinment Tel: 020 8686 0868